

தசாவதாரங்கள்

—52, 53-ம் பக்கங்கள் பார்க்க

# ஆர்யமத

# உபாக்யானம்

## இரண்டாம் பாகம்

54-இனிய கதைகள் அடங்கியது

இஃது

திருநெல்வேலி ம-ா-ா-ஸ்ரீ

ஏ கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களால்

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHAIYAR LIBRARY
THIRUVANMIYUR, MADRAS-41

இயற்றப்பட்டு

கனம் ஸ்ரீ டி. வி. சேஷகிரி அய்யர், பி. ஏ., பி. எல்.

அவர்கள் முகவுரையுடன் கூடியது

ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி,

மயிலாப்பூர், மதராஸ்

காபிரைட்] விலை அணா 6

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
9130 / (7444)

MADRAS: G. C. LOGANADHAM BROS.
THE GUARDIAN PRESS, MOUNT ROAD

இல்லை. நம் நாட்டு தீரர்களை ஒழுங்குபடுத்திய நோக்கங்களை யும், போராவல்களையும் பற்றிய ஆழ்ந்த ஞானம், இளமைப் பருவத்திலேயே நமது சிறுவர்களுக்கு உண்டாக்கிவிடவேண் டும் என்ற கருத்துடையவை ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள் முயற்சிகள். விவாதத்திற்கு இடமளிப்பவைகளை அணு காது நம் சிறுவர்களுக்கு மதம், நன்னடக்கைக் கோட்பாடு முதலி யவைகளைக் கற்பிக்க உபயோகப்படுவனவாகிய நமது புராணங் களுள்ளிருக்கும் விஷய விசித்திரங்களை அவரால் தொகுக்கப் பட்ட கதைகள் நன்கு வெளிப்படுத்துகின்றன. ஹிந்துக்களுள் விவாதத்திற்கு இடம் தாராது மதவிஷயம் போதிக்கமுடியாது என்ற உறுதிமொழி ஆதாரமற்றது என்று எனக்குத் தோன் றிக்கொண்டே இருக்கும். அந்த உறுதிமொழிக்கு இப்புத்தகமே முடிவான கண்டனம்.

கதைகள் நுட்பப் பகுத்தறிவுடன் தொகுக்கப்பட்டுள்ளன என்பதைக்காண எனக்கு ஸந்தோஷம் உண்டாகிறது. கதைகள் எழுதுவதில் கல்விச்செருக்கு வெளிவாராமல், சிறுவர்களுக்கும், அறியாதவர்களுக்கும் நேராகவும், மிகுந்த ஊக்கமாகவும் மன தில் பதியும்படி அவைகள் அமைந்துள்ளன. தம் வாழ்க்கையின் பிற்பாகத்தை ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள், நம் நாட்டிற்கு உள்ளபடி உழைப்பதில் செலவிடுகின்றனர் என் பதில் ஸந்தேஹமே இல்லை.

டி. வி. சேஷகிரி அய்யர்.

# FOREWORD

(ORIGINAL.)

I was asked with some persistence to say a foreword to this useful publication. This compliment is probably due to the impression that I have been insisting on national virtues and ideals forming the basis of progress in this country. The book before me justifies my argument that our literature contains materials which ought to furnish the ground work for the formation of sound character. In part I, Mr. Krishnaswami Aiyar, dealt with stories of a simpler complexion than in the present volume. In this book three subjects are treated : (1) Fruits of good and of evil; (2) Necessity for a religious life ; and (3) Anecdotes concerning the three great Founders of Hindu Religious Philosophy. *The stories are absolutely unsectarian and their selection is unexceptionable.* Very recently a Committee of which I was a member had to consider the question of imparting religious and moral instruction in our Schools and Colleges. It was pressed upon the Committee that there are no suitable text-books for the purpose. So far as the Tamil-knowing population is concerned, there is not much room for this complaint. Mr. Krishnaswami Aiyar's efforts are calculated to give our boys in their

most impressionable period of life a good knowledge of the aims and ambitions which guided our national heroes. The stories colleced by him reveal the wealth of material there is in our Puranic literature which can serve to impart religious and moral instruction to our children without trenching upon debatable ground. I have always felt that it is a baseless assertion which says that non-polemical religious instruction is impossible among Hindus. This book is a complete refutation of such a theory.

*I am glad to find to find that considerable discrimination has been shown in the selection of stories. There is no pedantry in the narration.* They are such as will appeal to young minds with directness and force. Mr. Krishnaswami Aiyar is spending the evening of his life in real service to the country.

EGMORE,
*2nd November,* 1912. T. V. SESHAGIRI AIYAR.

பக்கம்

8. * நன்மை கஷ்டம் விளைத்தது (1)
காலவர் குருதக்ஷிணை கொடுக்க பட்டபாடுகள் 15

9. * நன்மை கஷ்டம் விளைத்தது (2)
உத்தங்கர் குருதக்ஷிணை கொடுக்க பட்டபாடுகள் 17

10. * ஆபத் தர்ம ரஹஸ்யம்
உஷஸ்தீ உபாக்யானம் ... 19

11. * தர்ம ஸங்கடம்
அர்ஜுனன் தன் சபதம் நிறைவேற்றியது ... 20

12. * மௌனத்தின் சிறப்பு
மூன்று ரிஷிகள் ஸ்வர்க்கம் போன கதை ... 22

13. * தர்மம் அதர்மமானது
கௌசிக ப்ராஹ்மணன் உண்மை உரைத்து நரகில் விழுந்தது ... 23

14. * அதர்மம் தர்மமானது
வேடன் ஹிம்ஸை செய்து ஸ்வர்க்கம் பெற்றது 25

15. * பிடிவாதத்தால் நன்மை விளைதல்
விச்வாமித்ரர் ப்ராஹ்மண்யம் பெற்றது ... 26

16. * வீண் பிடிவாதம் ஆகாது
மதங்கர் ப்ராஹ்மண்யம் பெற முடியாது விட்ட கதை ... 28

## V. மத விஷயம்

17 * ஸ்வதர்ம அனுஷ்டானம் (1)
கௌசிகன் கொக்கு எரித்தது,
தர்மவ்யாதோபாக்யானம் ... 30

பக்கம்.

18. † ஸ்வதர்ம அநுஷ்டானம் (2)
‡ அர்ஜுனன் கீதோபதேசம் பெற்றது ... 32

19. * ஆச்ரமச் சிறப்பு
ஸன்யாஸி உலக விஷயத்தை ஒதுக்கியதும், புறுக்கள் அதிதி பூஜை செய்ததும் ... 34

20. * ஸமத்ருஷ்டி
ரந்திதேவர் பரோபகாரம் ... 37

21. * குருபக்தி விசேஷம்
ஏகலவ்யன் கதை ... 39

22. * சிரத்தை
வால்மீகர் கதை ... 41

23. † ஈச்வரன் ஸர்வ வ்யாபி (1)
ப்ரஹ்லாத சரித்திரம் ... 43

24. † ஈச்வரன் ஸர்வ வ்யாபி (2)
‡ மார்க்கண்டேய சரித்திரம் ... 44

25. * ஈச்வரன் ஸர்வ சக்திமான் (1)
‡ க்ருஷ்ணன தூது ... 46

26. † ஈச்வரன் ஸர்வ சக்திமான் (2)
‡ ப்ரஹ்லாத சரித்திரம் ... 47

27. † ஈச்வரன் ஸர்வ சக்திமான் (3)
பரமசிவன் ஆலாஹலம் உண்டது ... 48

28. * ஈச்வரன் ஸர்வஞ்ஞர் (1)
‡ கஜேந்த்ர மோக்ஷம் ... 49

29. * ஈச்வரன் ஸர்வஞ்ஞர் (2)
‡ கிராதார்ஜுனீயம் ... 50

பக்கம்

30. † அவதாரங்கள்
‡ தசாவதாரச் சுருக்கம் ... 51

31. * மூர்த்தி த்வேஷம் கூடாது
தக்ஷயாகம், ஹிரண்யன் கதை, ராவணன் கதை 54

32. * நாம ஸங்கீர்த்தனம்
அஜாமிள உபாக்யானம் ... 57

33. * மானஸ பூஜையின் சிறப்பு
க்ருஷ்ணார்ஜுன கைலாஸ யாத்திரை ... 59

34. * பகவத் தர்சன விசேஷம்
த்ருவ சரித்திரம் ... 61

35. * மனதின் சஞ்சலம்
மனக்குரங்கு கதை ... 63

36. * தேஹ தத்வங்கள்
ரதாரதிக த்ருஷ்டாந்தம் ... 64

37. * ஜீவனும் ஈச்வரனும்
இரண்டு பக்ஷி த்ருஷ்டாந்தம் ... 66

38. * லோகத்தின் ஸ்வரூபம்
விதுரர் த்ருதராஷ்டிரனை தேற்றிய உபாக்யானம் 67

39. * துக்கத்தின் ஸ்வரூபம்
அபிமன்யுவதகாலத்தில் அர்ஜுனன் துக்கித்தது 69

40. * துக்கம் நீங்கும் விதம்
ஸ்ரீராமர் ப்ரஹ்ம தேவரால் தெளிந்தது ... 70

41. † ஆத்மா அழிவற்றது
நாசிகேதோபாக்யானம் ... 72

42. * கர்மத்துக்குத் தகுந்தபடி ஜன்மம்
ஜடபரதர் சரித்திரம் ... 74

பக்கம்.

43. * வேதம் ஆத்மாவைக் காட்டும் விதம்
ராமர் அத்ரி ஆச்ரமம் சென்றது ... 76

44. * ஸன்யாஸ லக்ஷணம்
ஜனகஸுலபா ஸம்வாதம் ... 77

45. * ப்ரஹ்மஞான ஸாதனம் (1)
சகடரைக்வர் கதை ... 79

46. * ப்ரஹ்மஞான ஸாதனம் (2)
ஸத்யகாமன் கதை ... 80

47. * ப்ரஹ்மஞான ஸாதனம் (3)
நாரத ஸனத்குமார ஸம்வாதம் ... 82

48. * மஹான்களின் நிலை
ஜடபாதர் சரித்திரம் ... 83

49. * கர்மயோகம்
‡ பீஷ்மர் சரித்திரம் ... 85

50. * பக்தியோகம்
† த்ரௌபதி, ஹனுமார் சரித்திரங்கள் ‡ ... 89

51. * ஞானயோகம்
விதுரர் சரித்திரம் ... 91

## VI. ஆசார்யர்கள் சரிதை

52. * ஸ்ரீமத் சங்கராசாரியர் ‡ ... 97

53. * ஸ்ரீமத் ராமானுஜாசாரியர் ‡ ... 104

54. * ஸ்ரீ மத்வாசாரியர் ‡ ... 114

# சித்திரப்படங்கள் அட்டவணை


| சித்திரப்படங்கள் | | நோக்கும் பக்கம் |
|---|---|---|
| 1. | தசாவதாரங்கள் | முகப்புப் படம். |
| 2. | வருணன் சரணாகதி ... | 1 |
| 3. | கிராதா பில்லி ... | 16 |
| 4. | கிருஷ்ணன் தூது ... | 17 |
| 5. | பீஷ்மர் உபதேசம் ... | 40 |
| 6. | நரஸிம்ம ஸ்வாமி ... | 41 |
| 7. | ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதை உபதேசம்... | 64 |
| 8. | கஜேந்திர மோக்ஷம் ... | 65 |
| 9. | திரௌபதி மான ஸம்ரக்ஷணம் ... | 80 |
| 10. | ஹநுமார் கடலைத் தாண்டுதல் ... | 81 |
| 11. | மார்க்கண்டேயர் ... | 96 |
| 12. | ஸ்ரீமத் சங்கராசாரியர் ... | 97 |
| 13. | ஸ்ரீமத் ராமானுஜாசாரியர் ... | 112 |
| 14. | ஸ்ரீ மத்வாசாரியர் ... | 113 |



ஆர்யமத உபாக்யானம் (முதல் பாகம்)

**54-சிறந்த நீதிக் கதைகளும்**
**14-சித்திரப்படங்களும் கொண்டது.** } அணா 4



வருணன் சரணாகதி

—ம் பக்கம் பார்க்க

9130
C7444

# ஆர்யமத உபாக்யானம்

## இரண்டாம் பாகம்

## IV. தர்மாதர்ம விவேகம்

### 1. வ்யவஹார ரஹஸ்யம் (1)

ஸ்ரீராமர் சித்ரகூட பர்வதத்தில் கொஞ்ச நாள் வனவாஸ ஆரம்பத்தில் தங்கியிருந்தார். அப்பொழுது ஸீதையோடு ஏகாந்தமாக ஓரிடத்தில் உட்கார்ந்து ஸீதை மடியில் தலை வைத்துக்கொண்டு உறங்கத் தொடங்கினார். உடனே ஒரு கொடியவன் காக்கை ரூபமாக வந்து ஸீதையைக் கொத்தத் தொடங்கினான். வலி யதிகமாகி விட்டது. எங்கே, யசைந்தால் கணவனது தூக்கங்கலைந்து அவருக்குக் கோபம் உண்டாகுமோ என்று பயந்து ஸீதை அசையாமல் இருந்துவிட்டாள். காக்கை விடாது கொத்தவே ஸீதை தேகத்திலிருந்து ரத்தம் பெருக ஆரம் பித்தது. இது ராமர்மேல் பட, அவர் விழித்துக்கொண் டெழுந்து ஸீதையின் அலங்கோலத்தைக் கண்டார். அப் பொழுதும் விடாது கொத்திக்கொண்டிருந்த காகத்தை

கண்டு ராமர் கோபங்கொண்டு அருகேயிருந்த சிறுபுல் ஒன்றை எடுத்து ப்ரஹ்மாஸ்த்ரத்தை மந்திரித்துக் காக்கையின்மேல் விட்டுவிட்டார். ராமபாணம் காக்கையைக் கொல்லாது துரத்தத்தொடங்கியது. காக்கைமிகப் பயந்து ப்ரபஞ்சமெங்குஞ்சுற்றி எல்லாத் தேவதைகள் மூர்த்திகள் ஆகிய இவர்களிடம் சென்று சரணம் புகுந்து பார்த்தது. இந்தத் துக்கர்த்தா, ஸ்ரீராமரிடம் சரணம் புகுந்துவிடவேண்டுமே யொழிய வேறு மார்க்கமில்லை, என்று அவர்கள் காக்கையைத் தள்ளிவிட்டனர். காக்கை நிர்கதியாய் ராமரைநோக்கி ஓடிவரத் தொடங்கியது. அப்பொழுதும் ராமபாணம் காக்கையின் பின்புறமிருந்து அதை ராமரைநோக்கித் துரத்தியது. எதிரி ஓடும்போது காத்தல் ராமபாணத்தின் குணம். காக்கை ராமர் பாதத்தில் சரணம் என்று வந்து விழுந்தது. அப்பொழுது காகத்தால் துக்கமடைந்த ஸீதையும் காக்கையின் துக்கத்தைக் கண்டு இரங்கி, ஸ்ரீராமருக்குச் சிபார்சு செய்ய, ஸ்ரீராமர் அதன் ஒரு கண்ணை வாங்கிவிட்டு அதை உயிரோடு விட்டார். அதுமுதல் காக்கைகளுக்கெல்லாம் ஓர்வித சாய்ந்த பார்வை ஏற்பட்டதென்று புராணங்கள் கூறும்.

செய்தக்க வல்ல செயக்கெடும் ; செய்தக்க,
செய்யாமை யானும் கெடும்.

—ராமாயணம், ஸுந்தரகாண்டம்.

---

## 2. வ்யவஹார ரஹஸ்யம் (2)

ஸ்ரீராமர் தமக்கு ஸஹாயமாய் ஏற்பட்ட வானர ஸேனைகளுடனே தக்ஷிண ஸமுத்ரக்கரை வந்து சேர்ந்

தார். அதை யறிந்து ராவணனுக்கு நற்புத்தி கூறிய விபீஷணரும் அவனால் நிராகரிக்கப்பட்டு ராமரிடம் வந்து சரண மடைந்தார். பின்னர், கடலை எவ்வாறு கடப்ப தென்றவக்கம் ஸ்ரீராமருக்கு வந்துவிட்டது. அப்பொழுது ஸமுத்ர ராஜனாகிய வருணனை அழைத்து, வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாமென்று எல்லோரும் தீர்மானித்த னர். தேவதைகளை, ப்ரத்யக்ஷமாகும்படி செய்யப் பொது வாக அனுஷ்டிக்கப்படும் வ்ரதங்களை ஸ்ரீராமர் அனுஷ்டிக்கத் தொடங்கினர். ஸமுத்ரக் கரையில் தர்ப்பை களைப் பரப்பி மௌனமாக ஆகார மொன்றுமின்றி வருணனைத் தியானித்துக்கொண்டே அதில் ஸ்ரீராமர் சயனம் செய்தார். வருணன் இவர் தவத்துக்கு மெச்சி, திருப்தியடைந்து ப்ரத்யக்ஷமாகும் வரையில் அவ்வாறு இருப்பதாகத் தீர்மானித்து விட்டார். வேண்டிய காலம் வரையில் அவ்வாறே ஸ்ரீராமர் இருந்து பார்த்தார். வருணன் ப்ரத்யக்ஷமாகவில்லை. உடனே கோபங்கொண்டு ஆவேசத்தோடு எழுந்து தன் வ்ரதத்தை ஸமுத்ர ராஜன் அவமதித்ததால் அவன் இருப்பிடமாகிய ஸமுத்ரம் முழுமையும் வற்ற அடிப்பதற்காக முயன்று ஆக்னேயாஸ்த்ரத்தை மந்திரித்து விட்டுவிட்டார். ஸமுத்ர முழுவதும் கொந்தளித்துக் கொதிக்கத் தொடங்கியது. உள்ளிருந்த ஜீவ ஜந்துக்களெல்லாம் தத்தளித்தன. வருணன் கதியும் அதோ கதியாய் விட்டது. தன் னிருப்பிடத்தில் தரித்துநிற்கமுடியாமல் தத்தளித்து மிகப் பயந்து "ராமா சரணம்" என்று கதறிக்கொண்டே தன் தேவிமார்களால் சூழப்பட்டு ஓடிவந்தான். மிகுந்த கோபத்தை ராமர் அடைந்திருந்தும் இவ்வாறு வருணன்

வருவதைக் கண்டு மனமிரங்கி, அவனுக்கு அபயப்ரதானம் செய்து காத்தருளினார். பின்னர் அவனது ஏற்பாட்டின் படியே ஸமுத்ரத்தின்குறுக்கே அணையிடத்தொடங்கினார். ஆகையால், ஒருவன் அவசியமான வேளையில் கோபத்தைக்காட்டாவிடில், அவனை எவனும் மதிக்கமாட்டான். கோபம் சண்டாளமாயினும், வேண்டிய ஸமயங்களில் அதை மேற்கொண்டு அளவுக்கு மிஞ்சாமல் அதைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி.

—ராமாயணம், யுத்தகாண்டம்.

---

## 3. அதிக ஆவல் கூடாது

பாரதயுத்தத்தில் பதினேழாம் நாள் ஸுமார் இருபது நாழிகைக்குத், தர்மபுத்ரர் கர்ணனால் முறியடிக்கப்பட்டு அவமானம் பொறுக்கமுடியாது படைவீடு சென்றார். அங்குப் போனதும், மேலே பட்டிருந்த காயங்களின் மிகுதியாலும் வெட்கத்தின் அதிகத்தாலும் தலை தூக்க முடியாது ஒரு படுக்கையில் படுத்துவிட்டார். அப்பொழுது அர்ஜுனன் அன்று கர்ணனைக் கொல்வதாகச் செய்திருந்த சபதம் அவருக்கு ஞாபகம் வந்தது. கர்ணன் இறந்தால்தான் தனக்கு ஏற்பட்டிருந்த அவமானம் நீங்கி மனம் சாந்தம் அடையும் என்று அவருக்குத் தோற்றியது. நாழிகை 25-க்கு மேல் ஆய்விட்டபடியால் அர்ஜுனன் தன் சபதப்படி நடத்தியிருப்பான் என்ற எண்ணம் அதிகரித்தது. உடனே அர்ஜுனன் எப்பொழுது தம்மிடம் வந்து கர்ணனைக் கொன்றுவிட்ட ஸங்கதியைச் சொல்லப்போகிறான் என்ற ஆவல் வா

வர அதிகமாயிற்று. 'இப்பொழுது ஒருவேளை அர்ஜுனன் ஸந்தோஷத்தோடு வந்துகொண்டிருப்பான், இன்னும் கொஞ்சம் நாழிகையில் நம்மிடம் வந்து சேருவான்' என்று மிகுந்த ஆவலுடன் அர்ஜுனன் வரவை அவர் எதிர்பார்த்திருந்தார். இதனால் ஒருநாழிகை போவது ஒரு யுகமாகத் தோன்ற அவர் மனம் பதைத்தது.

இங்கு இப்படியிருக்க, யுத்தகளத்தில் தர்மபுத்ரர் அடிபட்டு ஏதோ திடீரென்று ஓடிவிட்டார் என்ற ஸங்கதி பரவி அர்ஜுனன் காதில் விழுந்தது. நாழிகை ஆய் விட்டது. எப்படியாவது கர்ணனைச் சீக்கிரம் கொல்லவேண்டும் என்று மிகுந்த பரபரப்புடன் அர்ஜுனன் வந்து கொண்டிருந்தான். இந்த ஸங்கதி கேட்டதும், தர்மபுத்ரர் கதி என்னவாயிற்றோ என்ற ஏக்கம் அர்ஜுனனுக்கு வந்துவிட்டது. உடனே படைவீட்டிற்குத் தேரைச் செலுத்தும்படி அவன் பகவானை வேண்டிக்கொண்டான்.

படைவீடு சென்று, அர்ஜுனன் தர்மபுத்ரர் முன் நின்றான். தர்மபுத்ரர் தாம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதற்கேற்ப "உன்னைப்போல் மகாவீரன் உண்டா? கர்ணனைக்கொன்று என்னைக் காத்தாயே! உனக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்" என்று பல வாறாக அவனைப் புகழ்ந்து பேசத் தொடங்கினார். அப் பொழுது அர்ஜுனன் மஹாவிநயத்துடன் தான் வந்த காரணத்தைக் கூறி "உங்கள் நிலை எப்படி யிருக்கிறது? என்று பார்த்துவிட்டுப்போக வந்தேன். கர்ணனைக் கொல்லவேண்டும் என்று ஆவல்கொண்டு வருகையில் உமது ஸங்கதி கேள்விப்பட்டு மேல் ஒன்றும் செய்யத் தோற்றவில்லை. ஆதலால் மன்னித்து எனக்கு விடை

கொடுத்தால் இதோ கர்ணனைக் கொன்றுவிட்டுத் திரும்பு கிறேன்" என்று விண்ணப்பம்செய்துகொண்டான். உடனே தர்மபுத்ரருக்குக் கோபம் வந்துவிட்டது. "நான் தடி போல் அவமானத்தோடு ஸுகமாய் இருக்கிறேன்! என்னை என்ன பார்வை? உன் கார்யத்தை முடித்துக் கொண்டல்லவோ நீ இங்கு வரவேண்டும். நீ என்ன வீரன் —உன் காண்டீவம் என்ன காண்டீவம்—அதை வேறு எவனிடத்தில் கொடுத்தாலும் கர்ணனை இதற்குள் கொன்றிருப்பான். நீ என்ன பேடிதானே" என்று பலவாறாக அவனை இகழ்ந்து பேசினார். காண்டீவத்தைப் பழித்ததும் வந்துவிட்டது அர்ஜுனனுக்குக் கோபம். தர்மபுத்ரரைக் கொன்றுவிடுவேன் என்று கத்தியை உருவிவிட்டான். அப்பொழுது பகவான் சொன்ன புத்திமதியின்பேரில் தர்ம புத்ரரை ஏகவசனத்தில் பேசி அவமதித்தான். இதற்குள் தர்மபுத்ரர் கோபம் அடங்கியது. 'மிகுந்த ஆவலுடன் உலக விஷயங்களை எதிர்பார்த்ததால் வந்த பிரமாதம், இந்தக் கோபம். அதற்கு அர்ஜுனன் அவமதிப்புத் தகுந்த மருந்து' என்று மனம் தேறியிருந்தார். அர்ஜுனன் தான் தமயன் விஷயத்தில் செய்த அவமரியாதையை எண்ணி எண்ணிப் பரிதபித்துக்கொண்டு, கர்ணனைக் கொல்லச் சென்றான்.

மிகுந்த ஆவலுடன் ஒன்றையும் எதிர்பார்க்காதே.
நிராசை பரம ஸுகம்.

—மஹாபாரதம், கர்ணபர்வம்.

# 4. பொதுநன்மை விஷயத்திய எச்சரிக்கை

ராமர் ராஜ்யம் ஆண்டுவந்த காலத்தில் ஸர்வார்த்த ஸித்தன் என்ற ஒரு ஏழை ப்ராஹ்மணன் இருந்தான். அவன் அயோத்தி முழுவதும் காலைநேரங்களில் பிச்சை யெடுத்து நடுப்பகலில் அதை வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் காலங்கழித்து வந்தான். இப்படி அவன் செய்து வந்த நாளில் ஒருநாள் ஊரெங்கும் சுற்றி அலைந்தான்; நேரமோ பதினைந்து நாழிகை ஆய்விட்டது. கொஞ்சங்கூட பிச்சை யகப்படவில்லை. வெயிலில் அலைந்து களைத்து என்னசெய்வதென்று தெரியாது அவன் ஒரு தெருப்பக்கம் திரும்பினன். முதல் வீட்டில் எச்சில் இலை விழ, அதை ஒரு நாய் மிகுந்த ஆவலுடன் புசிக்கத் தொடங்கியது. ஸர்வார்த்தஸித்தன் துக்கம் அதிகரிக்க, அப்பொழுது அவனுக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. கையிலிருந்த தடியால் அந்த நாயின் மண்டையில் இரண்டு மூன்றடி அடித்துவிட்டான்.

அடிபட்ட நாய் மிகவும் வருந்தி அழுதுகொண்டு ராமர் ஸபை வாயிலில் வந்து நின்றது. அந்த ஸமயத்தில் வழக்குத்தீர்க்க எண்ணங்கொண்டவர்கள் யாராவது வந்திருக்கிறார்களா என்று பார்க்க லக்ஷ்மணர் அங்குவந்து சேர்ந்தார். அந்த நாயையும் ப்ராஹ்மணனையும் கண்டு, இருவரையும் ஸ்ரீராமர்முன்பு கொண்டுவந்து நிறுத்தினர். உடனே நாய் தனது வழக்கை எடுத்துரைத்து "நான் ஒரு அபகாரம் அல்லது அபராதம் செய்யாதிருக்கையில் என்னை அகாரணமாய் இந்த ஸர்வார்த்தஸித்தன் அடித்துவிட்டான்" என்று முறையிட்டது. அப்பொழுது

ஸ்ரீராமர் ப்ராஹ்மணனை விசாரிக்க, "எனக்கு ஒன்றும் அகப்படாமல் போக நடுப்பகல் வரையிலும் அலைந்து பசியால் வருந்திக் களைத்திருக்கும்போது நாயின் உத்ஸாகத்தைக்கண்டு என் மனம் பொறுக்கவில்லை" என்று தன் குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டான். தகுந்த தண்டனை விதிக்க முடியாமல் ஸபையோர் தத்தளிக்க, அவர்களை நோக்கி அந்த நாய் "இந்த ப்ராஹ்மணனுக்கு கௌலபத்யம் (ப்லரைக் காப்பாற்றும் நிலை) கொடுங்கள். அதுதான் இவனுக்குத் தகுந்த தண்டனை" என்றது.

இம்மாதிரி தண்டனை விதிக்க வேண்டிய காரணம் என்னவென்று கேட்க, நாய் சொல்லுகிறது. 'நான் முன் ஜன்மத்தில் ஒரு குலபதியாக (கௌலபத்யம் கோயில் மணியம் முதலிய வேலைகள்) இருந்தேன். அப்பொழுது பொது விஷயத்துக்காக இருந்த தனம் வஸ்து முதலியவைகள் என்னை யறியாமல் என் ஸொந்த விஷயத்துக்கு உபயோகப்படும்படி நேரிட, எனக்குப் பாபம் வந்தது. அந்தப் பாபத்தால் இந்த ஜன்மம் எடுத்தேன். ஆதலால் கௌலபத்யம் என்பது எவ்வளவு சிறப்பான நிலையாயினும் அஜாக்ரதையா யிருப்பவனுக்கு மிகுந்த பாபத்தை உண்டாக்கும். ஆதலால் இந்தப் பொறுமை நிறைந்த ஸர்வார்த்தஸித்தனுக்கு என் கதி வருமென்பதற்கு ஸந்தேஹமே இல்லை. ஆதலால்தான் இத்தண்டனை விதித்தேன்" என்றது.

**பொதுநன்மை விஷயங்களில் அஜாக்ரதை கூடாது.**

**—ராமாயணம், உத்தரகாண்டம்**

# 5. ஜாதிதர்மம்

ஹிமயமலைச் சாரலில் மஹாத்மாக்களில் சிலர் தபஸ் முதலியன செய்துகொண்டிருந்தனர். அங்கு ஸத்வ்ருத்தியுள்ள சூத்ரன் ஒருவன் பெரியோர்களுக்கு ஸதா பணிவிடைசெய்து மேன்மையடையவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தான். அங்கிருந்து கொஞ்சநாளானதும் ப்ராஹ்மணர்கள் தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டும் என்ற துர் எண்ணம் அவனுக்கு வந்தது. அங்குள்ளவர்களை நோக்கி தனக்குத் தர்மானுஷ்டான மார்க்கங்களை நன்றாக எடுத்துரைக்க வேண்டும் என்று அந்த சூத்ரன் கேட்டான். அவர்கள் அவ்வாறு செய்ய சாஸ்த்ரங்கள் தமக்கு இடங்கொடுக்கவில்லை என்று சொல்லி மறுத்துவிட்டனர். உடனே அந்த சூத்ரன் வேறொரு காடுசென்று, தான் பார்த்தவரையில் தனக்குத் தெரிந்ததாயுள்ள ப்ராஹ்மண தர்ம அனுஷ்டானங்களைச் செய்யத் தொடங்கினன். இவ்வாறு கொஞ்ச காலம் ஆனதும், இவன் இருப்பிடத்திற்கு ஒரு ரிஷி வந்தார். இவன் தன் ஜாதி இன்னதென்பதை அவருக்குக் கூறாது, தனக்கு ச்ராத்தம் செய்துவைக்கும்படி அவரை வேண்டிக்கொண்டான். அவர் அறியாது செய்து வைத்துவிட்டார். மறுஜன்மத்தில் சூத்ரன், ஓர் அரசனாகவும், ரிஷி அவன் கீழுள்ள ஒரு புரோஹிதனாகவும் பிறந்தனர். அரசனுக்குப் பூர்வஜன்ம ஞாபகம் வந்தது. அப்பொழுது புரோஹிதரை நோக்கிச் சிரித்தான். இதன் ரஹஸ்யத்தை வெளியிட வேண்டுமென்று புரோஹிதர் அரசனைக் கேட்டார். அதற்கு அரசன் "நீர் பூர்வ ஜன்மத்தில் ஒரு ரிஷி, நான் ஒரு சூத்ரன். என் நிலை இன்னது

என்று விசாரித்தறியாமல், நான் கேட்டவுடனே எனக்கு மேல்ஜாதியாரது கர்மானுஷ்டானத்தைக் கற்றுக்கொடுத்தீர். உமது அனுக்ரஹத்தால் எனக்கு மேலான ராஜ ஜன்மமும், எனக்கு அனுக்ரஹித்ததனால் உமக்குத் தாழ்ந்த தான புரோஹித ஜன்மமும் கிடைத்தது' என்று கூறினான். பின்னர், அரசன் புரோகிதருக்கு வேண்டிய அளவு தனம் கொடுக்க, அவர் தானதர்மாதிகள் செய்து சுத்தராகி மிகுந்த கஷ்டப்பட்டு முந்தின நிலையை யடைந்தார்.

மேல்ஜாதி விஷயங்களைக் கீழ்ஜாதியானுக்குக் கற்றுக்கொடுத்தால், கீழ் ஜாதியான் மேன்மை யடைவான். மேல் ஜாதியான், தாழ்மை அடைவான்.

—மஹாபாரதம், அனுசாஸனபர்வம்.

## 6. யாகமும் தானமும்

தர்மபுத்ரர் அச்வமேத யாகம் செய்தார். அதில் யாக விமரிசைகள் ப்ராஹ்மண ஆராதனங்கள் முதலிய எல்லா விஷயங்களும் மிகச் சிறப்பாக நடந்தேறின. யாகம் முடிந்து எல்லோரும் ராஜஸபையுள் பிரவேசித்து இளைப்பாறிக்கொண்டிருக்கையில் அவர்கள் முன் ஒரு கீரிப்பிள்ளை ஓடிவந்தது. அதன் தேகத்தில் பாதி பொன்னிறமாக இருந்தது. வந்ததும், அது யாக சேஷத்தின் மேலெல்லாம் புரண்டு கொஞ்ச நாழிகை கழித்தெழுந்து, "இந்த யாகம் என்ன யாகம்! மிகச் சிறந்ததென்று கொண்டாடுகிறார்களே யொழிய இதில் மிகச் சிறந்ததொன்றையும் காணோம். அப்படி ஏதாகிலும் ஒருவிதச் சிறப்பு இருந்தால் என் தேகத்தின் மறுபாதி பொன்னிறமா யிருக்க

வேண்டுமே" என்று பலவாறாக அந்த யாகத்தை இகழ்ந்து பேசியது. "முதற்பாதி பொன்னிறமானதற்குக் காரணம் என்ன" என்று அங்கிருந்தோர் வினவ கீரிப் பிள்ளை கூறலுற்றது.

குருக்ஷேத்ரத்தில் ஒரு ப்ராஹ்மணக் குடும்பத்தார் வஸித்துக்கொண் டிருந்தார்கள். அதில் தலைவர், அவர் பெண்சாதி, அவர் பிள்ளை, அவர் நாட்டுப்பெண் ஆகிய நால்வருமே இருந்தனர். அவர் ப்ராஹ்மண ஒழுங்குப் படி தவறாது, அனுஷ்டானாதிகளைச் செய்து, ஒழிந்த நேரத்தில் உஞ்சவ்ருத்தியை அனுஷ்டித்து வயல்வெளி முதலிய விடங்களில் சிந்தியிருக்கும் தான்ய மணிகளைப் பொறுக்கிவந்து காலக்ஷேபம் செய்வது வழக்கம். இப்படி யிருக்கையில் ஒரு பஞ்சம் வர, அதில் ஒருவாரம் வரை யில் அவருக்கு ஒரு தான்யமும் அகப்படவில்லை. முடி வில், ஏதோ கொஞ்சம் தினை யகப்பட, அதைக் கொண்டு வந்தார். யஜமானியம்மாள் அதை மாவாக்கி,நான்கு பங்காகப் பிரித்து ஒவ்வொன்றை ஒவ்வொருவருக்குப் பிரித்து வைத்தாள். நான்கு பெயர்களும் உண்ண உட்காருகை யில், ஒரு அதிதி ஓடோடியும் வந்து தமக்குப் பசிதாங்க முடியவில்லை யென்று முறையிட்டார். உடனே ப்ராஹ்மணர் தமது பாகத்தை அவருக்குத் தயங்காது கொடுத்து விட்டார். அதையுண்டு பசியாறாது அதிதி அவர்களை நோக்கி "இந்த மாவு எனக்கு எந்த மூலை? பசிதீர்க்க வந்தவிடத்தில் கொஞ்ச உணவைக் கொடுத்துப் பசியைக் கிளப்பிவிட்டீர்களே!" என்று கதறினர். அப்பொழுது முறையே யஜமானி, பிள்ளை, நாட்டுப்பெண் எல்லோரும் தலைவர் செய்ய யத்தனித்த தர்மத்தைப் பூர்த்திசெய்ய

வேண்டியது தமது கடன் என்று கூறி ஸந்தோஷமாகவே தமது பாகங்களையும் அதிதிக்கு ஸமர்ப்பித்தனர். அதிதி அவைகளை யுண்டு தெளிந்து, அக்குடும்பத்தை வாயார வாழ்த்திச் சென்றனர். அன்றிரவு அக்குடும்பத்தவர் பசிக்கொடுமையால் தேகம் நீங்கிப் பரமபதம் பெற்றனர். "மறுநாட்காலையில்நான் அவ்விடத்திற்குத் தற்செயலாய்ப் போக அங்குப்புரளும்படி நேரிட்டது. அங்கு சிந்தியிருந்த சேஷமான தினைமாவின்மேல் புரள, என் தேகத்தின் ஒருபாதி பொன்னிறமாயிற்று. அம்மாதிரி சிறந்ததொரு விஷயம் எங்கேயாவது நடந்தேற, என் தேகத்தின் மற்றொரு பாதியும் பொன்னிறமாகாதா என்ற ஆவலுடன் பெரிய ஸத்கர்மங்கள் நடந்தவிடங்களிலெல்லாம் இங்கு புரண்டதுபோல் புரண்டு பார்த்தேன். ஒன்றும் பயன்படவில்லை. ஆதலால்தான் இந்த அச்வமேத யாகம் மிகச் சிறந்ததல்ல வென்று பழித்தேன்" என்று கூறி, கீரிப் பிள்ளை தன் அபிப்ராயத்தை ஸ்தாபித்தது.

யாகத்தைவிடத் தானம் மிகச் சிறந்தது.
—மஹாபாரதம், அச்வமேத பர்வம்.

---

## 7. தவம் வீணானது

முன் ஒரு காலத்தில் விதாபப தேசத்தில் சுவேதன் என்றோர் அரசன் இருந்தான். அவன் தன் தம்பிமார்களுக்கு ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு ஒரு நிர்ஜனமான காட்டை அடைந்து அங்கு ஒரு குளக்கரையில் பர்ணசாலை கட்டிக்கொண்டு தவம் செய்யத் தொடங்கினான். இப்படி இவன் செய்துவருகையில் இவன் தேகம் நழுவும்

காலம் வர இவன் இறந்தான். உடனே அங்கு வந்த விமானத்தில் ஏறிக்கொண்டு இந்திரலோகம்போக,இவனுக்குப் பசியும் தாகமும் அதிகரித்தன. ப்ரஹ்மாவிடம் போய் இதன் காரணத்தை விசாரிக்க, அவர் இவனை நோக்கி "அப்பா நீ தவம் செய்த காலத்தில் உனது தேகத்தை மாத்திரம் போஷித்து வந்தாயே யொழிய, தர்ம சிந்தனையோடிருக்கவில்லை. ஆதலால் இந்தக் கஷ்டம் உனக்கு வந்தது. இந்தக் கொடிய பசி தீரும்வரை, நீ உனது பிணத்தை நாள்தோறும் தவருது தின்னவேண்டும். ஒவ்வொரு நாட் காலையிலும் உன் பிணம் உன் பர்ணசாலைக் கருகாமையிலிருக்கும் குளத்தில் மிதக்கும். போகலாம்" என்றுர். சுவேதனுக்கு மிகுந்த துக்கம் வந்துவிட்டது. "ராமேசுவரம் போயும் சனீச்சரன் விடவில்லை" என்ற கதையாக இவன் ப்ரஹ்மதேவனை நோக்கி "ஸ்வாமி எவ்வளவு நாள் நான் இவ்வாறு வருந்தவேண்டுவது? விமோசனம் இல்லையா?" என்று கேட்க, அதற்கு அவர் "அப்பா உன் பர்ணசாலைக்கு அகஸ்தியர் ஒருதரம் வந்து சேருவார். அவருக்கு ஓர் தானம் செய்து உன் பாபம் நீங்கி இக்கஷ்டத்தினின்றும் விடுபடுவாய்" என்று அனுக்ரஹித்தார்.

இப்படியிருக்கையில், ஒருநாள் சாயங்கால ஸமயத்தில் யாத்திரை செய்துவந்த அகஸ்தியர், தவறி இந்த வனத்திற்குள் புகுந்து சுவேதன் பர்ணசாலைக் கருகாமையில் வந்து சேர்ந்தார். குளமோ மிக ரமணீயமா யிருந்தது. ஒரு மனிதன்கூட அவர் கண்ணில் படவில்லை. பர்ணசாலையுள் புகுந்தார். அங்கும் ஒருவரையும் காணும்! ஸூர்யாஸ்தமன ஸமயமாயிருந்ததாலும், அவ்விடம் நிச்சப்தமாகத் தபஸுக்குத் தகுந்ததாயிருந்ததாலும், அக்

குளத்தில் மாலைக்கடனை முடித்துக்கொண்டு பர்ணசாலையுள் அன்றிரவு தங்கினார். விடியற்காலம் அனுஷ்டானத்திற்காக எழுந்து அவர் குளத்தைப் பார்த்தார்! அதில் பிணம் ஒன்று மிதக்கக்கண்டார். "இப்பர்ணசாலையில் தவம் புரிந்துகொண்டிருந்தவன், நாம் வருமுன் காலகதியால் குளத்துள் விழுந்து மாண்டானோ?" என்று நினைத்து நின்றார். உடனே ஆகாயத்தில் ஓர் திவ்யவிமானம் தோற்றியது. அதில் அப்ஸரஸுகளால் மரியாதை செய்யப்பட்ட ஒரு திவ்ய புருஷன் வீற்றிருந்தான். விமானம் குளக்கரை வந்ததும், மிதந்த பிணம் அவன் அருகே போனது. மிகுந்த ஆவலுடன் அவன் அதைப் புஜித்தான். "இந்தத் திவ்ய புருஷனுக்கு இந்நிலை எவ்வாறு வந்தது?" என்று பரிதபித்தார் அகஸ்தியர். அவனை அணுகி அவன் வரலாற்றை அகஸ்தியர் விசாரித்தார். அவனுக்கு அப்பொழுது ப்ரஹ்மாவின் அனுக்ரஹம் ஞாபகத்தில் வர, இந்த நிர்ஜனமான காட்டில் ஒரு நாளும் இல்லாது இன்று திடீரென்று தோன்றியவர் தன்னைக் கரையேற்ற வந்த அகஸ்தியராய்த்தானிருக்கவேண்டும் என்று மதித்தான்—"நான் பரோபகார சிந்தையே இல்லாது தபஸு செய்து இறந்தேன். இவ்வாறு செய்ததால் அடங்காப் பசிதாகம் என்னை ஸ்வர்க்கத்திலும் பிடிக்க, எந்தத் தேகத்தைப் பரோபகாரம் இன்றிக் கொழுப்பேறும்படி செய்தேனோ அதைத் தின்றே பசியாறும்படியான நிலை எனக்கு வந்தது" என்று பரிதபித்துத் தன் கழுத்திலிருந்த உயர்ந்த ஆபரணம் ஒன்றை எடுத்து, 'உங்களைக் கண்டேன்! என் பாபம் என்னை விட்டகன்றது!! இனி இக்கொடிய பசிதாகம் என்னை அணுகாது.

இந்தத் தானத்தை வாங்கிக்கொண்டு என்னை விடுவிக்க வேண்டும்" என்று மிகுந்த அன்புடன் கூறி அகஸ்திய ருக்கு மஹாவிநயத்துடன் அதைத் தானம் செய்தான். பிணம் தின்னும் கோரத்தொழில் அன்றோடு அவனை விட்டு அகன்றது. பசிதாகம் நீங்கின. அவன் ஸ்வர்க்கம் சென்று ஸுகமாக வாழ்ந்திருந்தான்.

பரோபகாரமற்ற தவம் பெரும்பாலும் வீணேயாம்.

—ராமாயணம், உத்தரகாண்டம்.

---

## 8. நன்மை கஷ்டம் விளைத்தது (1)

விச்வாமித்ரர் ப்ரஹ்மரிஷியானபின்பு, அவரிடம் காலவர் என்ற ஓர் ரிஷி, சிஷ்யராக அமர்ந்தார். இவர் வெகு காலம் அவரிடமிருந்து கல்வி கற்ற விதத்தாலும், சிச்ருஷை செய்த விதத்தாலும் அவருக்கு மிகுந்த திருப்தியை உண்டாக்க, அவர் மிகுந்த சந்தோஷத்துடன் கிரஹஸ்தாச்ரமத்தை மேற்கொள்ளும்படி காலவருக்கு உத்திரவு செய்தார். அப்பொழுது, காலவருக்குத் தகுந்த குரு தக்ஷிணை கொடுக்கவேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அதைக் குருவிடம் தெரிவித்தார். அதற்கு அவர் "அப்பா, என்னிடம் நீ இவ்வளவு காலம் நடந்து கொண்டமாதிரியே எனக்குக் குருதக்ஷிணைக்கு ஸமானம்; மேலும் நீ ஏழை, வீணுகப் பேராவல்கொண்டு வருந்தாதே. எனக்கு யாதொரு தக்ஷிணையும் வேண்டுவதில்லை" என்று பலவாறுகப் புத்தி மதிகூறி, காலவரைத் திருப்ப முயன்றார். என்ன சொல்லியும், காலவர் பிடிவாதமாய் இருந்தது கண்டு, அவர் "எனக்குத் தேகமெல்லாம் வெளுத்ததாயும், ஒரு காதுமாத்திரம்

கருத்ததாயுமுள்ள 800 குதிரைகள் வேண்டும். கொண்டு வா, பார்ப்போம்" என்று கூறிவிட்டார். உடனே, காலவர் இவைகளை ஸம்பாதித்துவரப் புறப்பட்டார். இவர் தேடிய விடங்களில் இவை அகப்படாமல்போகக்,கருடனது ஸஹாயத்தால் உலகெங்கும் சுற்றிப்பார்த்தார். மிகுந்த கஷ்டப்பட்டுச் சுற்றிவருகையில் யயாதி ராஜனிடம் வந்து சேர்ந்தார். அவன் தன்னிடம் குதிரைகள் இல்லையென்று கூறி, அவைகளை ஸம்பாதிக்கும் உபாயம் சொல்லிக் கொடுத்தான். இதன் பின்பும், காலவர் மிகுந்த கஷ்டப படவேண்டி வந்தது. என்ன செய்தும் அவருக்கு 600 குதிரைகளுக்கு மேல் அகப்படவில்லை. மேல் ஒன்றும் தோன்றாது, காலவர் திகைத்து நிற்கையில், கருடன் தோன்றி "நீர் விச்வாமித்ரர் காலிலேயே விழுந்து உமது கஷ்டத்தைச் சொல்லி 'இன்னும் 200 குதிரைகள் கிடைக்கவே இல்லை. ஆதலால் அவைகளைத் தந்துவிட்டதாகக் கொள்ள வேண்டும்' என்று மன்றாடு. வேறு வழியில்லை" என்று புத்திமதி கூறிற்று. அதன்படி காலவர் செய்து தம் கார்யத்தை ஒருவாறு முடித்தார். இவ்வளவு கஷ்டப்பட்டு காலவரிஷி குருதக்ஷிணை கொடுத்தல் என்ற ஸன்மார்க்கத்தில் நிலைபெறவேண்டி வந்தது. இவர் செய்தது நன்மையாயினும், குருமொழிக்கு விரோதமாகப்பிடிவாதம் பிடித்தமையால் இவ்வளவு துக்கத்திற்கு இவர் ஆளாகவேண்டி வந்தது.

ஸன்மார்க்கத்திலும் வீண்பிடிவாதம் ஆகாது.

--மஹாபாரதம், உத்யோக பர்வம்.



பரமசிவன் வேடரூபத்துடன் அர்ஜுனனை
அநுக்ரஹிக்க வருவது

—50-ம் பக்கம் பார்க்க



கிருஷ்ணன் துர்யோதன ஸபையில் விசுவரூப மெடுக்கும் தருணம்.

—46 ம் பக்கம் பார்க்க

# 9. நன்மை கஷ்டம் விளைத்தது (2)

முன்னொரு காலத்தில் உத்தங்கர் என்ற ஒரு ரிஷி இருந்தார். இவர், குருகுலவாஸம் செய்த காலத்து, குருவினது அக்னிகளை மிகுந்த சிரத்தையோடு பாதுகாத்து வந்தார். இவர் குரு, மற்றைய சிஷ்யர்களுக்கெல்லாம் வாஸ காலம் தீர்ந்ததும் விடை கொடுத்து தம்தம் ஊர்களுக்கு அனுப்பிவிட்டார். இவர்மேலிருந்த அன்பால் இவருக்கு மாத்திரம் உத்திரவு கொடுக்கவில்லை. குருகுலத்திலேயே வயது முதிருகிற வரையில் நாள் போவதுகூடத் தெரியாது இவர் குரு சுச்ரூஷை செய்துவந்தார். ஒருநாள் விறகு சுமந்துவந்து போடுகையில் இவர் தலைமயிர் விறகு கட்டையில் சிக்கி வேரோடு பெயர்ந்தது. இவர் தேகம் தளர்ந்து போயிருந்தமையால் இந்தநோய் பொறுக்கமாட்டாது இவர் கண்ணீர் வடித்தார். இதைப் பார்த்திருந்த குருவின்பெண், தனது கையால் கண்ணீரை யேந்த சூடு பொறுக்கமாட்டாது கீழே விட்டுவிட்டாள். இவைகளைப் பார்த்திருந்த குரு, சிஷ்யன் மனோநிலையை அறிந்து கிரகஸ்தனாக உத்தரவளித்து அவனுக்கு யௌவனம் வரும்படி செய்து தன் பெண்ணையும் விவாகம் செய்து கொடுத்தார்.

விவாகமானதும், உத்தங்கர் குருவுக்குத் தக்ஷிணை கொடுக்க யத்தனித்தார். குரு எவ்வளவு தடுத்தும் உத்தங்கர் பிடிவாதமாயிருக்கத் தன் பெண்சாதிக்கு வேண்டியதைக்கொடுத்துவிடும்படி அவர் ஏற்பாடு செய்தார். ஸௌதாஸ ராஜன் பெண்சாதி காதில் அணிந்திருந்த நாகரத்ன ஓலை, தனக்கு வேண்டுமென்று குருபத்னி கேட்க, அதற்கு

இசைந்து உத்தங்கர், காட்டில் வஸிஷ்ட சாபத்தால் மனிதரைக் கொன்று தின்று வந்த ஸௌதாஸரிடம் வந்து தம் காரியத்தை வெளியிட்டார். அவர் உத்தங்கரைக் கொல்ல யத்தனிக்கக், குருதக்ஷிணை கொடுத்துவிட்டு வருவதாகக் கூறி ஸௌதாஸரிடம் ஓர் அடையாளம் பெற்று அவர் மனைவியண்டை வந்துசேர்ந்தார். அவர் மனைவி, அடையாளத்தைக் கண்டதும் தன் ஓலையைக் கழற்றி உத்தங்கர் கையில் கொடுத்து அதை ஒருபோதும் கீழே வைக்கலாகாது என்று எச்சரிக்கை செய்தாள். இதை வாங்கிக் கொண்டு உத்தங்கர் அரசனிடம் வர, அப்பொழுது அவனுக்கு ராக்ஷஸ நிலைமாறியிருந்ததால் தன்னிடம் மறுபடி வரவேண்டியதே இல்லையென்று உத்தரவு செய்தான். போகும் வழியில் உத்தங்கருக்குப் பசி அதிகமாயிற்று. அருகில் இருந்த வில்வமரத்தில் பழம் பழுத்துத் தொங்குவதைக்கண்டு மரமேறி அவைகளைப் பறிக்க யத்தனித்தார். மடியிலிருந்த ஓலைகள் நழுவிக் கீழே விழுந்தன. உடனே கீழேயிருந்த புற்றுக்களுள் ஒன்றிலிருந்து ஒரு பாம்பு வெளிப்பட்டு அவைகளை எடுத்துக்கொண்டு மறைந்தது. உத்தங்கர் புற்றை மூன்றுநாள் வெட்டிப்பார்த்தும் அவர் முயற்சிகள் எல்லாம் வீணாயின. பின்னர், இந்திரன் ஸஹாயத்தால் பாதாளலோகம் சென்று, அங்கு ஒன்றும் செய்ய முடியாமல் தத்தளித்தார். அப்பொழுது இவர் ஆராதித்த அக்னி குதிரை ரூபமாக வந்து தன் காதில் ஊதும்படி வேண்ட, உத்தங்கர் அவ்வாறே செய்தார். உடனே நாகலோகம் எல்லாம் புகை சூழ்ந்துகொள்ள, பொறுக்கமாட்டாது நாகங்கள் உத்தங்கருக்கு ஓலைகளைக் கொண்டுவந்து கொடுத்தன. அவர் தமது குருபத்னியிடம் அவைகளைக்

கொண்டுவந்து சேர்த்தார். உத்தங்கர் ஸத்கார்யத்தில் முயன்றும் வீண் பிடிவாதத்தால் படாதபாடுகளெல்லாம் பட்டார்.

பெரியோர் வாக்குக்கு விரோதமாகச் செய்யும் நன்மை கஷ்டங்களை விளைவிக்கும்.

—மஹாபாரதம், ஆதி, அச்வமேத பர்வங்கள்.

---

## 10. ஆபத் தர்ம ரஹஸ்யம்

முன்னொரு காலத்தில் ஸாமவேத பாரங்கதரான உஷஸ்தீ என்ற ஒரு ப்ராஹ்மணர் இருந்தார். அவர், தமது சிறு பெண்சாதியுடன் யானைப்பாகர்கள் வஸித்து வந்த ஒரு கிராமத்தில் வெகுநாள் வஸித்துவந்தார். அவர் சிறப்பு ஊரெங்கும் பரவியது. அவருக்கு ஸாமவேத அர்த்தங்கள் எல்லாம் நன்ருகத் தெரிந்திருந்ததால் அவரின்றி ஒரு யாகமும் நடப்பதில்லை. அப்படி யிருக்கையில் அவர் இருந்த தேசத்தில், இடி அதிக மழை இவைகளால் ஒரு பஞ்சம் உண்டாயிற்று. அந்த ஸமயத்தில் அவர் எங்குசென்று தேடிப்பார்த்தும், அவருக்குக் கொஞ்சம்கூட உணவு கிடைக்கவே இல்லை. வேறுவழி ஒன்றும் அவருக்குத் தோன்ருததால் யானைப்பாகர் யஜமானனிடம் வந்து பிச்சை கேட்டார். அதற்கு அவன் "இந்தப் பஞ்சகாலத்தில் என்னிடத்தில் அதிகமான உணவு ஒன்றும் இல்லை. எனக்குக்கூட இந்தப் பயறுகள்தான் உணவாக இருக்கின்றன. அவைகளில் நான் தின்று மிஞ்சியதைக் கொண்டுவந்து கொடுக்கிறேன். இஷ்டமிருந்தால் வாங்கிக்கொள்ளலாம்" என்ருன். "அதையே கொடு" என்று உஷஸ்தீ கேட்டு வாங்கிக்கொண்டு கொஞ்சம்

உண்டு, மிகுதியைத் தன் பெண்சாதியிடம் கொடுத்தார். அப்பொழுது யானைப்பாகர் யஜமானன் அவரை நோக்கி "இன்னொருவர் குடித்து மிஞ்சிய தண்ணீர் இருக்கிறது. இதையும் எடுத்துக்கொள்ளுங்கள்" என்றான். "இது குடித்த மிகுதி, யான் எடுத்துக்கொள்ள மாட்டேன்" என்றார் உஷஸ்தி. அதற்கு அவன், "பயறுகள் மாத்திரம் அவ்வாறல்லவோ ?" என்று கேட்டான். அதற்கு உஷஸ்தி, "பயறுகளைத் தின்றிருந்தால் நான் உயிரிழக்க வேண்டிவரும். தண்ணீர் இல்லாதிருந்தால் அவ்வாறாகாது. மேலும் தண்ணீர் எங்கும் அகப்படும். ஆதலால் எனக்குக் குடித்த மிகுதி வேண்டாம்" என்று ஆபத்தர்ம ரஹஸ்யத்தை நிரூபணம் செய்தார்.

**ஆபத் காலங்களில் அவச்யமான பாபங்கள் பாபங்களாகா.**

—சாந்தோக்ய உபநிஷத், அத்யாயம் 1.

---

## 11. தர்ம ஸங்கடம்

பதினேழாம் நாள் பாரதப்போரில் கர்ணனைக் கொன்றுவிட்டுத்தான் அர்ஜுனன் தம்மிடம் வருவான் என்று தர்மபுத்ரர் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். தர்மபுத்ரரது க்ஷேமத்தை விசாரித்துவிட்டு பின்னர் கர்ணனைக் கொல்லலாம் என்று அப்பொழுது அர்ஜுனன் தர்மபுத்ரரிடம் வந்தான். அர்ஜுனன் வந்த விதத்தை யறிந்த தர்மபுத்ரருக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. அர்ஜுனனையும் அவன் காண்டீவத்தையும் வாய் ஓயப் பழித்துவிட்டார். அர்ஜுனன் தன் காண்டீவத்தைப் பழித்தவர்களை உயிருடன் விடுவதில்லை என்று சபதம்

செய்திருந்தான். இதை நிறைவேற்ற, தர்மபுத்ரரைக் கொல்லவேண்டும் என்று எண்ணி உடைவாளை உருவி விட்டான். பகவான் அவனைப் பார்த்து நகைத்து, 'என்ன கார்யமடா செய்யப் போகிறாய்?' என்று கேட்டார். "காண்டீவத்தைப் பழித்தவனைக் கண்டம் துண்டமாய் வெட்டி யெறிந்து என் சபதத்தை நிறைவேற்றப் போகிறேன். இதுதானே க்ஷத்திரிய தர்மம்" என்று மிகுந்த பரபரப்புடன் அர்ஜுனன் கூறினான். "காண்டீவத்தைப் பழித்தவர் உன் தமயனுச்சுதே. தமயனைக் கொல்வது தர்மமா" என்று பகவான் கேட்டார். "க்ஷத்திரியருக்குத் தம்சபதமே முக்கியம். சபதத்தைக்காப்பதே க்ஷத்ரிய தர்மம்" என்று அர்ஜுனன் யுக்தி உரைத்தான். அதற்குப்பகவான், 'இப்பொழுது உனக்கு இரண்டு தர்மங்கள் எதிர்ப்பட்டிருக்கின்றன. அவையாவன:—சபதம் காத்தல், தமையனைக் கொல்லாமை; இவைகளுள் ஒன்றைக் கடைப்பிடித்தால் மற்றொன்றுக்கு விரோதம் வருகிறது. ஏதாவதொன்றை நீ கடைப்பிடித்தே தீரவேண்டும். இந்தத் தர்மஸங்கடத்தில் என்ன செய்வது என்று தீர யோசித்தே செய்யவேண்டும். அவஸரப்பட்டு ஏதாவதொன்றைச் செய்துவிட்டுப் பின்னர் வீணாகத் துக்கிப்பதில் பயனில்லை' என்று விஸ்தாரமாக அப்பொழுது வந்திருக்கும் தர்மஸங்கடத்தின் ஸ்வரூபத்தை நன்றாக வெளிப்படுத்தினார். 'தர்மத்தைக் கைவிடலாகாது' என்று தோன்றிய அர்ஜுனனுக்கு அப்பொழுது இன்ன தர்மத்தைக் கைக்கொள்வதென்று விளங்கவில்லை. 'நீரே எனக்குக் கதி' என்று பகவானை நோக்கி விண்ணப்பம் செய்து கொண்டான். "இப்பொழுது உன் சபதத்தைக் காக்கா

விட்டால் உனக்குத் திருப்தி வாராது. சபதத்தைப் பூரண மாக நிறைவேற்றிவிட்டால் தமையனைக் கொன்று விட்டோமே, என்ற மீளாத் துக்கத்திற்கு ஆளாகி நீ இறப்பாய். ஆகவே உன் சபதத்தையும் ஒருவாறு நிறைவேற்ற வேண்டும். உன் தமயனையும் கொல்லக் கூடாது. சாஸ்திரத்தில், பெரியோர்களைச் சிறியோர் கள் ஏக வசனத்தில் வாயில் வந்தபடி பேசிவிட்டால், அவர்களைக் கொன்றதற்கு ஸமானம் என்றிருக்கிறது. ஆதலால் உன் வாயில் வந்தபடி உன் தமயனுரை இப் பொழுது ஏக வசனத்தில் ஏசிவிடு. இதுவே இப்பொழுது செய்யத்தக்கது" என்று பகவான் வழிகாட்டினுர். அவ் வாறே அர்ஜுனன் செய்து "ஏன் இப்படிச் செய்துவிட் டோம்" என்று பின்பு துக்கத்தை அடைந்தான்.

தர்மஸங்கடங்களில், தாழ்ந்த தர்மத்தை முற்றிலும் கடைப்பிடியாது, உயர்ந்த தர்மத்தை முக்கியமாகக் கைக் கொள்ள வேண்டும்.

—மஹாபாரதம், கர்ணபர்வம்.

## 12. மௌனத்தின் சிறப்பு

மூன்று ரிஷிகள் ஸ்வர்க்கம் நோக்கிப் போய்க்கொண் டிருந்தனர். போகும் வழியில் ஒரு பருந்து, பாம்பு ஒன்றைத் தூக்கிப்போவதைக் கண்டார்கள். அப்பொழுது ஒரு ரிஷி " இது, என்ன துக்கம்! இந்தப் பஞ்சையான பாம்பு, அநியாயமாக இந்தப்பருந்தின் வாயில் அகப்பட்டு வருந்துகின்றதே " என்று சொல்லிப் பரிதபித்தார். உட னே, அவர் பூமியைநோக்கி விழுந்துவிட்டார். இதைக்

கண்ட மற்றொரு ரிஷி " இக்கொடிய பாம்பிற்கு, இம்முடிவே தகுந்தது " என்று சொல்ல, அவரும் கீழே விழுந்து விட்டார். மூன்றாம் ரிஷி, "பிரபஞ்ச விசித்திரத்தின் நியாயா நியாயங்களை எடுத்துக்கூற நமக்கு என்ன வல்லமை இருக்கிறது? உண்டென்று சொல்வதற்கும், இல்லையென்று சொல்வதற்கும் நமக்கு என்ன அதிகாரம். பகவானால் சிருஷ்டிக்கப்பட்டு அவராலேயே பரவப்பெற்றதாகிய இவ்வுலகில் நடக்கும் விஷயங்களை அநியாயம் என்று கூற நமக்கு அதிகாரம் இல்லை. நியாயம் என்று கூற எவ்வாறு மனந்துணியும். அவனன்றி ஓரணுவும் அசையாது. ஆகையால், நடப்பவைகளைக்கண்டு மனங்கோணாது, செய்வன செய்து பொறுமையுடன் இருத்தலே நமது கடமை " என்று எண்ணமிட்டுக்கொண்டு மனதை ஸமாதானப் படுத்தி மௌனமாக விருக்க, யாதொரு கஷ்டமுமின்றி ஸ்வர்க்கம் சென்றடைந்தார். மௌனமே பெரியோர் மனத்துள் வரம்பின்றிக் குடிகொண்டிருக்கும் ஞானத்திற்கு வெளியே தோன்றும் ஓர் அடையாளமாக விருக்கின்றது.

மோன மென்பது ஞானவரம்பு.

—ஷிதோபதேசம்.

---

## 13. தர்மம் அதர்மமானது

இரண்டு நதிகள் சேருமிடத்திலிருந்த ஓர் கிராமத் தருகில், வேதசாஸ்திர ஸாரங்களை அறிந்த கௌசிகன் என்ற ஒரு ப்ராஹ்மணன் இருந்தான். அவன் ' ஸத்யம் வத ' என்ற உபநிஷத் வாக்கியத்திற்கேற்ப எப்போதும்

உண்மையையே உரைக்க வேண்டும் என்ற விரதம் கொண்டிருந்தான். இவன் நடத்தையால் இவனுக்கு மிகுந்த கீர்த்தி உண்டாக, அது ஊரெங்கும் பரவியது. வழிபறிக்கும் திருடர்களுக்குக்கூட கௌசிகன் ஸத்யஸந்தன் என்பது தெரிந்திருந்தது. இப்படி யிருக்கையில் ஒரு நாள் இரவில் அநேகர், திருடர் கூட்டங்களால் துரத்தப்பட்டு ஓடிவந்து இக்கௌசிக ப்ராஹ்மணன் இருந்த விடத்திற்கருகாமையில் இருந்த ஒரு காட்டில் புகுந்து ஒளித்துக்கொண்டார்கள். இதை அவன் பார்த்துக்கொண்டேதான் இருந்தான். கொஞ்ச நாழிகையான பின்பு பின்னே துரத்திவந்த திருடர்கள் அங்கு ஓடிவந்தார்கள். அவர்கள் கௌசிக ப்ராஹ்மணனைக் கண்டு "ஐயா, ஸத்யவானே! எங்களுக்குப் பயந்து ஓடிவந்த ஜனங்கள் எங்கேபோயினர்? நீர் எப்பொழுதும் உண்மை உரைப்பவர் ஆச்சுதே. இந்த விஷயத்தில் உண்மையை எங்களுக்குக் கூறும்" என்று கேட்டார்கள். தர்மத்தின் ஸூக்ஷ்மத்தை அறியாத கௌசிகன், தான் பார்த்திருந்தவைகளை எல்லாம் ஒளிக்காது சொல்லி ஜனங்கள் மறைந்துகொண்டிருந்த காட்டையும் காட்டிவிட்டான். உடனே திருடர்கள் அங்கு சென்று, அவர்களை எல்லாம் இரக்கமின்றி வெட்டிச் சாய்த்து அவர்கள் ஸொத்தை எல்லாம் வாரிக்கொண்டு போயினர். இவ்வாறு கொடிய பாபம் இக்கௌசிகனால் ஸம்பவித்ததால் அவன் நரகில் வீழ்ந்து வெகுகாலம் கஷ்டப்பட்டான். இங்கு ஸத்யம் உரைத்தல் என்ற தர்மமானது ஸமயத்திற்கேற்ப அஸத்யம் உரைத்தல் என்ற அதர்மத்தின் பலனைக் கொடுத்தது. இந்த ஸமயத்தில் 'எனக்கு ஒன்றும் தெரியாது' என்று சொல்லிக் கௌசி

கன் தப்புவித்துக்கொண்டிருந்தபோதிலும், அவனுக்கு இக்கொடிய நரகம் வந்திராது.

பெருங்கேடு விளைக்கும் தர்மம் அதர்மமே.

—மஹாபாரதம், கர்ணபர்வம்.

---

## 14. அதர்மம் தர்மமானது

பலாஹகன் என்ற ஒரு வேடன் இருந்தான். அவன் தன் குடும்பத்தை வஹிப்பதற்காகக் காட்டில் தன் ஜாதித்தொழிலின்படி வேட்டையாடி வந்தான். தனக்கும் தன் குடும்பத்திற்கும் வேண்டிய அளவு மாம்ஸம் கிடைத்துவிட்டால், உடனே வேட்டையை நிறுத்திவிடுவான். அவன், எப்பொழுதும் வேட்டையாடுவதில் வெறி கொண்டு கொலைத்தொழிலை இரக்கமின்றிச் செய்துவரும் கொடிய கிராதகர்களைப் போன்றவன் அல்ல. இந்தத் தர்மாத்மாவான வேடன் ஒருநாள் தன் குடும்ப உபயோகத்திற்காக வேட்டைக்குப் புறப்பட்டான். காடெங்கும் ஓடியாடித் தேடினான். ஒரு மிருகம்கூட அன்று அவனுக்கு அகப்படவேயில்லை. பொழுதோ அதிகமாகி விட்டது. தனது தாய்தந்தையர்களை ரக்ஷிக்கும் வகைஇன்னதென்று அறியாது ஒருகுளக்கரையில்வந்து அவன் திகைத்து நின்றான். அப்பொழுதுகொஞ்சதூரத்தில் ஒரு குருட்டுமிருகம் தண்ணீர்குடித்துக்கொண்டிருப்பதைக்கண்டான். உடனே குடும்பரக்ஷணம் செய்யவேண்டும் என்ற தர்மத்தைக் கைக்கொண்டு குருட்டு மிருகங்களைக் கொல்லலாகாது என்ற தர்மத்தைக் கவனியாது அந்த மிருகத்தை அவன் கொன்றான். அந்த மிருகம் தபோபலத்தால் மற்றைய மிருகங்

களைக் கொன்று காட்டிலுள்ள ஸகல ஜீவஜந்துக்களுக்கும் யமன்போல உலாவி வந்துகொண்டிருந்தது. வேடனால் இது அடிபட்டு மாளவும், காட்டிலிருந்த மற்றைய பிராணி களின் துக்கம் அன்றோடு நீங்கியது. வேடன் ஸ்வர்க்கம் அடைந்து ஸுகம் பெற்றான். ஆதலால் "அஹிம்ஸா பரமோ தர்ம:" என்ற விதிக்கு விரோதமாக வேடன் குருட்டு மிருகத்தை அடிக்கும்படி நேரிட்டபோதிலும், அதனாலேயே குடும்பரக்ஷணம் என்ற தர்மத்தையும், பிராணிகளினது துக்கநிவர்த்தி என்ற ஹிதத்தையும் செய்துமுடித்ததால் அவன் செய்த அதர்மம் ஸந்தர்ப்பத்திற்கேற்ப தர்மத்தின் பலனைக் கொடுத்தது. இவன் அந்தக் குருட்டு மிருகத்தைக் கொல்லாது கருணையுடன் விட்டிருந்தால் இவனுக்கு இந்த ஸமயத்தில் கொடிய நரகமே கிடைத்திருக்கும்.

போதுநன்மைக்காக ஏற்படும் அதர்மம் தர்மமேயாம்.

—மஹாபாரதம், கர்ணபர்வம்.

---

## 15. பிடிவாதத்தால் நன்மை விளைதல்

கௌசிகர் என்பவர் ஒரு பெரிய அரசர். அவர் தமது பரிவாரங்களுடன் காட்டில் வேட்டையாடச் சென்ற காலத்தில் மிகக் களைப்படைந்து வஸிஷ்டரது ஆச்ரமம் வந்து சேர்ந்தார். அவர்கள் எல்லோருக்கும் விருந்தளிப்பதாக வஸிஷ்டர் ஒப்புக்கொண்டு காமதேனுவை வரவழைத்து விமரிசையாய் எல்லோரையும் திருப்தி செய்வித்தார். இதைக்கண்ட கௌசிகர், "காட்டில் தனிமையாய் இருந்து தவம் செய்யும் ரிஷிகளுக்குக் காமதேனுவைப்

போன்ற அருமையான வஸ்து எதற்கு? எங்களைப்போன்ற அரசர்களிடம் இது இருந்தால் அன்றோ எங்களுக்கு மிகுந்த உபகாரமாயிருக்கும்" என்றார். அதற்கு வஸிஷ்டர் "இது எங்கள் சொந்தமல்ல, இது எல்லா ரிஷிகளுக்கும் பொது, நாங்களாக வேண்டும் என்று கோரிக் கிடைத்த வஸ்துவல்ல; ஆதலால் என்னால் அதைக் கொடுக்கவே முடியாது. அது வந்தால், அழைத்துக்கொண்டு போ" என்று சொல்லிவிட்டார். கௌசிகர் காமதேனுவைப் பிடித்துக்கட்டி இழுத்துக்கொண்டு போகும்படி பரிவாரங்களுக்கு உத்தரவு செய்தார். அப்பொழுது அது வஸிஷ்டரது நோக்கத்தை உணர்ந்து, அவர் அனுமதியின் பேரில் தனது தேகத்திலிருந்த ரோமக்கால்களிலிருந்து அநேக ஆயிர வீரர்களைச் சிருஷ்டித்துத் தன்னைப் பிடிக்க வந்தவர்களைச் சின்னபின்னப்படுத்தி தப்பித்துக்கொண்டது. மிகுந்த வெட்கமடைந்த கௌசிகர், தமது ஊர் சென்று பெரிய படைகளை ஏராளமாகச் சேர்த்துக்கொண்டு வஸிஷ்டரை எதிர்த்துச் சண்டைக்கு வந்தார். இதைக் கண்ட வஸிஷ்டர், தமது ப்ரஹ்மதண்டத்தைக் கீழே ஊன்றி அதன் பின்புறம் சாந்தமாக உட்கார்ந்து விட்டார். கௌசிகர் விட்ட அஸ்திரங்கள் எல்லாம் வஸிஷ்டர் மேல் தாக்காது அவர் ப்ரஹ்மதண்டத்தால் விழுங்கப்பட்டன. தம் சக்தியெல்லாம் வீணானது கண்டு கௌசிகன் மிகுந்த கோபங்கொண்டு "க்ஷத்திரிய பலத்தைச் சுடவேண்டும். ப்ரஹ்மதேஜோ பலமே பலம்" என்று கூறிவிட்டு, அன்று முதல் ஒரே பிடிவாதமாக ப்ராஹ்மண்யம் ஸம்பாதித்துத்தான் தன் தவத்தை நிறுத்துவது என்று தீர்மானம் செய்துகொண்டு கொடிய தவம் செய்யத் தலைப்

பட்டார். இடையில் அவருக்கு நேர்ந்த இடையூறுகளுக் கோ கணக்கேயில்லை. அவைகளை யெல்லாம் ஒரு பொருட் டாக மதியாது முடிவில் ப்ராஹ்மண்யம் பெற்றார்.

நன்மையே யெல்லாம் நன்மையாய் முடியின்

—ராமாயணம், பாலகாண்டம்.

---

## 16. வீண்பிடிவாதம் ஆகாது

மதங்கர் என்ற ஒரு ப்ராஹ்மணர் இருந்தார். அவர் கர்ப்பவாஸ காலத்தில் அவர் தாயின் கற்புநிலை குலைந்தபடியால், அவருக்குப் பிறவியிலேயே சண்டா ளத்வம் வந்துவிட்டது. இது ஒருவருக்கும் தெரியாது. தகப்பன் உத்தரவுப்படி, யாக வஸ்துக்களைச் சேகரித்து வர ஒருநாள் மதங்கர் ஒரு கோவேறு கழுதைக் குட்டி கட்டிய வண்டியில் ஏறிப் புறப்பட்டார். அது தன் தாயைக் கண்டதும் அதை நோக்கி இழுத்தது. மதங்கர் அந்தக் குட்டியை ஈவு இரக்கமின்றிக் காயப்படுத்தினார். இதைக் கண்ட தாய்,குட்டியை நோக்கி "துக்கித்து என்ன லாபம், பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளியமரத்தில் ஏறித்தானே தீரவேண்டும். முடியாதென்றால் விடுமா, உன்னை ஓட்டு பவன், சண்டாளன்" என்று கூறித் தேற்றியது. மதங்க ருக்கு மிகுந்த துக்கம் வந்துவிட்டது. அப்படியே அவன் திரும்பி வீட்டுக்குப் போய்த் தகப்பனிடம் தன் நிலையைக் கூறி ப்ராஹ்மண்யம் ஸம்பாதிக்கத் தவம் செய் யச் சென்றான். வெகுகாலம் தவம் செய்தான். அப் பொழுது இந்திரன் பிரஸன்னமாகி உனக்கு ப்ராஹ்மண் யம் கிடைப்பது துர்லபம். சண்டாளத்வத்திலிருந்து

படிப்படியாக, அநேக காலம் ஒவ்வொரு மேல் ஜாதியி லும் பிறந்து உயர்ந்து முடிவில்தான் உன்னால் ப்ராஹ் மண்யம் பெற முடியும். அதை இந்த ஜன்மத்திலேயே அடைய முயல்வது வீண் சிரமம்தான்" என்று உள் ளதை உள்ளபடி கூறி மறைந்தான். மதங்கன் விடாது முயற்சிசெய்து பார்த்தான். அடிக்கடி இந்திரனும், கூறிய புத்திமதியையே வற்புறுத்தி வந்தான். முடிவில் மதங் கருக்கே தம் முரட்டுத்தனம் வெளியாயிற்று. பின் னர் இந்திரனிடமிருந்து காமரூபம், ஆகாய கமனம், என்ற சக்திகளை யடைந்து பெண்கள் ஆராதிக்கும் ஓர் தெய்வமும் ஆனான்.

கிட்டாதாயின் வெட்டென மற.

—மஹாபாரதம், அனுசாஸன பர்வம்.

# V. மதவிஷயம்

## 17. ஸ்வதர்ம அனுஷ்டானம் (1)

ஓர் ஊரில் கௌசிகன் என்ற ஒரு ப்ரஹ்மசாரி இருந்தான். அவன் ஒருமரத்தடியில் ஹடயோகாப்யாஸம் செய்து காலம் கழித்துவந்தான். இடைஇடையே தேகத்தைக் காப்பதற்காக, அருகாமையிலிருந்த கிராமத்துள் பிக்ஷை எடுத்தல் முதலியன செய்யக்கொஞ்சநேரம் வருவான். ஒருநாள் இவன் மரத்தடியில், யோகாப்யாஸம் செய்துகொண்டிருக்கையில், அவன் மேலே சில இலைகள் உதிர்ந்தன. யோகம் கலைந்து மேலே நோக்கினான். அவன் கோபவிழிகளுக்குச் சண்டையிட்டுக் கொண்டிருந்த இரண்டு கொக்குகள் விஷயமாயின. அப்பொழுது அவன் கண்ணிலிருந்து வந்த கோபக்கனலால் அவைகள் எரிந்து சாம்பலாகி விழுந்தன. "ஏது நமது யோகம், பலித்துவிட்டதே!" என்று கௌசிகன் கர்வங்கொண்டான்.

மிகுந்த ஸந்தோஷத்துடன் இவன் கிராமத்துள் சென்று ஒருவீட்டில் புகுந்து"பவதிபிக்ஷாம்தேகி"என்று சொல்லிக்கொண்டு நின்றான். உடனே "சற்றுப் பொறு" என்று ஒரு சத்தம் உள்ளேயிருந்து வந்தது. சற்றுப் பொறுத்தான். ஏதோ கிரகிணிக்கு அதிக வேலைபோலிருக்கிறது.இரண்டொரு வீடுபோய் மறுபடி வருவோம்"என்று எண்ணுவது வழக்கமாயிருந்த அவனுக்கு "நம்மைக் காக்க வைக்கலாச்சா ஓர் அற்பப்பெண்!" என்ற கோபம் அன்று

வந்துவிட்டது. முகம் சிவந்து வியர்க்கத் தொடங்கியது. "அவள் வரட்டும், அவளை என்ன செய்து விடுகிறேன், பார்" என்று இறுமாந்து காத்துக்கொண்டிருந்தான். இதற்குள் அவள் பிக்ஷை எடுத்துக்கொண்டு வெளியே வந்து கௌசிகனுக்குக் கொடுத்துவிட்டுத் திரும்பினாள். கோபத்தால் கௌசிகன் ஒருகணைப்புக் கனைத்தான். உடனே அவள் திரும்பி 'ஐயா நான் கொக்கல்ல! ஏன் இவ்வளவு கோபம்? என் தர்மத்தை அனுஷ்டித்து முடிக்க இவ்வளவு காலம் ஆயிற்று. இதுவரையில் உம்மைக் காக்க வைத்தேனு. இன்று நீர் வரும்தருணத்தில் என்கணவனும் வந்துவிட்டபடியால் இவ்வாறுயிற்று. வீண்கோபம் எதற்கு?" என்று சாந்தமாகக் கூறினாள். "காட்டில் நான் கொக்கை எரித்தது உனக்கு எப்படித்தெரிந்தது" என்றுகௌசிகன் கேட்டான். "எனக்கு உமது யோகம் ஒன்றும் தெரியாது. கணவனைப் பேணுதல் என்னும் கற்புடைமாதர் கடமையிலேயே நான் முக்கியமாகப் பழகிவருகிறேன். இந்தத் தர்மானுஷ்டானத்தால் நீர் கொக்கை எரித்தது தெரியவந்தது. மேல்விஷயங்கள் ஒன்றும்எனக்குத் தெரியாது. உமக்குத்தெரியவேண்டுமாகில் மிதிலாநகரத்தில் ஓர் வ்யாதன்இருக்கிறான். அவன் ஓர் கசாப்புக்கடைக்காரன். அவனிடம் வேண்டுமானல் போம்" என்று கூறி, வீட்டுக்குள் போய்விட்டாள். கர்வம் அடங்கிய கௌசிகன் "இவளிடமே இவ்வளவு சிறப்பிருந்தால், வ்யாதனிடம் எவ்வளவு சிறப்பு இருக்கவேண்டும்" என்று எண்ணமிட்டுக்கொண்டு மிதிலாநகரம் சென்றான். இவனைக் கண்டதும் தர்மவ்யாதன், இவன் விஷயமாக நடந்தவைகளை யெல்லாம் முன்னர் எடுத்துக்கூறிப், பின்னர் தான் கசாப்புத் தொழிலிலிருந்தபோதிலும் தனக்கு

இம்மாதிரியான மேன்மை வருவதற்குத் தன் ஸ்வதர் மானுஷ்டானமும், தாய் தந்தையரை வழிபடுதலுமே முக்கிய காரணங்கள் என்று கூறி தன் தாய் தந்தையர் களை அவனுக்குக் காட்டினன்.

ஒருவன் ஸ்வதர்மம் எப்படியிருந்த போதிலும், அதை அனுஷ்டிக்கும் விதத்தாலேயே அவன் ஏற்றத் தாழ்வு வெளியாகும்.

—மஹாபாரதம், ஆரண்யபர்வம்.

---

## 18. ஸ்வதர்ம அனுஷ்டானம் (2)

மஹாபாரத யுத்தம் தொடங்கிய காலத்தில், அர்ஜு னன் கிருஷ்ணபகவானை நோக்கி "இருபக்கத்திலும் உள்ள ஸேனை முதலியவற்றை நான் பார்க்கவேண்டும். இரண்டு ஸேனைகளுக்கும் மத்தியில் இரதத்தைக் கொண்டுபோய் நிறுத்தும்" என்று கேட்டுக்கொண்டான். பகவான் அவ்வாறே செய்ய, அப்பொழுது அர்ஜு னன் திரும்பிய இடங்களில் எல்லாம் உறவினர்களும், ஆசார்யர்களும், ஸ்நேகிதர்களும் மரியாதை பெறத் தகுந்த மற்றையோர்களும் நிறைந்திருப்பதைக் கண்டான். உடனே, "இவர்களை எல்லாம் கொன்று நாம் ராஜ்யம் அடையும்படி ஆயிற்றே" என்ற எண்ணம் தோன்ற அவனுக்கு மிகுந்த துயரம் உண்டாயிற்று. அப்பொழுது பகவானை நோக்கி "கொலைத்தொழிலைச் செய்து கீர்த்தி பெறுவதைவிட ஸந்யாஸம் பெற்று ஒருவருக்கும் யாதொரு தீங்கும் செய்யாது பரமபதம் பெறத் தவம் செய்வதே மேன்மை எனத் தோன்றுகிறது" என்று

மிகுந்த பரபரப்புடனும், துக்கத்துடனும் கூறித் தனது வில் அம்பறாத்தூணி முதலியவைகளைக் கீழே நழுவவிட்டு விட்டுத் தேர்த்தட்டில் மூர்ச்சையாக விழுந்துவிட்டான். அப்பொழுது பகவான், அவனைத் தேற்றி " க்ஷத்ரியனது தர்மம், நியாயமான சண்டையைச்செய்துதீர்க்கவேண்டும் என்பதே. இந்த யுத்தமும் முன்பின் யோசிக்காது ஏற் பட்டதல்ல, வேறு கதி இல்லையென்று முடிவானதாகப் பின்பற்றப்பட்ட உபாயமே. மேலும், நீ ஜாதியில் க்ஷத் ரியன், ஸந்யாஸம் ப்ராஹ்மணனது தர்மம். விபரீதமான துக்க ஸமயத்தில் புத்தி கலங்கியிருப்பதால் உனக்கு உன் தர்மத்தைவிட்டு வேறு ஜாதியார் தர்மத்தைச் செய்யவேண்டும் என்று தோற்றுகிறதுபோலும். சண் டை வேண்டாம், என்று உன்னைத் திருப்பிக்கொண்டு போய் விட்டபோதிலும், இக்கலக்கம் மாறியதும், உன் புத்தி சண்டையிலேயே பிரவர்த்திக்கும். ஆதலால் ஒரு வன் தர்மம், எவ்வளவு தாழ்ந்ததாய் இருந்தபோதி லும், எக்காலத்திலும் நியாயப்படி மிகுந்த சிரத்தை யாய் அதை அனுஷ்டிப்பதே மேலானது; பிறர் தர்மம் எவ்வளவு சிறந்ததாய் இருந்தபோதிலும், அதை எந்த அவஸ்தையிலும் அனுஷ்டிக்க முயலவே கூடாது. பிறர் தர்மத்தை முற்றிலும் ஒழுங்காய் அனுஷ்டிப் பதைவிட தன் தர்மத்தை உள்ளபடி அனுஷ்டிக்க முயன் று அதை அரைகுறையாய்ச்செய்தாலும் அதுவே மேலா னது" என்று பலவாறாக ஸ்வதர்ம அனுஷ்டானத்தைப் பற்றிக் கூறி, அர்ஜுனன் மனதைத் தேற்றினார். அர் ஜுனன் தெளிந்து தன் குற்றத்தை உணர்ந்து துக்கம்

நீங்கி சண்டைசெய்து பாரதயுத்தத்தில் ஜயம் அடைந்தான்.

செய்வன செய்தலே சிறப்பு உண்டாக்கும்.

—மஹாபாரதம், பீஷ்ம பர்வம்.

---

## 19. ஆச்ரமச் சிறப்பு

ஓர் அரசன், தன் ஸபைக்குவந்த பேர்களையெல்லாம் ஸன்யாஸம் பெரிதா, கார்ஹஸ்த்யம் பெரிதா என்று கேட்பது வழக்கம். கார்ஹஸ்த்யம் பெரிதென்று கூறி ஸ்தாபிக்க முடியாதவர்களை, க்ருஹஸ்தாசிரமத்தை நன்றாய் அனுஷ்டித்துப் பார்க்கும்படியும், ஸன்யாஸம் பெரிதென்று கூறி ஸ்தாபிக்க முடியாதவர்களை விவாகம் செய்துகொண்டு க்ருஹஸ்தர் ஆகும்படியும் வற்புறுத்திவந்தான். ஒரு நாள் தன்னிடம் வந்த ஒருஸன்யாஸியை நோக்கி இதேகேள்வியைக் கேட்க, அவன் “ஒவ்வொன்றையும் நடத்துகிறபடி நடத்தினால் அதுவே சிறந்ததாகும்” என்று மறுமொழி கூறினான். இதென்ன கோமட்டி ஸாக்ஷியாயிருக்கிறதென்று அரசன் பரிஹாஸம் செய்ய “இதன் உண்மையைக் காட்டுகிறேன் வாரும்” என்று அரசனைக் கூட்டிக்கொண்டு தேசாந்தரம் புறப்பட்டான். போகும்வழியில் ஓர் ஊரில் ராஜ குமாரத்திக்கு ஸ்வயம்வரமொன்று நடந்துகொண்டிருந்தது. அந்த வேடிக்கை பார்க்கப்போய் இவர்களிருவரும் ஒதுங்கி நிற்க, இதுபோல் முன்னர் அநேகம் ஸ்வயம்வரங்கள் நடந்து ராஜ குமாரத்திக்குத் தலைவன் அகப்படாது வீணாயின என்று அவர்களுக்குத் தெரியவந்தது. ராஜ குமாரத்தி ஒருவரையும் கவனியாது வேகமாய்

வந்ததைப் பார்த்த அவர்களுக்கு இந்த ஸ்வயம்வரமும் அப்படியே ஆய்விடுமோ என்று தோற்றியது.

ராஜகுமாரத்தி இவர்கள் நின்றுகொண்டிருந்த இடம் நோக்கி வந்து இவர்கள் அருகாமையில் நின்றுகொண்டிருந்த திவ்ய தேஜோவானான் ஒரு ஸன்யாஸியின் கழுத்தில் மாலையிட்டாள். அந்த ஸன்யாஸி மாலையைச் சரே லென்று கழுத்திலிருந்து எடுத்து "இதென்ன விபரீதம்! நான் ஸன்யாஸியல்லவா, எனக்கும் இதற்கும் என்ன ஸம்பந்தம்" என்றான். "என் பெண்ணைக் கொடுக்கும் பொழுது, சீராகப் பாதிராஜ்யம் கொடுத்து எனக்குப் பிற் காலம் மற்றையப் பாதியும் கொடுத்துவிடுவேன்' என்று அவ்வூர் அரசன் ஆசை காட்டினான். "எனக்கும் ராஜ் யத்துக்கும்தான் என்ன ஸம்பந்தம்?" என்று மாலையை உதறி எறிந்துவிட்டு, ஸன்யாஸி ஓட்டம் பிடித்தான். "இவரையன்றி வேறொருவரையும் கனவில்கூட நினை யேன்" என்று பின்தொடர்ந்தாள் ராஜகுமாரி. ஸன்யாஸி யென்றால் இப்படியல்லவோ விருக்கவேண்டும் என்று ஸந் தோஷத்துடன் வேடிக்கை பார்க்கவந்த ஸன்யாஸியும் அரசனும் இவர்களைப் பின்தொடர்ந்தார்கள்.

காட்டின் கிளைவழிகளை நன்குணர்ந்த ஸன்யாஸி ஒன்றனுட் புகுந்து திடீரென்று மறைந்துவிட்டான். ராஜ குமாரி காடெங்கும் அவனைத் தேடிக் காணாமல் தத்தளித் தாள். இதற்குள் இவர்களைப் பின்தொடர்ந்து வந்த அரசனும் ஸன்யாஸியும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

அப்பொழுது ஸூர்யாஸ்தமன ஸமயமாக விருக்க, அருகாமையிலிருந்த ஓர் ஆலமரத்தடியில் அன்றிரவு

தங்கி, மறுநாள் காட்டைவிட்டு அவனை வெளியேற்று வதாக ஒப்புக்கொண்டனர்.

இம்மூவரும் தங்கிய ஆலமரத்தில் ஒரு புறு தன் பெட்டையோடும் சில குஞ்சுகளோடும் ஸுகமாய் வாழ்ந் திருந்தது. இவர்களைக் கண்டதும், "நமது வீட்டுக்கு அதிதிகள் வந்துவிட்டார்கள். இரவோ மிகக் குளிர்ச்சியா யிருக்கிறது. அவர்களுக்குக் குளிர்காய ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று, ஆண்புறு கூறி, எங்கேயோ அலைந்து திரிந்து ஒருலேசான கொள்ளிக்கட்டையை அவர்கள்முன் கொண்டுவந்து போட்டது. அவர்கள், அருகாமையிலிருந்த சருக்களைச் சேர்த்து குளிர்காயத் தீமூட்டிக்கொண்டனர். அப்பொழுது ஆண்புறு மற்றப் புறுக்களை நோக்கி "நாமோ க்ருஹஸ்தர்கள். அதிதிகளை ஸுகப்படுத்த வேண்டுவது நமது கடமை. நம்மிடத்தோ இப்பொழுது ஒன்றுமில்லை. என் தேகத்தைக் கொடுத்தாவது அவர்கள் பசியைத்தீர்க்க எண்ணியிருக்கிறேன்," என்று கூறி எரியும் நெருப்புள் புகுந்து உயிர்விட்டது. அதை அவர்கள் எடுத்து உண் ணத் தயார் செய்ய, பெண்புறு பார்த்து "இவ்வொன்றால் இம்மூவர் பசி எவ்வாறு அடங்கும்? கணவன் செய்யும் தர்மத்தை மனைவி பூர்த்திசெய்யவேண்டும்" என்று சொல் லிக்கொண்டு அதுவும் தீயுள் புகுந்து தேகத்தைநீக்கியது. இவ்வாறு இரண்டு புறு, நெருப்பில் விழவே திகைத்துப் போன அரசனையும் ராஜகுமாரியையும் நோக்கி, இப்புறுக் கள், க்ருஹஸ்ததர்மம் அனுஷ்டித்த விதத்தை ஸன்யாஸி எடுத்துக்கூறி வியந்து கொண்டிருக்கையிலேயே மிகுதியா யிருந்த குஞ்சுகளும் "நமது தாய்தந்தையர் தொடங்கிய தர்மத்தைப் பூர்த்திசெய்ய வேண்டியது நமது கடமை"

என்று சொல்லிக்கொண்டே அக்கினியுள் ப்ரவேசித்தன. இவர்கள் என்ன முயன்றும், அவைகளைத் தடுக்க முடியவில்லை. தர்மாத்மாக்களான புறாக்களைத் தின்ன அவர்களுக்கு மனமும் வரவில்லை. இரவு முழுதும் பட்டினி கிடந்துவிட்டு விடியற்காலம் ராஜகுமாரியை அவள் ஊர் கொண்டுவந்து சேர்த்தனர். தமது ஊர் நோக்கிப்போகும் வழியில் ஸன்யாஸி அரசனை நோக்கி, "ஸன்யாஸியானால், ஸ்வயம்வர ஸன்யாஸியைப்போல், வலிய வந்த பெண், ராஜ்யம் முதலியவைகளைக்கூட ஒரு பொருட்டாக மதியாது தன்னிலையில் நிற்கவேண்டும். க்ருஹஸ்தனானால் புறாவைப்போல அதிதி ஸத்கார (விருந்தோம்பும்) விஷயத்தில் உயிரைக் கொடுக்கத் தயாராயிருக்கவேண்டும். இவ்விருவர் சிறப்பிற்கும் பேதமேயில்லை" என்று எடுத்துக் காட்டினான்.

உள்ளபடி அனுஷ்டித்தால் ஒவ்வொரு ஆச்ரமும் சிறந்ததே.

—மஹாபாரதம், சாந்திபர்வம்.

## 20. ஸமத்ருஷ்டி

ரந்திதேவர் சந்திரகுலத்தில் கீர்த்திபெற்ற ஓர் அரசர். அவர் கொஞ்ச காலம் ராஜ்ய பரிபாலனம் செய்து உலக விஷயங்கள் அநித்யம் என்ற வைராக்யம் தோன்றத் தன் ஐச்வர்யங்கள் எல்லாவற்றையும் ஜாதிபேதமின்றி ஜனங்களுக்குத் தானம் செய்தார். பின்னர் ஸம்ஸார ஸஹிதமாய் வனம் சென்று அங்கு வானப்ரஸ்தாச்ரமத்திலிருந்து ஸத்கர்மங்களை யனுஷ்டித்துக் காலங்

கழிக்க வேண்டும் என்று தீர்மானித்தார். அவ்வாறே வனம் சென்று வானப்ரஸ்தாச்ரமத்தில் பழகிக்கொண்டு வந்தார். இப்படியிருக்கையில் நாற்பத்தெட்டுநாள் ஓர் உபவாஸ விரதம் இருந்து நாற்பத்தொன்பதாம் நாள் காலையில் பாரணைக்கு வேண்டிய அளவு மிதமாக ஆகாரம் சேகரித்து பாரணை செய்ய யத்தனிக்கையில் ஒரு ப்ராஹ்மணன் மிகுந்த பசியுடன் வந்து தனக்கு ஆகாரம் கொடுக்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டான். இந்த ஸமயத்திலும் தன் கஷ்டத்தைக் கவனியாமல் பாதியாகாரத்தை அந்த ப்ராஹ்மணனுக்குக் கொடுத்துவிட்டார். பின்னர் ஓர் சூத்ரன் பசியுடன் வர, அவனுக்கும் இரங்கி மிகுதியாயிருந்த ஆகாரத்தில் அவனுக்குக் கொஞ்சம் கொடுத்தார். சூத்ரன் போனதும், ஒரு நாய் வாலைக் குழைத்துக்கொண்டு பசியுடன் வந்தது. மிகுதியிருந்த உணவை அதற்குக் கொடுத்துவிட்டுத் தன்னிடம் இருந்த ஸ்வல்பப் பாலைக் குடிக்கப் போகும் தருணத்தில் சண்டாளன் ஒருவன் அவர் எதிர்வந்து தனக்கு அதிக தாகமாக இருக்கிறது, குடிக்க ஏதாவது கொடுத்தால் உபகாரமாக விருக்கும் என்று கேட்டுக்கொண்டான். இந்த ஸமயத்தில்கூட அரசன் மனம் நொந்து கொள்ளாது, பாலை அவனுக்குக் கொடுத்துவிட்டு "எனக்கு மோக்ஷம் கூட வேண்டுவதில்லை, உலகத்தில் உள்ளோர் துயரமெல்லாம், என்னிடம் வந்து சேருவதால், அவர்களுக்கு ஸுகம் வருமாயின் நான் துக்கம் அனுபவிக்கத் தயாராக விருக்கிறேன். இப்படிச் செய்வதால் எனக்கு அஞ்ஞானம் நீங்கிவிடும்" என்று கூறினார். அப்பொழுது பகவான் பிரத்யக்ஷமாகி அவருக்குச் சாந்தி உண்டாகும்படி செய்ய

அவர் மேலான பதவியை அடைந்தார். அவருடன் இருந்தவர்களும் சிறந்த பக்தசிரோமணிகள் ஆயினர்.

உலகம் முழுவதையும் ஒரே மாதிரியாய்ப் பார்ப்பார் உத்தமர்.

—ஸ்ரீமத் பாகவதம், 9-வது ஸ்கந்தம்.

## 21. குருபக்தி விசேஷம்

ஹஸ்தினுபுரத்துக்கு அருகாமையில் இருந்த ஒரு காட்டில் ஏகலவ்யன் என்ற ஒரு வேடராஜன் இருந்தான். அவன் துரோணுசார்யருடைய வில்வித்தைச் சிறப்பைக் கேள்வியுற்று அவரிடம் வில்வித்தை கற்கவேண்டும் என்ற ஆவல் கொண்டான். நல்ல தருணம் பார்த்து துரோணரை அடுத்துத் தன் கோரிக்கையும் வெளியிட்டான். அர்ஜுனன் மேலிருந்த பக்ஷபாதத்தால், ஏகலவ்யனை துரோணர் சிஷ்யனுக ஒப்புக்கொள்ளவில்லை. அப்படியிருந்தும், ஏகலவ்யனுக்கு துரோணர்மேலிருந்த பக்தி மாறவில்லை. தனது சிலம்பக்கூடம் சென்று துரோணரைப்போன்ற ஒரு விக்ரஹம் செய்துவைத்து அதற்கு வந்தனை வழிபாடுகள் எல்லாம முறைப்படி செய்து வந்தான். இதன் பின்னர், துரோணரே தனக்கு நேரிட வில் வித்தை சொல்லிக் கொடுப்பதாகப் பாவனை செய்து கொண்டு அந்த விக்கிரஹ ஸன்னிதானத்தில் வில்வித்தை பயின்று வந்தான். பக்தி விசேஷத்தால், துரோணர் அர்ஜுனனுக்கு ரஹஸ்யமாக எந்த எந்த அஸ்திரங்களைச்சொல்லிக்கொடுத்து வந்தாரோ அவைகள் எல்லாம் ஒழுங்காக ஏகலவ்யன் மனதில் தோற்ற, அவைகளில் அவன் மிகுந்த தேர்ச்சி யடைந்தான்.

இப்படி யிருக்கையில் ஒருநாள் துரோணர் பாண்டவர்களை அழைத்துக்கொண்டு வேட்டையாடச் சென்றார். ஏகலவ்யன் சிலம்பக்கூடத்தருகில் வருங்கால், அர்ஜுனன் நாய் அதனுள் புகுந்து ஆபாஸம் செய்தது. இதைக் கண்ட ஏகலவ்யன் ஒரு விசித்ரபாணம்விட அது நான்காகப் பிரிந்து நாயை நான்கு புறங்களிலும் காயப்படுத்தியது. நாய் குலைத்துக்கொண்டு அர்ஜுனனிடம் வர, நாயின்மேலிருந்த காயத்தை அர்ஜுனன் கண்டு, நம்மிடம் ரஹஸ்யம் என்று சொல்லிக்கொடுத்த அஸ்த்ரம் வேறொருவரிடம் எவ்வாறு வந்தது என்று திகைத்து நின்றான். இதற்குள் நாய் இவர்களை ஏகலவ்யனிருக்குமிடம் அழைத்துச் சென்றது. அர்ஜுனன் அவனை நோக்கி "நீ யார் என்று கேட்க, "நான் துரோணர் சிஷ்யன்" என்று கூறி துரோணருக்கு வந்தனை வழிபாடுகள் செய்து, தான் துரோணரிடமிருந்து அஸ்த்ரங்களைக் கற்றுக்கொண்ட விதங்களையும் விஸ்தாரமாக எடுத்துரைத்து துரோண விக்கிரஹத்தையும் காட்டித்தான் நாயை யடித்த காரணத்தையும் அவர்களுக்கு எடுத்துரைத்தான். துரோணர் அவன் பக்திக்கு மிகவும் மெச்சி, "ஒரு வேளை இவன் அர்ஜுனனுக்கு விரோதியாக வந்துவிடுவானோ" என்று மாத்திரம் பயந்து "உன் வலது கைக் கட்டை விரலை எனக்குக் குருதக்ஷிணையாகக் கொடு" என்று கேட்டார். அதற்கும் பின்னடையாது துரோணருக்குத் தன் வலது கைக்கட்டைவிரலை ஏகலவ்யன் அர்ப்பணம் செய்து தனது குருபக்தி விசேஷத்தை வெளிப்படுத்தினான்.

குருவை ஈச்வரனாகவே மதிக்கவேண்டும்

—மஹாபாரதம், ஆதிபர்வம்



படம் 11  [illegible] மஹர்ஷி [illegible] பாண்டவர்களுக்கு உபதேசம் செய்தல்.

—88ம் பக்கம் பார்க்க



நரஸிம்ம மூர்த்தி : ஸர்வாந்தர்யாமித்வம்

ஸர்வசக்தித்வம்.

—48-ம் பக்கம் பார்க்க

198

Gs. சென்னை. ... நூல் நிலையம்

## 22. சிரத்தை

முன்னொரு காலத்தில் ஒரு ப்ராஹ்மணன் இருந்தான். அவனுக்குக் கெட்டவர்கள் ஸஹவாஸத்தால் சூத்ர ஆசாரங்களிலேயெ விருப்பமுண்டாக, அவன் முடிவில் ஒரு சூத்ர ஸ்த்ரீயையே மனைவியாக்கிக்கொண்டான. அவளிடம் அவனுக்கு எண்ணிறந்த குழந்தைகள் உண்டாயின. அவைகளைக் காப்பாற்றும் வழி யறியாது மயங்குகையில், ஒரு திருடக்கூட்டத்துடன் கூடிக் கொண்டு வழிப்போக்கர்களை அடித்துப் பிடுங்கும் தொழிலில் அமர்ந்தான். இவன் வெகுகாலம் பிரயாணிகளுக்கு யமனாக வாழ்ந்துகொண்டு வருகையில், ஒரு நாள் அவன் இருந்த காட்டுமார்க்கத்தின் வழியாக ஸப்த ரிஷிகள் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் முகத்தில் திவ்ய தேஜஸ் தாண்டவமாடிக்கொண் டிருந்தபோதிலும், தன் பழக்கத்தால் தூண்டப்பட்டு அவர்களை வழிமறித்து நிறுத்தினான். இவன் கருத்தை யறிந்த ஸப்த ரிஷிகள் 'ப்ராஹ்மணனாய்ப் பிறந்தும் உனக்கு இக்கதி ஏன் வந்தது?" என்று கேட்க, ப்ராஹ்மணன், "என்னுடைய குடும்பஸம்ரக்ஷணைக்காக நான் இவ்வாறு செய்துகொண்டு வருகிறேன்" என்றான். அதற்கு ரிஷிகள், "குடும்பத்துக்காக இப்பாடு படுகின்றனையே, வீட்டுக்குப் போய் சாஸ்த்ர விரோதமான இக்கொடுந்தொழிலால் வரும் பாபத்தை, உன் குடும்பத்தவர்கள் உன்னோடு பங்கிட்டுக் கொள்வார்களா என்று விசாரித்துவா. நாங்கள் இங்கேயே இருக்கிறோம்" என்று கூற, அவர்கள்

வார்த்தையில் ப்ராஹ்மணனுக்கு ஒருவித நம்பிக்கை ஏற்பட்டது. உடனேவீடுசென்று விசாரிக்க, அவர்கள் "எங்களைக் காக்கவேண்டியது, உனது கடன், அதற்காக நீ செய்யும் கொடுந்தொழில்களால் வரும் பாபங்களெல்லாம் உன்னுடையதே; அதனால் வரும் போஷணை மாத்திரம் எங்களது" என்று மறுமொழி கூற, ரிஷிகள் கூறிய வார்த்தையில் மிகுந்த நம்பிக்கை யுண்டாக மிகுந்த விசாரத்துடன் திரும்பி வந்தான். ரிஷிகளைக்கண்ட மாத்திரத்தில் வில்லையும் அம்பையும் எறிந்துவிட்டு "எப்படியாவது என்னைக் கறையேற்றி அருளவேண்டும்" என்று பரிதவித்தான். உடனே, இவன் நிலைக்கு ஏற்ப, ரிஷிகள் ராமதாரக மந்திரத்தை மரா வென மாற்றி உபதேசித்து அதையே இடைவிடாது தாங்கள் மறுபடி வருமளவும் ஜபித்துக் கொண்டிருக்க வேண்டும்" என்று உத்தரவு செய்துமறைந்தனர். அந்த ப்ராஹ்மணன், குருமொழியில் மிகுந்த சிரத்தையுடன் ஏகாக்ரமனதோடு, மரா, மரா, என்று ஜபிக்கத்தொடங்கி வெகு காலம் அவ்வாறு செய்தான். வெகு காலம் வரையிலும் ஸப்தரிஷிகளும் திரும்பி வரவில்லை. இதற்குள் ப்ராஹ்மணன் உட்கார்ந்திருந்த விடமெல்லாம் புற்று உண்டாகி, அவனை மூடிக்கொண்டது. அப்பொழுதும் மெய்ம்மறந்து, இவன் மரா, மரா என்று ஜபித்துக் கொண்டிருந்தான். பின்னர் ஒருநாள் ஸப்தரிஷிகள் அங்கு வந்து"வெளியே, வா" என்று அழைக்க, இவர் புற்றினின்றும் திடசரீரத்தோடு வெளிப்பட்டார்.இவர்புற்றிலிருந்து வெளிவந்தமையால், இவருக்கு அவர்கள் வால்மீகா் எனப்

41150 (74ㅕ)



பெயரிட்டனர். இவ்வால்மீகர் பெருமையைக் கூறவும் வேண்டுமோ ?

சாஸ்த்ரம், குருமொழி இவைளிகல் உண்டாகும் நம் பிக்கைக்கு சிரத்தை என்று பெயர். இதனுல் மனம் சுத்த மாகி மேலான நிலை கைகூடும்.

—அத்யாத்ம ராமாயணம், அயோத்யாகாண்டம்.

---

## 23 ஈச்வரன் ஸர்வ வ்யாபி (1)

முற்காலத்தில் ஹிரண்யகசிபு என்ற ஓர் ராக்ஷ தன் இருந்தான். அவன் கர்விஷ்டனுயும், தெய்வம் உண்டு என்ற நம்பிக்கை இல்லாத நாஸ்திகனுயும் இருந் தான். அவனுக்கு நாரதர் அனுக்ரஹத்தால் ப்ரஹ்லா தன் என்ற ஒரு ஸத்புத்ரன் உண்டானுன். அவன், சிறு வயதிலேயே மஹாவிஷ்ணுவினிடம் விசேஷ பக்தி செலுத்தி ஆராதனை செய்யும் குணமுடையவனுய் இருந் தான், நாஸ்திகனுன பிதாவுக்கு இதைக் கண்டதும், மிகுந்த கோபம் உண்டாயிற்று. இப்பழக்கத்தை எப்படி யாகிலும் நிறுத்திவிடவேண்டும் என்று அவன் பலவாறு முயன்று ப்ரஹ்லாதனை மிகுந்த கஷ்டப்படுத்திப் பார்த் தான். அந்தக் கஷ்டங்களிலிருந்து பகவான் அனுக்ர ஹத்தால் ப்ரஹ்லாதன் தவருது தப்பித்துக்கொண்டு வருவதைக் கண்டு ஆச்சரியமடைந்த ஹிரண்யனுக்கு முன்னிருந்த கோபம் அதிகரித்தது. அப்பொழுது தனது ஸிம்ஹாஸனத்தை விட்டுக் கீழே இறங்கி உருவின கத்தி யுங்கையுமாய் ப்ரஹ்லாதன் அருகில் வந்து “உனது ஹரியைக் காட்டு பார்ப்போம், அவரையும் உன்னையும்

RAMANANDAPADHYAYA
S. V. M. SWAMINATHAIYAR LIBRARY

சேர்த்துக் கொன்றுவிடுகிறேன்" என்று கர்ச்சித்தான். சற்றேனும் அச்சமடையாத அச்சிறுவன் "அவர் தூணி லும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் அவர் எங்கும் இருப்பார்" என்றான்.

அப்பொழுது ஹிரண்யன் "இந்தத் தூணில் இருந் தால் அவன் உன்னை வந்து ரக்ஷிக்கட்டும், நான் இப்பொ ழுது உன்னை வெட்டப் போகிறேன்" என்று கர்ச்சித்துக் கொண்டு அருகில் இருந்த தூணைக் காலால் உதைத் தான். உடனே அண்டங்கள் பிளக்கும்படியான சிரிப்பு சப்தம் எழ, தூண் படீர் என்று பிளந்து, அதன் உள் ளிருந்து பகவான் நரசிங்க மூர்த்தியாக வெளிவந்து கொடியவனான ஹிரண்யகசிபுவைக் கொன்று தமது பக்தனான ப்ரஹ்லாதனைக் காப்பாற்றினார். அப்பொ ழுது அவன் பகவானை நோக்கி வெகுவாகத் துதித்து முடிவில் "எனக்குப் புழு, புல், பூண்டு முதலிய தாழ்ந்த ஜன்மங்கள் வந்தாலும் வரட்டும், அப்பொழுதுகூட உமது பக்தி என்னைவிட்டு அகலாது இருந்தால் போதும்" என்று பிரார்த்தனை செய்து பகவான் கோபாவேசத்தை மாற்றினான்."

—பாகவதம், 7-வது ஸ்கந்தம்.

## 24. ஈச்வரன் ஸர்வ வ்யாபி (2)

ம்ருகண்டு என்ற ஒருமஹரிஷிக்கு,வெகுநாள் பிள்ளை யில்லாமல் போக பரமசிவத்தைக் குறித்துத் தவம் இருந்து பதினாறு வயது உள்ள ஒரு ஸத்புத்திரனைப் பெற்றார். அப்பிள்ளைக்கு மார்க்கண்டேயர் என்று பெயர். அவருக்கு வயது வந்ததும், தமக்கு ஆயுஸ் இன்னம்

கொஞ்சம்தான் இருக்கிறது என்று தமது பெற்றோரால் அறிந்துகொண்டு வனம் சென்று அங்கே கடவுளைச் சிவ லிங்கரூபமாக மிகுந்த மனஉறுதியுடன் அவர் பூஜித்துவந் தார். மார்க்கண்டேயர் முடிவுகாலம் வந்ததும்,யமன் தனது தூதர்கள் மூலமாய் அவர் உயிரைக் கவர, பலவாறாக முயன்றான். ஒன்றும் பயன்படாமற்போகத், தானே அவர் தவம் செய்யும் இடம் வந்து பார்த்தான். அவரது தவக்கனலால் அவரிடம் அணுகமுடியாமற் போக, யமன் அவரைப் பலவாறாக அழைத்துப் பார்த் தான். எல்லாம் வீணானதுகண்டு தனது காலபாசத்தைச் சுழற்றிப்போட யமன் யத்தனித்ததைக்கண்டு மார்க் கண்டேயர் "எங்கும் நிறைந்த பரம்பொருளே, நீரே கதி" என்று மிகுந்த பரபரப்புடன் சிவலிங்கத்தைக் கட்டிக்கொண்டார். அப்பொழுது, முன்பின் யோசியாது தனது கால பாசத்தை லிங்கத்தைச்சுற்றிலும் கூடப் போட்டு இழுக்கத் தொடங்க, லிங்கத்தினுள் ஓர் பெரிய சப்தம் உண்டாயிற்று. யமன் திடுக்கிட்டுத் திகைத்து நிற்கையில், லிங்கம் பிளந்து அதனுள் இருந்து பகவான் மிகுந்த கோபத்துடன் வெளியானார். நெற்றிக்கண் திறந்தவண்ணமாகவே இருந்தது. கையில் இருந்த சூலத்தால் யமனைக் குத்திக் காலால் உதைத்துத் தள்ளி விட்டு மார்க்கண்டேயரிடம் யமன் அணுகாவண்ணம் அவ ருக்கு என்றும் பதினாறு வயதாக இருக்கும்படி அனுக்ர ஹித்தார். மார்க்கண்டேயருக்கு அன்றுமுதல் யமபாதை நீங்கிவிட்டது.

—ஸ்காந்தம், சங்கர ஸம்ஹிதை.

# 25. ஈச்வரன் ஸர்வ சக்திமான் (1)

பாண்டவர்களுக்காகப் பகவான் தூது சென்றகாலத்தில், அவரைத் திரும்பிப் பாண்டவர்களிடம் போகவிட்டால் தமக்கு ஜயம் வராது என்று துர்யோதனன் எண்ணித், தன் துஷ்ட ஸ்நேகிதர்களான சகுனி, கர்ணன் துச்சாஸனன் முதலியவர்களோடு இவ் விஷயத்தைப் பற்றிக் கலந்து யோசித்தான். மறுநாள் ஸபைக்கு வரும் பொழுது, அன்பால் கட்டப்படும் மாதவனாகிய கிருஷ்ணனைக் கயிற்றால் கட்டிச் சிறைபிடித்து விடுவது என்று அவர்கள் தீர்மானித்தார்கள். மறுநாள் பகவான் தமது தூதின் முடிவை உணர்ந்து செல்லத் துரியோதனன் ஸபைக்கு வந்தார். அவரைத் துரியோதனன் ஓர் ஆஸனத்தில் இருத்தி அவருடன் ஆழ்ந்து பேசிக்கொண்டிருப்பதுபோல நடித்தான். இப்படி யிருக்கையில், முன்னர்ச் செய்த ஏற்பாட்டின்படி சிலர், கையும் கயிறுமாய் மறைவாக வந்து கண்ணபிரானைப் பிடித்து கட்ட முயன்றனர். அவர் அருகே இருந்த விதுரர் முதலிய பக்தர்களில் ஒருவர், பகவானைக்கட்ட வருபவர்களை எதிர்த்துத் தமது கத்தியால் வீசி யத்தனித்தார். பகவான்சற்றேனும் அஞ்சாது, அவர் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தி மனக்கலக்கமின்றி உலகமளந்த பெருமாள், மிகுந்த கம்பீரமாய் அசையாது உட்கார்ந்திருந்தார். கட்டுபவர்கள் அருகே வந்துவிட்டனர். அப்பொழுது பகவான் தமது விச்வரூபத்தை எடுத்துக் காட்டி வந்தவர்களை இருந்த விடம் தெரியாமல் அடித்துக் கோரதாண்டவம் ஆடி ஸபையில் இருந்தோர் எல்லோரும் அஞ்சி நடுங்கி அசைவற்று இருக்கும்படி செய்தார். பீஷ்மாதி பக்தர்கள் பகவானைத்

துதிக்கக் கொஞ்ச நாழிகையில் அவர் தமது ஸாதாரண ரூபம் கொண்டார். உடனே "சண்டை நடப்பது நிச்சயம்" என்று முடிவு கூறி ஸபையைவிட்டு வெளி ஏறினார்.

—மஹாபாரதம், உத்யோக பர்வம்.

## 26. ஈச்வரன் ஸர்வ சக்திமான் (2)

ப்ரஹ்லாதன் தகப்பனாகிய ஹிரண்யகசிபு, தனக்கு எவ்விதத்திலும் மரணம் வாராமலிருக்கவேண்டும் என்று ஆவல்கொண்டு, ப்ரஹ்மாவை நோக்கிக் கொடிய தவம்புரிந்தான். ப்ரஹ்மா ப்ரத்யக்ஷம் ஆனதும், தனக்கு அமரத்வம் வேண்டும் என்று கேட்க அதற்கு அவர் "எனக்கு அந்த வரத்தைக் கொடுக்கமுடியாது. ஆதலால் குறிப்பாக இன்னவைகளிலிருந்து மரணம் வரக்கூடாது என்று கேட்பாயானால் நான் கொடுக்க முடியும்" என்றார். அப்பொழுது அவன் "எனக்கு இரவிலும், பகலிலும் மரணம் வரக்கூடாது, ஆகாயத்திலும் பூமியிலும் வரக்கூடாது, எவ்வித ப்ராணியாலும் மரணம் வரக்கூடாது, உயிருள்ள வஸ்துவாலும், உயிரில்லாத வஸ்துவாலும் மரணம் வரக்கூடாது, என்னைக்கொல்ல எண்ணித் தேகத்தை வெட்டுங்கால் உதிரம் கீழே சிந்தினால், ஒவ்வொரு துளியிலிருந்தும் என்னைப்போன்ற பலவான்களான ராக்ஷதர்கள் பலர் உண்டாக வேண்டும், எவ்வித ஆயுதங்களினாலும் எனக்கு மரணம் நேரிடக்கூடாது, வீட்டின் உள்ளிலும் வெளியிலும் மரணம் வரக்கூடாது" என்று இவ்விதமாகப் பல வரன்களைக் கேட்டு வாங்கிக்கொண்டு, தனக்கு நித்யத்வம் வந்துவிட்டதாகக் கர்வம் அடைந்திருந்தான். கொஞ்சகாலம் சென்றபின், இவன் தன்

பிள்ளையான ப்ரஹ்லாதனைப் பலவாருக வருத்தி மரண தண்டனைக்குத் தகுந்த குற்றம் செய்ததும், ஸர்வசக்திமானுன பகவான் மிகுந்த தந்திரமாக நரசிங்க வடிவம் எடுத்து ஹிரண்யனைத் துரத்திச் சென்று ஸந்த்யாகாலம் வரும்வரை அவனுடன் போர்செய்து அந்த ஸமயத்தில் அவனைத் தூக்கிச்சென்று ஓர் வாயில் நிலையில் உட்கார்ந்து கொண்டு, மடியின்மேல் அவனைப்போட்டு தன் கைகளில் அநேகவித ஆயுதங்கள் இருந்தும் அவைகளை எடுக்காமல் தமது நகங்களால் அவன் வயிற்றைக் கிழித்து, அவன் உதிரம் ஒரு துளிகூடக் கீழே விழாமல் உறிஞ்சிக்குடித்து ப்ரஹ்மாவின் வரங்களுக்கு ஓர்விதபங்கமும் வராமல் அவனைக் கொன்று தமது பக்தனை ப்ரஹ்லாதனைக் காப்பாற்றினுர்.

—பாகவதம், 7-வது ஸ்கந்தம்.

## 27. ஈச்வரன் ஸர்வ சக்திமான் (3)

முற்காலத்தில் பாற்கடலிலிருந்து அமிருதம் எடுக்கத் தேவர்களும் அஸுரர்களும் அதைக் கடையலாயினர். அப்பொழுது மந்திரகிரியை மத்தாகவும், வாஸுகியைக் கயிருகவும் வைத்துக்கொண்டு கடையும் தொழிலை அவர்கள் கைக்கொண்டு வருகையில், அப்பாற்கடலி லிருந்து ஒரு பெரிய பயங்கரமான கருநிறமுள்ள விஷம் தோன்றிற்று. அதற்கு ஆலாஹலம் என்று பெயர். அதுஎல்லாவற்றையும் எரித்து நாசம் செய்யத்தொடங்கவே,தேவர்களும் அஸுரர்களும் நிலைபெருது மயங்கி ஓடத்தலைப்பட்டனர். எல்லோரும் பயந்து ஸர்வஜீவதயாபரனுகிய பரமசிவத்தினிடம் சென்று சரணம் அடைய, ஸகல லோகங்களை

யும் ரக்ஷிக்கவேண்டும் என்று அவருக்கு கருணை உண்டாயிற்று. உடனே பாற்கடலை யடைந்து வெகு இலகுவாக அந்த விஷத்தைக் கையில் ஏந்தி வாயில் இட்டு கண்டத்தில் நிறுத்தித் தமது கருணையை வெளியிட்டார். தேவர்கள் எல்லாம் விஷபாதை நீங்கினது கண்டு மிகுந்த ஸந்தோஷம் அடைந்து உத்ஸாஹத்துடன் பாற்கடலைக் கடைந்து அமிருதம்பெற்று முடிவில் அமரர் ஆயினர்.

—பாகவதம், 8–ம் ஸ்கந்தம்.

---

## 28. ஈச்வரன் ஸர்வஜ்ஞர் (1)

த்ரிகூட பர்வதத்தில் பராக்ரமமுடைய ஒரு யானை இருந்தது. அதற்குக் கஜேந்த்ரன் என்று பெயர். அது வனத்தில் ஸஞ்சரித்துக்கொண்டு வரும்போது தாமரைப் புஷ்பத்தால் நிறைந்த ஒரு மடுவைக் கண்டது. அதில் இறங்கி தாகத்தைத் தீர்த்துக்கொள்ள யத்தனிக்க, அதனோடு கூடவந்த யானைகளும் அவ்வாறே செய்தன. யானைகள் மடுவில் இறங்கிவிட்டால் சும்மாவிருக்குமா ? அங்குமிங்கும் ஓடியாடி மடுவைக்கலக்கி உள்ளிருந்த ஜலஜந்துகளுக்கு மிகுந்த துன்பம் உண்டாக்கின. அதைக்கண்டு மிகவும் கோபம்கொண்ட ஒரு முதலை, கஜேந்த்ரன் காலைக் கவ்வி அதன் இரத்தத்தை உறிஞ்சத் தொடங்கிற்று. அதன் பிடியை விட்டுத் தப்பிக்க யானை எவ்வளவு முயன்றும் முடியாமற்போக ஜன்மாந்த்ர வாஸனையால் மிகுந்த அபாய ஸமயத்தில் அதற்கு ஈச்வர பக்தி உண்டாயிற்று. தனது நிலை முதலியவற்றை யெல்லாம் மறந்து ஆதி

மூலமே என்று கதறிப் பரம்பொருளை அது கூவி அழைத்தது. உடனே பகவான் அங்குத் தோன்றித் தமது சக்ராயுதத்தால் முதலையை அறுத்துக் கஜேந்த்ரனைக் காப்பாற்றினார்.

—பாகவதம், 8-ம் ஸ்கந்தம்.

## 29. ஈச்வரன் ஸர்வஜ்ஞர் (2)

பாண்டவர்கள் வனவாஸம் செய்யத் தொடங்கிய காலத்தில் அர்ஜுனன் வ்யாஸர் உத்தரவின்பேரில் மேல் நடக்கப்போகும் பாரத யுத்தத்தில் தனக்கு ஸஹாயமாய் இருக்கப் பாசுபதாஸ்த்ரம் பெறவேண்டும் என்று தீர்மானித்தான். உடனே வ்யாஸரிடமிருந்து மந்த்ரோபதேசம் பெற்றுக் கைலாஸ மலைச்சாரலை அடைந்து பரமசிவனைக் குறித்துக் கொடிய தவம் செய்யத் தொடங்கினான். இடையில் வந்த தடைகளையெல்லாம் கவனியாது அவன் செய்யும் தவம் உலகம் எங்கும் பிரஸித்தமானது. அர்ஜுனன் பாசுபதம் பெற்றால் எங்கே தாம் பாண்டவர்களை ஜயிக்க முடியாமற் போய் விடுமோ வென்று பயந்து, துர்யோதனன் தன் தோழனான மூகாஸுரனை ஏவி, எவ்விதத்திலாவது தவம் பலிக்கும் முன்னர் அர்ஜுனனைக் கொன்று விடும்படி ஏற்பாடு செய்தான். இவ்வஸுரன் பெரிய காட்டுப் பன்றி உருவங்கொண்டு அர்ஜுனன் தவம் செய்யும் இடம் வந்து அருகிலிருந்த புதரில் மறைந்து அவன் மேல் பாயத் தருணம் பார்த்துக்கொண்டிருந்தான். எல்லாம் அறிந்த பரமசிவன், அப்பொழுதே ஒரு வேட உருக்கொண்டு, தம்மைச் சேர்ந்தவர்கள் தாம் எடுத்த வே

டத்திற்குத் தகுந்த உருவுடன் சூழ்ந்துவரக் காட்டுள் நுழைந்து வேட்டையாடி வருவதுபோல் அங்கு வந்து சேர்ந்தார். தூரத்திலிருந்தே மூகாஸுரப்பன்றி ஒளிந் திருப்பதைக் கண்டு அதன்மேல் ஓர் அம்பு எய்தார். அர்ஜுனனும் இதற்குள் ஓர் அம்பு எய்யப், பன்றி இறந்து விழுந்தது. அப்பொழுது வேடர்களின் நியாயப் படி அர்ஜுனனைச் சண்டைக்கு இழுத்து அதில் அவன் காட்டிய பராக்கிரமத்தைக் கண்டு வியந்து அவனை அனுக்ரஹித்து பாசுபதம் கொடுத்து அதனை உபயோ கிக்கும் முறையையும் அவனுக்கு அருளிச்செய்தார்.

—மஹாபாரதம், ஆரண்யபர்வம்.

## 30. அவதாரங்கள்

பகவானால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகம் கஷ்டத் துக்கு உள்ளாகுங்கால், அதை நிவர்த்திக்கும்பொருட்டு கருணை நிதியாகிய கடவுள் அவதாரங்கள் எடுப்பது வழக் கம். அவைகளுள் முக்கியமாக எடுத்துக் கூறப்பட்டவை மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களே. மஹாவிஷ்ணு வும் பரமசிவனும் அநேக அவஸரங்களுக்கு ஏற்ப அநேக அவதாரங்கள் எடுத்திருக்கின்றனர். அவைகளுள் பின் வரும் பத்து அவதாரங்களே முக்யமானவை.

பகவான்:—

1. ப்ரஹ்மாவிடமிருந்து வேதங்களைத் திருடி கட லிற் கொண்டுபோய் ஒளித்துவைத்த மதுகைடபர் எனும் அஸுரர்களை மத்ஸ்யாவதாரம் எடுத்துக்கொன்று அவை களை ஸ்வாயம்புவ மனுவுக்கு உபதேசித்து அவரை ப்ரள யத்திலிருந்து காப்பாற்றினார்.

2. அம்ருதத்துக்காகத் தேவாஸுரர்கள் பாற்கடலைக்கடைய நாட்டிய மந்த்ரகிரி கீழே அழுந்தாதபடி அடியில் கூர்மரூபமாய் இருந்து தாங்கினார்.

3. ப்ரளய நீரில் பூமியைப் பாய்போல் சுருட்டிக் கொண்டு எடுத்து மறைந்த ஹிரண்யாக்ஷனை வராஹாவதாரம் செய்து கொன்று பூமியைத் தமது கொம்பால் முன்னிருந்த ஸ்தானத்தில் கொண்டுவந்து நிறுத்தினார்.

4. எளிதில் இறக்கக்கூடாதென்ற வரம் வாங்கினவனும், பகவத் த்வேஷம் நிறைந்தவனும், பக்த சிரோமணியான தன் பிள்ளை ப்ரஹ்லாதனைப் பலவிதமாய் வருத்தினவனுமாகிய ஹிரண்யகசிபுவை, நரஸிம்ஹ ரூபமாகத் தூணில் இருந்து வெளிப்பட்டுக் கொன்று தன் பக்தனைக் காப்பாற்றினார்.

5. தேவதைகளை இருந்தவிடம் தெரியாது அடித்து நெறிதவறாது அரசாண்டு வந்த பக்திமானும் கர்விஷ்டனுமான மஹாபலியிடம் வாமன ரூபியாய்ச் சென்று மூன்று அடி மண் யாசித்துப் பெற்று, உடனே பெரிய திருவிக்ரம வடிவம் கொண்டு எல்லா உலகையும் இரண்டடியால் அளந்து மூன்றாவது அடியை மஹாபலி தலையில் வைத்து அவனைப் பாதாளத்திற்கு அனுப்பி தேவதைகளைக் களிக்கச் செய்தார்.

6. நெறிதவறி அரசாண்டு ப்ராஹ்மணர்களை மிகக் கஷ்டப்படுத்தி ராஜதர்மம் நிலை குலையும்படி செய்த க்ஷத்ரியர்களைப், பரசுராமாவதாரம் செய்து தம் தகப்பனாரை அவர்களுள் ஒருவன் கொன்ற காரணத்தை முன்

னிட்டு 21 முறை கொன்று அவர்கள் உதிர மடுக்களில் தம் தகப்பனுருக்கு சிரார்த்தம் செய்தார்.

7. ஸர்வ லோகங்களையும் தனது வரபலத்தை முன்னிட்டுக்கொண்டு கஷ்டப்படுத்தி வந்த ராவணனை ராமாவதாரம் செய்து, தம் பெண்சாதியை அவன் எடுத்துப்போன காரணத்தை வைத்துக்கொண்டு வானர ஸஹாயத்தைப் பின்பற்றி நிர்மூலமாக்கி, ராஜதர்மத்தை நன்ருக அனுஷ்டித்துக் காட்டினுர்.

8. கிருஷ்ணுவதாரம் செய்து பாரதயுத்தத்தில் துஷ்டர்களைக் கொன்று பூபாரம் நீக்கி பக்தியை நிலைநிறுத்தி வேத ரஹஸ்யங்களை வெளிப்படுத்தி உலகில் தர்மத்தை நிலை நிறுத்தினுர்.

9. மகா கர்விகளான ஜனங்களுக்குக் கர்மத்தில் நம்பிக்கை குறையும்படியாகப் புத்த அவதாரம் செய்து பக்குவம் அடையாத காலத்தில் ஞான உபதேசம் செய்தார்.

10. கலியுகம் முடிவில் உலகில் அதர்மம் மேலிடும் பொழுது ஒரு சிஷ்டர் குலத்தில் கல்கி அவதாரம் செய்து குதிரையின் மேலேறிக் கத்தியை மாத்திரம் ஆயுதமாகக் கொண்டு கொடியவர்களை வெட்டிச்சாய்த்துப் பூமியை வலமாக வந்து தமது ஊர்சேரும் காலத்தில் பெற்றோர் இறந்திருப்பதைக் கண்டு மறைந்துவிடுவார். பின்னர் ஸத்ய யுகம் தொடங்கும்.

முற்கூறிய அவதாரங்கள் எல்லாம் :—

மீனமை கோலமெடு நரசிங்கமாகி நில
விறகா வளர்ந்த குறளாய்

ஆனுது சீறுமழு வில்லுங்கொள் வெல்லு
　　முளை யலமுற்ற செங்கையவராம்
வானுடர் சென்றுதொழ மண்ணு டரைவரையும்
　　வாழ்விக்க வந்த வடிவாம்
நானு விதங்கொள்பரி யாளாகி நின்றருளும்
　　நாராயணுய நமவே.

என்ற வில்லிபுத்தூரார் பாட்டில் அமைந்து கிடைப் பதைக்காண்க. மேற்கூறிய அவதாரங்களின் நோக்கம்:—

(1) ஸாதுக்களை ரக்ஷிப்பது, (2) துஷ்டர்களை ஒழிப்பது, (3) தர்மத்தை நிலைநிறுத்துவது ஆகிய இவைகளே என்று கீதையில் பகவான் சொல்லியிருக் கிறுர். —பாகவதம்.

---

## 31. மூர்த்தி துவேஷம் கூடாது

முற்காலத்தில் ப்ரஹ்மாவின் பிள்ளையாகிய தக்ஷ ப்ரஜாபதி தமது பெண்ணுகிய ஸதி தேவியை பரம சிவனுக்கு விவாகம் செய்து கொடுத்தார். பின்னர் அவர் ஒரு யாகம் நடத்துகையில் அங்கிருந்த பரமசிவம் தனக்கு மரியாதை செய்யாதது கண்டு அவரைத் தனக்கு ஸாதாரணமான மாப்பிள்ளை என்று எண்ணி அவரிடம் துவேஷம் பாராட்டத்தொடங்கிஞர். இப்படிக் கொஞ்ச காலமாகிய பின்னர், அவர் ஒரு சிறந்த யாகம் செய்வதாக யத்தனித்து தமது மாப்பிள்ளையாகிய பரமசிவனுக்கு ஹவிர்ப்பாகம் கொடுக்காமலே யாகத்தை நிறைவேற்று வது என்ற ஒரு துர் எண்ணம் கொண்டார். யாகம் மிகச் சிறந்ததானதால் தேவர்கள் எல்லோரும் அந்த யாகத் துக்குப் புறப்பட்டனர். இதை யறிந்த ஸதி மனதில்

தன் தகப்பனைப் பார்த்து வெகு நாளாய் விட்டது என்ற எண்ணம் தோன்ற, பாமசிவனிடம் சென்று "இந்த யாகத்திற்குப் போக எனக்கு அனுமதி கொடுக்க வேண்டும்" என்று கேட்டாள். அதற்குப் பாமசிவம் "எனது உண்மை ஸ்வரூபத்தை யறியாது உன் தகப்பனார் என்னிடம் விரோதம் பாராட்டுகிறார். ஆதலால் அங்குச் சென்றால் உனக்கு ஏதாவது அவமானம் நேரிடும், அதினால் பெரிய ஆபத்துகள் உண்டானாலும் உண்டாகும். போகவேண்டாம்" என்று மறுத்துக் கூறியும், தகப்பன்மேலிருந்த பிரீதியால் ஸதி மன்றாடி யாகத்திற்குப் போய்வர, பாமசிவனிடமிருந்து அனுமதி பெற்றுச் சென்றாள். சென்றவிடத்தில் தகப்பனார் அவளை லக்ஷ்யமே செய்யவில்லை. இதனாலே அவளுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. உடனே தகப்பனை நோக்கி, 'யோகமூர்த்தியாகிய பாமசிவத்தின் உண்மை ஸ்வரூபம் அறியாது இவ்வாறு நீர் அவரைத் துவேஷிப்பது எனக்கு மிகவும் வருத்தமா யிருக்கிறது. உமது பெண் என்று சொல்லிக்கொள்வதற்குக்கூட எனக்கு வெட்கமாக இருக்கிறது. பாபியாகிய உன்னால் உண்டாக்கப்பட்ட தேகத்தை இதோ விட்டுவிடுகிறேன்' என்று கூறி யோகாப்பியாஸம் செய்து அதனால் உண்டான அக்கினியில், யாகசாலையில் இருப்பவர் முன்னிலையில் ப்ரவேசம் செய்தாள். இதைக் கேட்டதும் பாமசிவனுக்கு மிகுந்த கோபம் வர, அப்பொழுது வெளியான வீரபத்திரர் அவர் உத்திரவுப்படி தக்ஷன் யாகசாலை வந்து அவன் தலையை வெட்டி யாகத்தை அழித்தார். பின்பு தேவர்கள் எல்லோரும் பாமசிவத்தைத் துதிக்க,

அவா தக்ஷிணை ஆட்டுத்தலையுடன் எழுந்திருக்க அருளத் தம் ஸந்நிதானத்திலேயே யாகம் தடையின்றிப் பூர்த்தி பெற்றது. அதில் மஹாவிஷ்ணு ஸம்பந்தமாக முக்கிய ஆஹுதி கொடுத்த காலத்தில் மஹாவிஷ்ணு தோன்றி "எனக்கும் ப்ரஹ்மாவுக்கும், பரமசிவனுக்கும் யாதொரு பேதமும் இல்லை, பேதப்படுத்தாது வழிபடுபவர்களுக்கே பரமபதம் எளிதில் ஸித்திக்கும். அவ்வாறின்றி எங்களுள் யாரிடத்திலாவது த்வேஷம் பாராட்டுபவனுக்குத் தக்ஷனது கதியே" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

ஹிரண்யகசிபு என்ற ராக்ஷஸன் தனது ஸகோதரன் ஹிரண்யாக்ஷன் மஹாவிஷ்ணுவால் வராஹாவதாரத்தில் கொல்லப்பட்டான் என்று கேள்விப்பட்டு, ஹரியிடம் த்வேஷம் கொண்டு ப்ரஹ்மாவை நோக்கித் தவம் புரிந்து அற்புத சக்திகளைப் பெற்று மஹாவிஷ்ணுவையும் அவர் பக்தர்களையும் மிகக் கஷ்டப்படுத்தி, முடிவில் மஹா விஷ்ணுவால் இறந்தான். இவன் விஷ்ணுவைத் த்வேஷித்ததால் நாசமடைந்தவன். இம்மாதிரியே ராவணனும் பரமசிவத்தைச் சிறந்தவராக எண்ணி விஷ்ணுவைத் த்வேஷித்து முடிவில் நிர்மூலமாய் அழிந்தான். இதே மாதிரி வைஷ்ணவர்கள் ஆராதிக்கும் விஷ்ணு, சைவர்கள் ஆராதிக்கும் சிவன், இன்னும் மற்றைய மதஸ்தர்கள் ஆராதிக்கும் பரதெய்வங்கள் ஆகிய எல்லாம் முழுமுதற் கடவுளின் வெவ்வேறு அவஸரங்களாகையால், அவர்களைத் தாழ்வாக எண்ணுவது பாபத்திற்கு இடமாகும். அவ்வாறு எண்ணுபவர்களுக்குத் தமது ஆராதனையிலேயே ஸித்தி உண்டாகாது. தாம் ஆராதிக்கும் தெய்வம்

பரதெய்வம் என்றும் மற்றைய தெய்வங்களெல்லாம் இந்தத் தெய்வத்தின் ரூபாந்த்ரங்கள்தான் என்றும் ஸம புத்தியுடன் த்வேஷமின்றி வழிபடுவதே மேலான பதவியை அடைவிக்கும்.

ஔவையாரும் தெய்வம் இகழேல் என்று கூறியிருக்கிறாள்.

—பாகவதம் 4,7 ஸ்கந்தங்கள், ராமாயணம்.

---

## 32. நாம ஸங்கீர்த்தனம்

சிறந்த ப்ராஹ்மணர் குலத்தில் அஜாமிளன் என்ற ஒருவன் இருந்தான். அவன் ப்ராஹ்மணர்களுக்கு ஏற்பட்ட நெறி தவறாது, நடந்துகொண்டு வந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் அவன் தகப்பனார் காடு சென்று தமக்குக் காய் கனி கிழங்கு முதலியவைகளைச் சேகரித்துக்கொண்டு வரும்படி சொன்னார். போய்வரும் வழியில் ஒரு சூத்ரன் அவன் அடிமைப்பெண் ஒருத்தியோடு வெகு உல்லாஸமாய் விளையாடிக் கொண்டிருந்ததைக் காண அவன் மனம் கெட்டுப்போய்விட்டது. அன்று முதல் அவனுக்கு எப்படியாவது அந்த அடிமைப்பெண்ணை விவாகம் செய்துகொள்ள வேண்டும் என்ற பைத்தியம், பிடித்துவிட்டது. நாளடைவில் தன் குணவதியான பெண் சாதியைப் பறக்க விட்டுவிட்டு அந்த அடிமைப் பெண்ணுக்குத் தனது ஸொத்துக்கள் எல்லாவற்றையும் கொடுத்து அவளோடு வெகுநாள் வாழ்ந்து வந்தான். அவளிடம் பத்துக் குழந்தைகள் உண்டாயின. தன் குடும்பத்தைக் காக்கக் கெட்ட வழியிலேயே முயன்று வந்தான். தன் ப்ராஹ்மண நிலையைக்கூட அவன்மறந்துவிட்டான். அவன்

குமாரருள் கடைக்குட்டியான நாராயணன் என்பவனிடம் அவனுக்கு அதிக ப்ரீதி. இப்படியிருக்கையில் அவனுக்கு ஓர் பெரிய நோய் கண்டது. அதில் உயிர்போகுந் தருணம் என்று சொல்லத்தக்க நிலையும் அவனுக்கு வந்துவிட்டது. அப்பொழுது அவன் மனம் கடைக்குட்டியான நாராயணன் மேலேயே பாய்ந்தது. இப்படியிருக்கையில் அவன் கண்முன் குரூரமான மூன்று உருவங்கள் தென்பட்டன. அவன் மிகப் பயந்து கிட்டே விளையாடிக் கொண்டிருந்த கடைக்குட்டியை நாராயணா என்று குளறிய மொழியால் கூவி யழைத்தான். உடனே ஸ்ரீமன் நாராயணரது தூதர்களும் வந்து சேர்ந்துவிட்டனர். அப்பொழுது யமதூதர்கள், "இந்த அஜாமிளன், மஹாபாபி, தன் நிலையைக் கெடுத்துக்கொண்டான். இவனை யமபட்டணம் கொண்டுபோய்த் தகுந்த தண்டனைக்கு ஆளாக்கப் போகிறோம்" என்றனர். அதற்கு ஹரிதூதர்கள் "இவன் எவ்வளவு பாபியாகிலும், இந்த ஆபத்ஸமயத்தில் யாது காரணத்தாலோ, ஜகந்நாதராகிய எங்கள் ப்ரபுவின் நாமத்தை உச்சரித்து விட்டான். இவன் பாபங்களெல்லாம் போய்விட்டன. நீங்கள் இவனைத் தொடக்கூடாது" என்று தடுத்து யமதூதர்களை ஓட்டிவிட்டனர். இந்த ஸம்பாஷணை அஜாமிளன் காதில் பட, அவன் மனம் பச்சாத்தாபத்தால் உருகியது. உடனே தனது மனதை யடக்கி பகவான் பாதாரவிந்தங்களில் வைக்க மனப்பூர்வமாய்ப் பாடுபட்டான். உடனே மனம் பரிசுத்தமாயிற்று. நோயும் தீர்ந்தது. உடனே தன் குடும்பத்தைக் கவனியாமல், ஹரித்வாரம் சென்று மனதைப் பகவானிடம் செலுத்தி நிஷ்டையில் மூழ்கிக் கொஞ்சநாள் இருந்தான்.

ஆயுள் முடிவுகாலம் வர, முன்னர் அவன் கண்ட ஹரி தூதர்கள் அவன் முன் தோன்றினர். அவர்களுக்குத் தகுந்த வந்தனை வழிபாடுகள் செய்து அங்கேயே தனது தேகத்தை நழுவவிட்டான். உடனே, மேலான பரம பதத்தை யடைந்தான்.

பகவன் நாமம் உச்சரித்தமாத்திரத்தில் மனதைச்
சுத்தப்படுத்தி நல்ல வழியில் செலுத்தும்.

பாகவதம், 6-ம் ஸ்கந்தம்.

---

## 33. மானஸ பூஜையின் சிறப்பு

அபிமன்யு இறந்தான் என்று மிகுந்த வியாகூலத்தோடு மறுநாள் இன்னபடி நடந்துகொள்வது என்று அறியாதவனுய் குழப்பத்துடன் அர்ஜுனன் 13-ம் நாள் இரவில் உறங்குகையில், பகவானோடு கைலாஸம் சென்றதாகக் கனவு கண்டான். அப்பொழுது அவனுக்குத் தன்னைவிட அதிக சிவபக்தி உடையவர் ஒருவரும் இல்லை, பீமன் கேவலம் காட்டாள், அவனுக்குப் பக்தி என்பதே கிடையாது என்ற எண்ணங்கள் இருந்தன. கைலாஸத் தருகில் போகையில் பகவானது மாயையால் ஒருமனிதன் ஒரு பெரிய வண்டிநிரம்ப வாடிய புஷ்பங்களைக் கொண்டு வருவதைஇருவரும் கண்டார்கள். அர்ஜுனன் 'இதென்ன' என்று வண்டி இழுத்து வருபவனைக் கேட்க, வேலையில் கருத்தாக இருந்த வேலைக்காரன் ஒன்றும் மறுமொழிகூற வில்லை. உடனே இருவரும் அவன் என்ன செய்யப்போகிறுன் என்பதைப் பார்க்க அவன் பின்னே செல்ல அவன் அப்புஷ்பங்களை ஒரு மலைபோல் குவித்திருந்த வாடல்

புஷ்பக் குவியலிடம் கொண்டுபோய்க் கொட்டுவ தைக் கண்டார்கள். அங்கு நின்றுகொண்டிருக்கையில் அநேக வண்டிகள் நூற்றுக்கணக்காக வாடல்புஷ்பங் களைக்கொண்டு கொட்ட, அதைக் கண்ட மாத்திரத்தில் அர்ஜுனனுக்கு அவைகளின் உண்மையை அறிய வேண்டும், என்ற அடங்கா ஆவல் உண்டாயிற்று. அவன் அவ்வேலை செய்பவரை எவ்வளவோ தரம் கேட்ட போதிலும், அவர்கள் மறுமொழிகூடச் சொல்ல ஒழி வின்றி விரைவுடன் தமது வேலையையே செய்துகொண் டிருந்தனர். வெகு நாழிகை அர்ஜுனன் அவர்களை அடிக் கடிக் கேட்டதின்பேரில்,ஒருவன் மாத்திரம் வெகு கோபத் துடன் பின்வருமாறு சொன்னான். "எங்களுக்கு வேலை யோ அஸாத்தியம். நீர் எங்களை இவ்வாறு தடைசெய் வது ஸரியல்ல. 500 வண்டிகள் நிர்மால்யங்கள்தான் நாங் கள் இங்கு கொண்டுவந்து கொட்டியிருக்கிறோம்.இன்னும் 500 வண்டி புஷ்பங்கள் சிவபெருமானது பாதத்தில் குவிந்து கிடக்கின்றன. நேற்றுப் பாண்டவ வீரனாகிய பீமஸேனன் செய்த பூஜையில் விழுந்த புஷ்பங்கள் இவை. அவன் இன்று பூஜை தொடங்குவதற்கு இன் னும் கொஞ்ச நாழிகைதான் இருக்கிறது. அதற்குள் நாங்கள் இந்நிர்மால்யங்கள் எல்லாவற்றையும் எடுத் தெறிந்துவிட வேண்டும். இனிமேல் எங்களை இவ்வாறு தடை செய்யாதேயும்" என்று சொன்னான். இதைக் கேட்டதும் அர்ஜுனனுக்கு ஆச்சரியம் அதிகரிக்க, "அர்ஜுனனா இவ்வாறு பூஜை செய்வது அல்லது பீம ஸேனனா?" என்று அவன் அந்த வேலைக்காரனைக் கேட் டான். அதற்கு அவன் "பீமன்தான் இப்பூஜை செய்

தது. அர்ஜுனனது பூஜையெல்லாம் வெறும் ஆடம்பரம்தான்" என்று மறுமொழி கூறுகையில் அங்கு ஒரு மனிதன் ஒரு சிறு கூடையில் கொஞ்சம் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு வருவதை அர்ஜுனன் கண்டான். உடனே பகவான் அவனை நோக்கி "இது யார் பூஜை செய்தது, என, அவன், இது அர்ஜுனன் என்ற டம்பாசாரியால் செய்யப்பட்ட பூஜை" என்றான். அப்பொழுது தான், "தான் செய்யும் ஆடம்பரமான பூஜையைவிட, பீமன் சாப்பாட்டிற்கு முன் சற்று மனதாரச் செய்யும் பூஜையே மேல்" என்று அர்ஜுனனுக்குப் பட அவன் கர்வம் அடங்கிப்போயிற்று.

பகவானை மனதார ஆராதியாமல் எவ்வளவு ஆடம்பரத்துடன் பூஜை செய்தபோதிலும் பயன் இல்லை.

பாரதம், துரோணபர்வம்.

---

## 34. பகவத் தர்சன விசேஷம்

உத்தானபாதனது பிள்ளையாகிய த்ருவன், தகப்பன் மடியில் உட்காரக்கூடாதென்று தனது சிற்றன்னை கூறிய கொடுஞ்சொல்லால் மிகுந்த துக்கமடைந்து, தன் தாயின் உபதேசத்தால் தவம்செய்ய கானகம் சென்றான். போகும் பொழுது, தன் தகப்பன் மடியில் எப்படியாவது உட்கார்ந்து மேலான ஸௌந்த பதவியை அடைய வேண்டும் என்ற ஆவலே த்ருவனுக்கு அதிகமாக விருந்தது. சிறு பிள்ளையாதலாலும், தாயார் கூறிய வாக்கின் பெருமையாலும் இவனுக்கு மாறாத திடம் உண்டாக,வழியில் ஏற்பட்ட தடைகளை யெல்லாம், எளிதில் தாண்டிக்கொண்டு

காட்டிற்குச்சென்று ஆறுமாதம் கொடிய தவம் செய்தான். அதன் முடிவில் பகவான் ப்ரத்யக்ஷமாக அது வரையிலும் பேசாத த்ருவருக்குத்தானகவே ஒரு ச்லோகம் உண்டாக உடனே பகவானை “யோந்தப்ரவிச்ய” என்று தொடங்கி துதிக்க ஆரம்பித்தார். அதன் பொருள், “எவ்வித பலத்திற்கும், இடனகவுள்ள ஈச்வரன், தன்னுடைய சக்தியால் என்னுள்ளே, புகுந்து, என்னுடைய வாக்கு. கை, கால், அங்கங்கள், உயிர், இன்னும் மற்றைய எல்லாவற்றையும் காப்பாற்றுகின்றான். இப்படிப்பட்ட பரம்பொருளுக்கு நமஸ்காரம்” என்பதே. இவ்வாறு பகவானைத் தரிசித்துத் துதித்ததும் த்ருவருக்கு மனம் சுத்தமாயிற்று. தாம் முன்னர் கோரிவந்த எண்ணங்கள் எல்லாம் கழன்றன. “உனக்கென்ன வேண்டும்?” என்று பகவான் கேட்க, த்ருவஸ்வாமி, “எனக்கு அழியாப் பதவி வேண்டும், அல்லது அது ஸித்திக்கத்தக்க ஸத்ஸங்கம் வேண்டும்” என்று கேட்டாரே யொழிய “என் தகப்பன் மடியில் உட்காரக்கூடிய பதவி வரவேண்டும்” என்று கேட்கவில்லை. எல்லாமறிந்த பகவான் அவர் கேட்டதைக் கொடுத்து அப்பதவிக்குவரும் முன்னர், உலகில் வாழ்ந்து கீர்த்தி பெறும்படியும் அனுக்ரஹித்தார்.

பகவத் தர்சன விசேஷத்தால் மனப்பற்று நீங்கும்.

—பாகவதம், 4-ம் ஸ்கந்தம்

41150

## 35. மனதின் சஞ்சலம்

மனது அடங்குவது மிகக் கஷ்டம். அதை மனக் குரங்கு என்று நன்றாகப் பெயரிட்டழைத்திருக்கின்றனர் பெரியோர். ஒரு குரங்கொன்றிருந்தது. அது ஸ்பாவத்திலேயே மிகுந்த சஞ்சலமுடையதாக விருந்தது. இது போதாதென்று அது கள்ளுண்டு விட்டது. பின்பு அதை ஒரு தேளும் கொட்டியது. இதனால் குரங்கு குதித்துக் கொண்டு ஓடத்தொடங்க, அது மிகுந்த கஷ்டத்தை யடைந்தது. இதைப் பூர்த்திசெய்ய அதை ஓர் பிசாசும் பிடித்துவிட்டது. இந்தக் குரங்கின் சஞ்சலத்தை யாரால் வர்ணிக்கமுடியும் ? இந்தக் குரங்குக்கு ஸமானம் நமது மனது என்று ஞானிகள் கூறுவர். அது ஆசையெனும் கள்ளைக் குடித்து அலங்கோல தசையை அடைகிறது. மற்றவர்கள் ஆசை பூர்த்தியாவதைக்கண்டு உண்டாகும் பொறாமை என்ற தேள் கொட்ட அதிக சஞ்சலத்தை அடைகின்றது. இப்படியிருக்கையில், மனம் எண்ணிய வாறு கார்யங்கள் பூர்த்தியானால் கர்வம் என்ற பேய் அதைப் பிடித்துக்கொள்ள, அது முன்னிலும் பதின் மடங்கு அதிகச் சஞ்சலத்தை யடைகின்றது. “ இப்படிப் பட்ட மனதை யடக்குவது எவ்வாறு ” என்று கேட்ட அர்ஜுனனுக்குப் பகவான், “வைராக்யம் (ஒருவனுக்குத் தெரிந்த அல்லது தெரியாத வெளி வஸ்துக்களின் விஷயத்தில் உண்டாகும் துச்சபுத்தி) அப்யாஸம், (த்யானம் சென்றடையும் பரம்பொருளை மனம் விட்டுப்போகாது அடிக்கடி அதை ஊக்கத்தோடு மனத்தின்முன் கொண்டு வந்து நிறுத்தல்), ஆகிய இவ்விருவிதத்தால் அலையும்

MAHAMAHOPADHYAYA
...MINATHA IYER LIBRARY

மனதை நிலையில் நிறுத்தி ஸுகம்பெறலாம்" என்றார். எப்படி வெளியே ஓடி அலையும் ஒரு பசுவை முளையில் கட்டி புல்லிட்டு அடங்கி நிற்கும்படி செய்கிறோமோ, அப்படியே வைராக்யத்தால் அதை வெளியே போகாது தடுத்து அப்யாஸத்தால் அதை உள்ளேயே யடங்கி யிருக்கும்படி செய்யவேண்டும்.

மனதை ஸாவதானமாய் அடக்கவேண்டும். அவஸரம் கூடாது.

---

## 36. தேக தத்வங்கள்

முன் காலத்து யுத்த முறைப்படி ஒவ்வொரு பெரிய வீரனுக்கும் தகுந்தபடி ஸாதனங்கள் இருத்தல் வேண்டும். முக்யமாக, அவன் ஏறி யுத்தகளம் முழுவதும் எளிதிற் சென்று சண்டைசெய்து வர எளிதில் ஸஞ்சரிக்கக் கூடியதான ஓர் நல்ல ரதம் வேண்டும். அதில் சிறந்த குதிரைகள் கட்டி இருத்தல் வேண்டும். அக்குதிரைகளின் கடிவாளங்கள் மிகப் பலமானவையாக இருக்க வேண்டும். இவைகளைப் பிடித்துக்கொண்டு தேரை நன்ருக நடத்தத் தகுந்த ஸாரதி அவச்யம் வேண்டும். எது இருந்தபோதிலும் ஸாரதியின் திறமையாலேயே ரதிகன் மேன்மை யடையவேண்டும். இவன் சிறந்தவனுக இருந்தால்தான் ரதத்தைத் தகுந்த விடத்திற்குத் தகுந்த காலங்களில் ஸரிவர நடத்திச்சென்று ரதிகனுக்கு வேண்டிய ஸகாயம் செய்ய முடியும். ரதிகன் எவ்வளவு ஸமர்த்தனுயிருந்த போதிலும், ஸாரதி தகுந்தவனுய் இல்லாவிடில் சோபிக்கவேமாட்டான். திறமை வாய்ந்த ஸாரதியின்



ஸ்ரீ கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு ஸ்வதர்மானுஷ்டானத்தை
உபதேசம் செய்தல்

—33-ம் பக்கம் பார்க்க



கஜேந்திர மோக்ஷம்

— 50-ம் பக்கம் பார்க்க

ஸன்னிதான மாத்திரத்திலேயே நேர் தகுந்த வழிகளில் ஸஞ்சரித்து ரதிகனுக்கு யுத்த பூமியில் மிகுந்த சிறப்பை யுண்டாக்கும். இதுபற்றியே மஹா பாரத யுத்தத்தில் அர்ஜுனனை ரதிகனாகவும், அவனைவிட மிகச் சிறந்தவ ராகிய கிருஷ்ண பரமாத்மாவை ஸாரதியாகவும் அமைக் கப்பட்டிருக்கிறது.

முற்கூறிய ரதிகனே ஜீவாத்மா, ரதமே தேகம், குதிரைகளே இந்திரியங்கள் (வெளி விஷயங்களைக் கிர ஹிக்கும் கருவிகள்) கடிவாளங்களே மனஸ், ஸாரதியே புத்தி, ரதம் ஸஞ்சரிக்கும் இடங்களே இந்திரிய விஷய மாகிய ப்ரபஞ்சம். ஆகவே, புத்தி தெளிவாய் இருந்தால் ஆத்மாவுக்கு இந்திரியங்களால் கஷ்டம் உண்டாகாது சுகம் கிடைக்கும். புத்தி தெளிவில்லாமல் இருந்தால் இந்திரியங்களாகிய குதிரைகள், மனஸாகிய கடிவா ளங்களை அறுத்துக்கொண்டு தேகம் என்னும் ரதத்தைக் கண்டபடி மேடுபள்ளங்கள் என்னும் ஸுகதுக்கங்களில் இழுத்துச்சென்று ரதிகனாகிய ஆத்மாவை படுத்தாத பாடெல்லாம் படுத்திவிடும். இந்திரியங்களெல்லாம் அட ங்கி மனதுக்கு வசப்பட, புத்தி தெளிந்து அவை களுக்கு அரசனாக இருந்து அடக்கிவந்தால், நல்வழியே போய் ஜீவாத்மா முடிவில் ஸுகமடைவான். ஆகவே ஒவ்வொரு மனிதன் விஷயத்திலும், ஜீவாத்மா தேகம் இந்திரியங்கள், மனம் புத்தி, இந்திரிய விஷயங்கள், ஆகிய இந்தத் தத்வங்களை நன்குணர்ந்து புத்தியைச் சாஸ்திரங் களால் தெளியவைத்து இடைவிடாப் பழக்கத்தால் எல்லா விஷயங்களையும் அடக்கி ஆளும்படி செய்தால் மாருஸுகம் உண்டாகும். —கடோபநிஷத்.

# 37. ஜீவனும் ஈச்வரனும்

ஒரு பெரிய அச்வத்த மரம் ஒன்றுண்டு. அதில் இரண்டு பறவைகள் வாஸம் செய்து வருகின்றன. ஒன்று உச்சிக்கிளையில் வெகு ஆனந்தமாக உட்கார்ந்துகொண்டு இருந்தவிடத்திலேயே அசைவற்று ஸுகமாக வாழ்கின்றது. மற்றொன்றோ, கீழே கிளைவிட்டுக் கிளை தாவிக் கொண்டு, ஸதா சஞ்சலப்பட்டுக்கொண்டே யிருக்கிறது. போகும் வழியில், மரத்தின் பழம் முதலியவைகளை அது தின்றுகொண்டும் இருக்கிறது. நல்ல பழங்களைத் தின்றால், ஸுகப்பட்டுச் சற்று அசைவற்றிருக்கின்றது. கெட்ட பழங்களைத் தின்னும் காலத்து மிகக் கஷ்டப்பட்டுத் தத்தளித்து அங்குமிங்கும் பறந்தோடுகிறது. இம் மாதிரி அவஸ்தைப்படும் சில காலங்களில், தற்செயலாய் அது மேலே நோக்கும்படி நேருகிறது. அப்பொழுது அங்கே நிம்மதியாய் ஆனந்தத்தில் மூழ்கிக் கிடக்கும் அந்தப் பறவையின் தரிசனம் இதற்கு ஏற்படுகிறது. அப்பொழுது "அது எவ்வளவு ஸுகமா யிருக்கின்றது. நமக்கு மாத்திரந்தானா இந்தக் கதி, நாமும் அதைப்போல் உச்சியிலிருந்து இம்மாதிரி அசைவற்றிருந்தால் நலமாயிருக்கும்" என்று சிந்திக்கத் தன்னை யறியாமல் ஒரு கிளை மேலே ஏறுகிறது. அதற்குள், கீழே குனிந்தவிட, மேற் பறவையின் தர்சன விசேஷம் போய்விடுகிறது. மறுபடியும் அந்த ப்ரதேசங்களில் உள்ள பழவர்க்கங்களைத் தின்று மாறி மாறி ஸுகதுக்கங்களுக்கு ஆளாகிறது. இப்படிக் கிரமமாகத் துக்ககாலங்களில் மேலே நோக்க படிப்படியாய் ஏறி முடிவில் உச்சிக்

கிளையருகில் போகின்றது. திடீரென்று தான் இல்லாததுபோல ஓர் உணர்ச்சி ஒன்று தோன்ற, திடீரென்று மேல் பறவையாக மாத்திரம் சேஷிக்கின்றது. இம்மாதிரியேதான் உலகில் ஜீவாத்மாவின் நிலை. ஜீவாத்மா ஸுகதுக்கங்களில் அடிபட்டு சிற்சில துக்ககாலங்களில் ஈசன் தனது ஸுகதுக்கங்களைக் கவனியாது கர்மத்துக்குத் தகுந்தபடி படியளந்துகொண்டு ஸாக்ஷிமாத்ரமாக நிம்மதியா யிருப்பது தோன்ற, மனம் சுத்தமாகி க்ரமமாக மேன்மை யடைந்து முடிவில் தான் தனித்து இருப்பது என்ற ப்ரஞ்ஞையே இழந்து ஈச்வரனாக சேஷிக்கின்றது. —முண்டகோபநிஷத்.

## 38. ஸுகத்தின் ஸ்வரூபம்

ஒரு ப்ராஹ்மணன் ஒரு காலத்தில் அணுகமுடியாத துஷ்டமிருகங்கள் நிறைந்த ஒரு காட்டுள் வந்து அகப்பட்டுக்கொண்டான். அதில் எங்கும் கொடிய மிருகங்களின் சப்தம் அதிகமாகக் கேட்டுக்கொண்டே யிருந்தது. இதனால் ப்ராஹ்மணன் மனம் மிகப் பதறியது. அவன் இங்கும் அங்கும் ஓடத் தலைப்பட்டான். அந்தக் காட்டைச் சுற்றிலும் வலை போட்டிருந்ததாலும், வெளியே கோரமான ஒரு ஸ்திரீ கையை விரித்துக்கொண்டிருந்ததாலும் அந்த ப்ராஹ்மணனால் காட்டைவிட்டு வெளி ஏற முடியவில்லை. மேலும் அந்தக் காட்டில் பெரிதாகிய நாகங்கள் உலாவிக்கொண்டிருந்தன. அங்கு படுகுழி ஒன்று செடிகொடிகளால் அதிகமாக மூடப்பட்டிருந்தது. பயத்தால் வெருண்டு ஓடிவந்த ப்ராஹ்மணன், தலை கீழாய் அக்குழி

யில் விழுந்து செடிகொடிகளில் நன்றாய்ச் சிக்கிக்கொண் டான். அப்பொழுது அவனுக்கு அநேக கஷ்டங்கள் உண்டாயின. அந்தக் குழி அடியில் ஒரு பெரும் பாம்பு இருப்பதையும், அந்தக் குழியின் கரையில் தன்னை நோக்கி ஓர் யானை வருவதையும் அவன் கண்டு மிகுந்த துக்கத்தை யடைந்தான். அவன் தொங்கிக்கொண் டிருந்த கொடிகளின் வேரை வெள்ளை எலிகளும் கறுப்பு எலிகளும் அறுத்துக்கொண்டே யிருந்தன. அவை களின் மத்தியில் இருந்த சில தேன் அடைகளில் உலா விக்கொண்டிருந்த தேனீக்கள் இவன் விழுந்த வேகத் தால் தாக்கப்பட்டதால் இவனைக் கொட்டிக்கொண்டிருந் தன. அப்பொழுது சில தேன் துளிகள் பாாஹ்மணன் கன்னத்தில் விழுந்தன. அவைகளை மிகுந்த கஷ்டத்தின் பேரில் நக்கிக்கொண்டு அந்தத் திருப்தியைப் பெரிதாக எண்ணி தான் படும் கஷ்டங்களைச் சற்று மறந்து "இன் னும் எனக்குத் தேன் கிடைக்காதா?" என்றும், "இவ் வாறே தான் விழுந்து ஸுகம்பெறவேண்டும்" என்றும் எண்ணிக்கொண்டு, தப்புவதைப்பற்றி யோசிக்காது அங்குக் காலம் கழித்து வந்தான். உலக ஸுகங்களும் இத்தன்மையதே.

மிகுந்த துக்கம் நிறைந்த இவ்வுலக வாழ்க்கையில் இடை இடையே மிகுந்த கஷ்டத்தின்பேரில் சிற்சில ஸமயங்களில் கிடைக்கக்கூடிய நிலையில்லா திருப்தியே ஸுகம் எனப்படும்.

—மஹாபாரதம், ஸ்த்ரீபர்வம்

# 39. துக்கத்தின் ஸ்வரூபம்

ஸம்ஸப்தக யுத்தத்திலிருந்து அர்ஜுனனும் பகவானும் பதின்மூன்றும்நாள் மாலை திரும்பி வருகையில் பகவானுக்கு அபிமன்யு இறந்த ஸங்கதி தெரிய, அதை அர்ஜுனன் உணர்ந்தால் அவனும் இறக்க முயலுவானே என்ற எண்ணம் அவருக்கு வந்தது. உடனே வரும் வழியில் பகவான் தமது மாயாசக்தியால், அக்னியை வலம் வந்து தீயில் விழும் தருணமாக இருந்த ஒரு ப்ராஹ்மணனை, அர்ஜுனன் முன் தோன்றும்படி செய்தார். அர்ஜுனன் ப்ராஹ்மணனிடமிருந்து அவன் துக்கத்தின் காரணத்தை யறிந்துகொண்டு, "உன் பிள்ளை இறந்தான் என்பதனால் நீ இவ்வாறு தற்கொலை செய்து பாபத்தை ஸம்பாதிக்கலாமா, பிறந்தவன் இறப்பது ஸஹஜமாக விருக்க இதற்கு மனிதன் இவ்வளவு துக்கப்படுவது அழகன்று" என்று ஸமாதானப்படுத்தினான். அதற்கு ப்ராஹ்மணன், "உன் பிள்ளை இறந்திருந்தால் உனக்கு வருத்தம் தெரியும். ஆகையால் என்னை வீணாகத் தடுக்காதே" என்று தீயின் அருகில் சென்றான். அப்பொழுது அர்ஜுனன், "என் பிள்ளை இறந்தால் உன்னைப்போல் துக்கத்தில் ஆழ்ந்து இறக்கமாட்டேன், நான் புருஷன், உன்னைப்போல் பெண்பிள்ளையல்லவே" என்று சொல்லவும், ப்ராஹ்மணன் திரும்பி "நீ இப்பொழுது சொல்வது உறுதிதானா, அப்படியாகில் ஸத்யம்செய், நான் தீயில் மூழ்குவதில்லை" என்று சொன்னான். அர்ஜுனன் அவ்வாறே ஸத்தியம் செய்துகொடுக்க, ப்ராஹ்மணன், அக்னி முதலியவையெல்லாம் மறைந்தன. அர்ஜுனன்

ஸத்தியம் மாத்திரம் நின்றது. பகவான் அர்ஜுனனை மிகுந்த ஆச்சர்யத்துடன் ஏறவிறங்கப் பார்த்தார். அர்ஜுனன் ஒன்றும் அறியாதவனாக படைவீடு வந்து சேர்ந்தான். உடனே அபிமன்யுவின் மரண ஸமாசாரம் தெரிய வந்தது. துக்கப்பெருக்கத்தால் தீ வளர்த்து அதில் விழுந்து இறக்க அர்ஜுனன் யத்தனித்தான். அப்பொழுது பகவான், அவன் எதிரில் வந்து "ப்ராஹ்மணனுக்கு ஒரு நியாயம்,உனக்கு ஒரு நியாயமோ? இதென்ன பேதபுத்தி அப்பா" என்று அர்ஜுனன் வழியில் செய்த சபதத்தையும் அதின் உட்கருத்தையும் ஞாபகப்படுத்தினார். அவன் துக்கம் அதிகமாயிருந்தும் 'என் வாக்குக்கு விரோதமாக நடக்க முயன்றேனே' என்ற வெட்கம் அதிகரிக்கத் துக்கம் அடங்கி அவன் தீயில் மூழ்காதிருந்தான்.

இதனால் தனக்கு என்றால் ஒன்று, பிறர்க்கு என்றால் வேறென்று என்ற பேதபுத்தியே துக்கத்துக்குக் காரணம் என்பது விளங்கும்.

—தமிழ்பாரதம், துரோண பர்வம்.

## 40. துக்கம் நீங்கும் விதம்

ஸ்ரீராமர் ஸீதையை ஜன அபவாத நிமித்தமாகக் காட்டுக்கு அனுப்பி, வெகுநாள் ஆனபின்பு ஓர் அச்வமேத யாகம் செய்வதாகத் தீர்மானித்தார். அதற்கு ரிஷிகள் எல்லோரையும் அழைத்திருந்தார். ஸீதையும், குசலவாள் என்ற ராமர்பிள்ளைகளும், வால்மீகி ரிஷியோடு யாகத்திற்கு வந்து சேர்ந்தனர். யாகங்களில் அன்றன்று நடத்த வேண்டிய வைதீக கார்யங்கள் முடிந்தபின்னர், ஸாயங்

கால வேளைகளில் சாஸ்திர விசாரம், புராணச்ரவணம் முதலியவைகள் நடப்பது வழக்கம். அந்த ஸமயத்தில் தாம் செய்த ராமாயணத்தைக் குசலவாளுக்குஅத்யயனம் பண்ணிவைத்திருந்த வால்மீகி ரிஷி அதை அவர்கள் மூலமாக ஸ்வர்ணஸீதையோடுகூட ஸ்ரீராமர் வீற்றிருந்த அச்வமேத மஹாமண்டபத்தில் கானம் செய்வித்தார். ஸீதையில்லாததால், பத்னி ஸ்தானத்துக்கு ஸ்வர்ண ஸீதையை அமைத்துக்கொண்டிருந்த ஸ்ரீராமருக்குக் குசலவாள் ரூபம்,குரல் முதலியவைகளைக் கண்ணுற்றதும் மிகுந்த ஆவல் தம்மை யறியாமல் உண்டாக, வால்மீகி ரிஷியிடம் தமது எண்ணங்களை வெளியிட்டார். அப்போது அவர், இச்சிறுவர்கள் ஸீதையின் குமாரர்கள் என்றும், தம்மோடு ஸீதையும் வந்திருக்கிறளென்றும் தெரிவித்தார். மறுபடி ஸீதையோடு கூடி வாழலாமென்ற ஆவல் ஸ்ரீராமருக்குப் பிறந்தது. ஜனாபவாதத்தை ஒரு வாறு நீக்கிவிடவேண்டும் என்ற எண்ணமும் ஒருபுறம் பாதித்தது. உடனே வால்மீகரிஷியை நோக்கி "ஸீதை இந்த அச்வமேத மஹாமண்டபத்தில் பலர் முன்னிலையில் தனது நிஷ்கல்மஷ நிலையை ஒரு சபதமூலமாக ஸ்தாபிப்பாளாகில், உடனே மறுபடியும் அவளைச் சேர்த்துக்கொள்ளுகிறேன்" என்று ஸ்ரீராமர் கூறினார். வால்மீகர் ஸீதையிடம் இதைக்கூறி மறுநாள் அவளை ஸபைக்கு அழைத்து வந்தார். அவளுக்கு, அந்த ஸமயத்தில் "நிரபராதியான நமக்கு இம்மாதிரியான கஷ்டநிலை வந்ததே" என்ற ஏக்கத்தால் கொடிய கோபம் பிறந்தது. "நான் பர்த்தாவுக்கேற்ற பதிவ்ரதையானால்,பூமியே! பகரென்று பிளந்து என்னை யடக்கிக்கொள்" என்ற கொடிய சபதத்

தைச் செய்தாள். உடனே, அவ்வாறேயாக, வெளிவந்த ஓர் விமானத்திலேறி ஸீதை பூமியுள் மறைந்தாள். மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஸ்ரீ ராமருக்கு அடங்காத் துக்கம் வந்துவிட்டது. காட்டில் ஸீதையைப் பிரிந்தக்கால் ஏற்பட்ட துக்கத்தைவிட எத்தனையோ மடங்கு இது அதிகமாக விருந்தது. அவர், உலகத்தையே யழித்து தற்கொலைகூடச் செய்துகொள்ளுவாரோ என்று பார்ப்பவர்க்குத் தோன்றியது. அப்பொழுது ப்ரஹ்மா, ஸகல தேவதைகளால் சூழப்பட்டு ஆகாயத்தில் வந்து ஸ்ரீராமரது உண்மை ஸ்வரூபத்தை அவருக்கு ஞாபகப்படுத்தி “நடக்கவேண்டியவை நடந்தே தீரும்” என்று குறிப்பாகக் கூறினார். உடனே ராமரது கொடிய துக்கம் அடங்கிவிட்டது.

உண்மை உணர்ந்தால் துக்கம் தீரும்

—ராமாயணம், உத்தரகாண்டம்.

---

## 41. ஆத்மா அழிவற்றது

முன் காலத்தில் கௌதமர் என்ற ஒரு மஹரிஷி இருந்தார். அவருக்கு நாசிகேதஸ் என்று ஒரு பிள்ளை இருந்தான். அவன் ஒரு யாகஸமயத்தில் தன் தகப்பனார் நல்ல வஸ்துக்களைத் தானம் கொடுக்காது ஸாதாரணமானவைகளையே கொடுத்து வருவதைக் கண்டு “என்னை யாருக்குத் தானமாகக் கொடுக்கிறீர்” என்று கேட்டான். தான் தானம்கொடுக்கும் மாதிரியைத் தன்மகன் அறிந்து விட்டான் என்று கோபம் கொண்டு “உன்னை யமனுக்குக் கொடுத்தேன்” என்று கூறினன். உடனே நாசிகேதஸ்

## 41 ஆத்மா அழிவற்றது

தன் தகப்பன் சொற்படி யமபட்டணம் சென்று காத்திருந்து அவனிடம் மூன்று வரங்களைப் பெற்று, "இறந்த பின்பு ஒருவன் ஆத்மா இருக்கின்றது என்பர் சிலர், ஆத்மாவும் இறந்துவிடுகின்றது என்பர் சிலர், இவைகளுள் உண்மை எது?" என்பதை மூன்றாவது வரமாகக் கேட்டான். யமதர்மன், நாசிகேதஸ்ஸை வேறொரு வரன் கேட்டுக்கொள்ளும்படி எவ்வளவு மன்றாடியும் பயன்படாமற் போய்விட்டது. நாசிகேதஸ் சிறந்த அறிவும் நல்ல ஒழுக்கமும் உடையவனாக இருந்ததால் யமன் நயவாக்யங்களைக் கேட்டு ஏமாறாது தான் கேட்ட விஷயமே தனக்கு அவச்யம் தெரியவேண்டும் என்று உறுதியாக இருந்துவிட்டான். அப்பொழுது யமன் மிகுந்த அரிய விஷயங்களைப்பற்றிக் கூறிவிட்டு 'மூச்சுகளால் மாத்திரம் மனிதன் உயிருடன் இருப்பதில்லை, இவைகளுக்கு அப்பாற்பட்ட ஒருவஸ்துவால்தான் இவைகள் நிற்கின்றன. மரணத்துக்குப்பின் தனது கர்ம எண்ணங்களுக்கு ஏற்ப இந்த ஆத்மா பிறக்கிறான். இப்படி இருப்பினும் இதற்கு யாதொரு குறைவும் இல்லை. இதற்கப்பாற்பட்டது ஒன்றும் இல்லை. இந்த ரஹஸ்யத்தை உணர்ந்தவனுக்குத்தான் பிறப்பே இல்லை" என்று ஆத்மாவின் அழிவற்ற நிலையை எடுத்துக் கூறினான்.

இந்த ரகஸ்யத்தையே தர்மபுத்ரரும் "எது ஆச்சரியமானது" என்று கேட்ட யக்ஷனுக்கு "உலகில் ஒவ்வொரு நாளும் ஜனங்கள் இறந்துபோய்க்கொண்டே இருக்கின்றனர், இதை மற்றையவர்கள் இடையறாது பார்த்துக் கொண்டிருந்தும், தாம்மாத்திரம் இறவாமல் இருக்க வேண்டும் என்ற ஆவலை உடைத்தாயிருக்கின்றனர்.

இதுவே மிகுந்த ஆச்சர்யம்" என்று கூறி வெளியிட்டிருக்கின்றார். அழியாது நீடித்திருக்க வேண்டும் என்ற ஆவல் பிறர் மரணத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே மனிதனிடம் பொங்கி எழுகின்றது. இவ்வாறு எழுவதால் இது மனிதனுள் இருக்கும் ஒரு வஸ்துவின் சிறப்பால்தான் நடக்க வேண்டும் என்பது ஒருவாறு வெளியாகிறது. இந்த ஆச்சர்யமான எண்ணமே மனிதனிடம் ஓர் அழிவற்ற வஸ்து புதைந்து கிடக்கின்றது என்பதை ஒருவாறு குறிக்கின்றது. இவ்வஸ்துவைத் தான் பெரியோர் ஆத்மா என்று சொல்லுவர்.

ஸாந்தோக்ய உபநிஷத்.

—மஹாபாரதம், ஆரண்யபாவம்.

## 42. கர்மத்துக்குத் தகுந்தபடி ஜன்மம்

முன் காலத்தில் நமது தேசத்தில் பகவான் அவதாரமாகிய ரிஷபர் என்றொரு சிறந்த அரசர் இருந்தார். அவருக்கு அநேகம் பிள்ளைகள் இருந்தனர். அவர்களுள் மூத்தவர் பெயர் பரதர். இப்பரதர் ராஜ்யம் ஆண்டுவந்த சிறப்பால் நமது தேசத்துக்குப் பரதகண்டம் என்ற பெயர் வந்தது. முதிர்ந்த வயது வந்ததும் வைராக்யம் பெற்று நாடு முதலியவைகளை யெல்லாம் துறந்து காடு சென்று இவர் தவம் செய்யலாயினர். அப்படி யிருக்கையில் ஒரு நாள், ஒரு மான் குட்டி அநாதையாக ஆற்றோடு போவதைக்கண்டு, அதன்பேரில் கருணைகூர்ந்து அதைத் தண்ணீரிலிருந்து எடுத்து தனது ஆச்ரமத்துக்குக் கொண்டு போனார். ராஜ்யம் பெண்டு பிள்ளைகள் முதலியவற்றைத்

துறந்து பகவத்யானம் செய்ய வந்த பரதருக்கு அந்த மானின்பேரில் அபிமானம் உண்டாகச் சற்று அசிரத்தை யாய் அதை வளர விட்டுவிட்டார். கால் முளைத்ததும், மான் தன் ஸ்வபாவப்படி காட்டில் சென்று ஸஞ்சரிக்கத் தொடங்க, ஒருநாள் அது காணாமல் போயிற்று. பரதருக்கு அன்று முதல் ஏக்கம் பிடித்துவிட்டது. அவர் இறக்கும்பொழுதும் மான் ஞாபகம் அவரைவிட்டு அகலவில்லை. அடுத்த ஜன்மத்தில் அவர் மானாகப் பிறந்தார்.

இப்படிப் பிறந்தும், பூர்வ ஜன்மத்தில் நல்ல வழிகளில் மனப்பூர்வமாய்ப் பழகியிருந்ததால், விட்ட குறை வந்து தொட்டுக்கொள்ள பூர்வ ஜன்ம ஞாபகம் அந்த மானுக்கு இருந்தது. அபிமானத்தை வளர விட்டதால் தனக்கு இந்தக் கதி வந்தது என்பதை உணர்ந்த இந்த மான் மற்றைய மான்களுடன் சேர்ந்து தனது அபிமானத்தை வளரவிடாது ஒதுங்கி தான் முன் ஜன்மத்தில் தவம் செய்துகொண்டிருந்த காட்டிற்கேபோய்ப்கவானைப் பக்திசெய்துகொண்டு தனிமையாக வஸிக்கத் தொடங்கியது. இவ்வாறு ஸத்காலக்ஷேபம் செய்துகொண்டு மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த மானுக்கு முடிவு காலம் வர அடுத்த ஜன்மத்தில் ஒரு ப்ராஹ்மணனுக்குக் கடைசிபுத்திரனாகப் பிறந்து எளிதில் மோக்ஷம் பெற்றது.

ஒருவன் சாகுங்கால் அவன் மனத்தில் இருக்கும் கடைசியான எண்ணமே அடுத்த ஜன்மம் இன்னதென்பதைக் குறிப்பிக்கும். அது எப்படிப்பட்டதாய் இருந்தாலும் முன் ஜன்மத்தில் செய்த கர்மங்கள் பயன் படாமற் போகவே மாட்டா.

—பாகவதம் 5-ம் ஸ்கந்தம்.

## 43. வேதம் ஆத்மாவைக் காட்டும் விதம்

ஸ்ரீராமர், சித்ரகூடபர்வதத்தில் இருந்தால் அடிக்கடி அயோத்யா வாஸிகள் வந்து தம்மைக் கஷ்டப்படுத்து வார்கள் என்று எண்ணி, அதைவிட்டுத் தண்டகாரண்யம் போகப் புறப்பட்டனர். வழியில், அத்ரி யென்ற ஒரு மஹரிஷி ஆச்ரமம் இருந்தது. அங்கு சென்று அவர் தங்கினார். ராம லக்ஷ்மணர்களுக்கு வேண்டிய உபசாரங் களை அத்ரி மஹாரிஷி மிகுந்த ச்ரத்தையுடன் செய்தார். அந்த ஸமயத்தில் அவர் பெண்சாதியாகிய அனஸூயை என்பவள், மிகுந்த அன்புடன் ஸீதையை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள். அங்கு ஸீதைக்கு ஸ்நா னம் முதலியவைகள் செய்துவைத்து தன்னிடமிருந்த நல்ல வஸ்திரங்களைக் கொடுத்து அணிந்துகொள்ளும்படி செய்து, காட்டுப்புஷ்பம் முதலியவைகளால் தனக்குத் திருப்தி வரும்வரை அலங்காரம் செய்தாள். அவர்கள் அன்புடன் வார்த்தையாடிக்கொண் டிருக்கையில், ஸீதை தன் கல்யாண வைபவங்களை எடுத்துரைத்து இவ்வாறு தனுர்பங்கம் செய்து தன்னை ஸ்ரீராமர் கல்யாணம் செய்து கொண்டார் என்பதை எடுத்து விஸ்தரித்தாள். அப் பொழுது அனஸூயை, "ஸ்ரீராமரைக் காட்டு பார்ப் போம்" என்றாள். அப்பொழுது இவர்கள் எல்லோரும் எழுந்து ஸ்ரீராமர் ரிஷிகள் மத்தியில் பேசிக்கொண்டிருந்த விடத்துக் கருகாமையில் மறைவாய் வந்து நின்றனர். அப்பொழுது அனஸூயை, தன் விரலால் சுட்டிக்காட்டி "இவர்தானா ராமர் இவர்தானா ராமர்" என்று கேட்டுக் கொண்டே வர, ஸீதை "இல்லை, இல்லை" யென்று சொல்

விக்கொண்டே வந்தாள். முடிவில் ராமரைச் சுட்டிக் காட்ட ஸீதை தலைகுனிந்து வெட்கி மௌனமானாள். உடனே அனுஸூயைக்கு ஸ்ரீராமர் இன்னார் என்று விளங்கிவிட்டது.

இதுபோலவே தான், வேதமும் ஆத்மவிஷயத்தைக் கூறுங்கால், "ஆத்மா, இதல்ல இதல்ல," என்று ப்ரபஞ்ச வஸ்துக்களை யெல்லாம் ஒதுக்கிக்கொண்டே வந்து, முடிவில் மிகுந்திருக்கும் வஸ்துவை இன்னதென்று கூற முடியாது, மௌனமாகி சொல்லாமற் சொல்லும்.

—ஸீதாராமாஞ்சநேய ஸம்வாதம்.

## 44. ஸன்யாஸ லக்ஷணம்

முன்னொரு காலத்தில் ஸுலபை என்ற ஸன்யாஸினி உலகம் முழுவதும் திரிந்து வருகையில், மிதிலை ராஜனாகிய ஜனகர் மோக்ஷஸாதனத்தை அனுஷ்டித்துத் தேர்ந்தவர் என்று கேள்விப்பட்டு அவரிடம் சென்றாள். ஜனகர் அவளை உட்காரவைக்க இருவரும் மெய்ம்மறந்து ஸம்பாஷிக்கத் தொடங்கினர். ஜனகர் அவளை நோக்கி, தான் பஞ்சசிகர் என்றவரிடம் உபதேசம் பெற்ற விதத்தையும், அதை ராஜ்ய மத்தியிலிருந்தபடியே அப்யஸித்து ஸித்திபெற்ற வழியையும் அப்பொழுது தன்மனம் தாமரையிலைத் தண்ணீர்போல் ராஜ்யத்தில் தாக்கற்றிருப்பதையும் எடுத்துக் கூறினார். இப்படிக் கூறிவருகையில், தான் ராஜதர்மத்தை விடாது மோக்ஷஸாதனத்தில் பழகுபவன் என்றும், அவள் பெண்ணாகவிருந்தும் தன் தர்மப்படி ஒரு புருஷனுக் கடங்கியிராது, இம்மாதிரி உல

கெல்லாம் ஸன்யாஸினியாகத் திரிந்து வருவது அழ கல்லவென்றும் குறிப்பாக எடுத்துக் கூறினார். இதைக் கேட்டு ஸுலபை, மனங்கோணாது மொழியலானாள். "நான் உயர்குடிப் பிறந்தவள். பிரதானர் என்ற ராஜ ரிஷி வம்சம். எனக்குத் தகுந்த புருஷன் அகப்படாத தாலும், எனக்கு மோக்ஷ தர்ம ஞானம் ஏற்பட்டிருந்த படியாலும், என் நிலையை ஒரு பொருட்டாக எண்ணாது ப்ரஹ்மசாரிணியாக உலாவலானேன். உண்மையாகப் பார்க்கில் மனப்பற்றற்றிருத்தலே மிகச் சிறந்தது. எந்த நிலையிலிருந்தாலும் பெரியோருக்கு இந்த நிலையிருக்கும். நீர் ராஜாவாகப் பிறந்து ராஜ்யத்திற்கு அதிபதியானீர். நீர் அதை விடாது, ஸன்யாஸம் ஸம்பாதித்தீர். எனக்குத் தகுந்த நாயகன் அகப்படாததால் நானிருந்தபடியே இருந்து ஸன்யாஸினி யானேன். நம் இருவர் ஸன்யாஸத்திற்கும் பேதமே இல்லை. ஆனாலும் உமது வ்யவஹாராதிகளை நோக்கில் அவைகள் உம்மை அடிக்கடி கலக்க நீர் தேறுகிறீர். எனக்கேற்பட்டிருக்கும் நிலையோ அப்படியல்ல. எப்பொழுதும் எனக்குக் கலங்கா நிலையே ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் உலக வாழ்க்கை ஸம்பந்தப்பட்டவரையில், நம்மிருவருக்கும் சற்று ஸ்வபேதமுண்டு. நம்மிருவருக்கும் மனஸ் ஸம்பந்தப்பட்டவரையில் வித்தியாஸமே இல்லாததால் நாம் வீண் தர்க்கம் செய்யவேண்டியதே இல்லை" என்று சொன்னாள். ஜனகர் இதற்குப் பதில் ஒன்றும் கூறாது அடங்கிவிட்டார்.

உள்ளத்துறவே துறவு, வெளித்துறவு அதற்கு ஸாதனம்.

—மஹாபாரதம், சாந்திபர்வம்

# 45. ப்ரஹ்மஞான ஸாதனம் (1)

முன்னொரு காலத்தில் ஜபாலே என்றொரு ஸ்திரீ இருந்தாள். அவளுக்கு ஸத்யகாமன் என்றொரு பிள்ளை இருந்தான். அவன் வயதுவந்ததும், தாயை நோக்கி, "நான் ப்ரஹ்மசாரி ஆக விரும்புகிறேன். என் குலகோத்ரம் என்ன" என்று கேட்டான். அதற்கு அவள் "நான் சிறு பெண்ணாக இருந்தபோது நீ உண்டானாய், அந்தக் காலங்களில் நான் அதிதிகளை ஆராதிப்பதில் வெகு ஆவலாக இருந்துவிட்டேன். நீ பிறப்பதற்குள், உன் தகப்பனார் இறந்துவிட்டார். உன் குலகோத்ரங்களை விசாரித்துத் தெரிந்துகொள்ள, எனக்கு முடியாமல் போய் விட்டது. எனக்கு ஜபாலே என்று பெயர். உனக்கோ ஸத்யகாமன் என்ற பெயர் இருக்கிறது. ஆதலால் உன்னைக் கேட்கும்போது நீ ஸத்யகாம ஜாபாலன் என்று சொல்லிக்கொள், இதுவே போதும்" என்றாள். தாயின் உத்தரவை சிரமேற்றாங்கி கௌதமர் என்ற ரிஷியினிடம் சென்று இவன் கருத்தைத் தெரிவித்தான். அவர் குல கோத்ர விஷயமாக இவனை விசாரிக்க, இவன் தன் தாய் கூறியபடி ஒன்றையும் ஒளிக்காது கூறிவிட்டான். இம்மாதிரி உண்மையை ஒளியாது கூறவல்லவன், ப்ராஹ்மணனாகத்தா னிருக்கவேண்டும் என்று மதித்து கௌதமர், அவனை ஒழுங்குப்படி தம்மிடம் வரும்படி செய்து அவனுக்கு ஒருவாறு உபதேசித்தார். பின்னர் அவனிடம் நானூறு பசுக்களைக் கொடுத்து, "மேய்த்துக்கொண்டு வா" என்று அனுப்பினார். குருவின் குறிப்பை யறிந்த சிஷ்யன் "இவைகள் நன்றாகத் தேறிப்

RAMANANDHAPADMAVATHA
U. V. SWAMINATHAIYAR LIBRARY


பெருகிய பின்னர்தான் திரும்பி வருவேன் " என்று கூறிப் போனான். இவனுக்கு ஸத்யம், குருபக்தி, தபஸ் ஆகிய நற்குணங்கள் இருந்ததால், எல்லா வஸ்துக்களி லிருந்தும் நல்ல உபதேசங்கள் வெளியாயின. கொஞ்ச கால மானதும், மந்தையில் இருந்த ஒரு பசு ஸத்யகாமனைக் கூவி அழைத்து, " எங்களைக் குருவீடு கொண்டுபோய்ச் சேர்த்து ஸாதகமாய் இரு. நாங்கள் பெருகி விட்டோம் " என்று கூறி ஒருவாறு ப்ரஹ்மஞானத்தை அவனுக்கு உபதேசம் செய்தது. இம்மாதிரியே குரு வீட்டிற்குத் திரும்பி வருகையில், அக்னி, ஹம்ஸம், நீர்ப்பறவை முத லியவைகளும் இவனுக்கு ப்ரஹ்மஞானத்தை உபதேசித் தன. குரு வீடு வந்ததும், அவர், இவன் முகத்தில் ப்ர காசித்த தேஜஸ்ஸிலிருந்து, இவன் மேலான நிலையை யுணர்ந்து உபதேசம் பெற்ற வழியையும் கேட்டறிந்து த்ருஷ்டாந்த பூர்வமாக அவைகளை வற்புறுத்தி பூர்ண உபதேசத்தைச் செய்து முடித்தார். ஸத்யகாமன் ஒரு பெரிய ரிஷியானான்.

ஸத்யமும், தபஸும், ச்ரத்தையும் ப்ரஹ்ம ஞானத் துக்குத் தகுந்த ஸாதனங்கள்.

—சாந்தோக்ய உபநிஷத்.

## 46. ப்ரஹ்மஞான ஸாதனம் (2)

முன்னொரு காலத்தில், நாரதர் ஸனத்குமாரரை படித்துத் தமக்கு உபதேசம் செய்யவேண்டுமென்று மஹா விநயத்துடன் கேட்டார். அதற்கு அவர், " உனக்குத் தெரிந்தவைகளைக் கூறு, மேல் விஷயங்களை நான் உப தேசிக்கிறேன் " என்றார். அப்பொழுது நாரதர், " நான்கு



திரௌபதி மான ஸம்ரக்ஷணை

—89-ம் பக்கம் பார்க்க




ஞானியர் பக்தி பரவசத்தால் கடலைக் கடத்தல்

—9ம் பக்கம் பார்க்க

9130 (7446)

வேதம், இதிஹாஸ புராணங்கள், வ்யாகரணம், சிராத்த காண்டம், கணிதம், சகுன சாஸ்த்ரம், கலாசாஸ்த்ரம், தர்க்கம், தர்ம சாஸ்த்ரம், ராஜ்யதந்த்ரம், நிருத்தம், சிக்ஷை, பூதசாஸ்த்ரம், தனுர்வித்தை, வானசாஸ்த்ரம், ஜ்யோதிஷம், பாம்பாட்டி வித்தை, கானம் முதலிய ரஸிகசாஸ்த்ரம், ஆகிய அநேக சாஸ்த்ரங்களை நான் பயின்றிருக்கிறேன். இப்படியிருந்தும் எனக்கு அனேகவித வாக்கு ஞானமும், பேசும் திறமும், ஏற்பட்டிருக்கிறதேயொழிய, ப்ரஹ்மஞானம் வந்தபாடில்லை. இது வந்தால் துக்க நிவர்த்தி என்று கூறப்பட்டிருக்கிறது. எனக்கு இன்னம் துக்கம் தீரவில்லை. என்னை க்ருபைகூர்ந்து காக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். இப்படிக் கூறினதும், ஸனத்குமாரர் நாரதரைப் படிப்படியாக நாமம், வாக்கு, மனஸ் ஸங்கல்பம், சிரம் முதலியவைகள் மூலமாக ப்ராணன்வரை உணர்த்திக்கொண்டுபோய் அவைகளின் சிறப்பை எடுத்து விளக்கினார். அதன்மேல் ஸத்யம், அறிவு, எண்ணம், ச்ரத்தை, நிஷ்டை, தர்மம், ஸுகம் இவைகளின் ரஹஸ்யத்தைக் கூறி அகண்டமாகிய ஆத்ம வஸ்துவின் லக்ஷணத்தை எடுத்து விஸ்தரித்தார். இதன் பின்பு நாரதருக்கு ஆகாரம் (இந்திரியங்களால் உட்கொள்வது) சுத்தமானதும் (விருப்பு, வெறுப்பு நீங்கியதும்) மனம் சுத்தமாகும். பின்னர் ஞாபகம் திடப்படும். இதனால் பந்தம் நீங்கும் என்ற மார்க்கத்தைக் காட்டி நாரதருக்கு அஞ்ஞானத்திற்கப்பாற்பட்ட வஸ்துவைத் தரிசனம் செய்வித்தார்.

மனஸ் சுத்தமும், ஆழ்ந்த விசாரணையும், விடாப் பழக்கமும், ப்ரஹ்மஞான ஸாதனங்கள்.

-சாந்தோக்ய உபநிஷத்

# 47. ப்ரஹ்மஞான ஸாதனம் (3)

ஜானச்ருதி என்ற அரசன் வம்சத்தில் ஒரு பேரப் பிள்ளை இருந்தான். அவன் கொடையாளி, உதாரகுண முடையவன், தன் வஸ்துக்களாலே எல்லோரும் நன்மை யடையவேண்டும் என்ற எண்ணத்துடன் சத்திரம்,சாவடி கள் முதலியவற்றை எங்கும் கட்டுவித்தான். இவன் ஒரு நாள் இரவில் தன் உப்பரிகையின்மேல் உட்கார்ந்திருக்கை யில், மேலே சில அன்னப்பறவைகள் பறந்துபோயின. அவைகளுள் ஒன்று மற்றொன்றை நோக்கி "ஜானச்ருதி பேரன் மஹா கீர்த்திமான், அவன் தேஜஸ் ஸ்வர்க்கமெங் கும் பரவியிருக்கிறது. அவனிடம் அணுகினால் நீ பஸ்ம மாகி விடுவாய்" என்றது. அதற்கு மற்றொன்று "இவன், சகட ரைக்வரா என்ன, அவர் மஹா ஞானி, அவருக்கு ஸகல பலனும் கைகூடும். அவரைப்போல அறிந்து தெளிந்தவருக்கும் அவ்வாறு உண்டாகும். இந்த அரசன் அவருக்கு எம்மட்டு? ஏன் வீணாகத் துதிக்கிறாய்" என்றது. இதைக்கேட்டு ஜானச்ருதி பேரன், அந்த ரைக்வரைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி தன் வாயில் காப் பவனை ஏவினான். ஸேவகன் போய்த்தேடி எங்கும் காணாது, பின்னர் ப்ராஹ்மணர்கள் இருக்குமிடத்தில் தேடி வர, அங்கு ஒரு வண்டியின் அடியில் சிரங்கு சொறிந்து கொண்டு, ரைக்வர் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். இதை அரசன் அறிந்து ஏராளமான த்ரவ்யங்களை எடுத் துக்கொண்டு, அவர்முன் வந்து "தாங்கள் உபாஸிக்கும் தேவதா ரஹஸ்யத்தை எனக்கு உபதேசிக்க வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தான். அதற்கு அவர் "இவை

கள் எனக்கு வேண்டாம், போய் வா,'' என்றார். இவர், க்ரஹஸ்தாச்ரமம் நடத்துவதற்குரிய ஒரு பெண்சாதி வேண்டுமென்று விரும்புவதாகக் குறிப்பால் அறிந்த அரசன், த்ரவ்யங்களோடு தன் பெண்ணையும் கொண்டு வந்து ரிஷிமுன் நிறுத்தினன். உடனே, அரசனது நற்குணங்களையும், குருவின் குறிப்பறிந்து நடக்கும் திறனையும் கண்டு மெச்சி, அவனுக்குப் பகவானது விச்வ ரூப விஷயத்தை எடுத்து உபதேசித்து அவனுக்குச் சிறந்த ஞானத்தைப் புகட்டினார்.

குருவின் குறிப்பறிந்து வேலைசெய்யும் திறனும் நற்குணமும் ப்ரஹ்மஞான ஸாதனங்கள்.

—சாந்தோக்ய உபநிஷத்.

## 48. மஹான்கள் நிலை

பாதர் மான் ஜன்மம் நீங்கியதும் ஆங்கிரஸ ப்ராஹ்மணர் குலத்தில் இளையாள் வயிற்றில் கடைக்குட்டியாகப் பிறந்தார். அவருக்குப் பிறந்த நாள்முதல் பேச்சுக்கூட வரவில்லை. வயது முதிர்ந்தும் வெறும் மக்கைப் போல் காணப்பட்டார். என்ன சொல்லிக்கொடுத்தும் ஒன்றும் ஏறவில்லை. மூன்றும் ஜன்மத்தில் ஜீவகாருண்ய மூலமாக அபிமானத்திற்கு ஆளாகி மான் ஜன்மம் அடைந்து தத்தளித்தது அவர் மனதை விட்டு அகலவில்லை. ஆதலால் பகவன் நிஷ்டையைத் தவிர வேறு எதையாவது செய்வதில் இந்த ஜன்மத்தில் மனதைச் செலுத்திவிட்டால் வேறு என்ன ஆபத்து வருமோ என்று பயந்து, தமது சிறப்பை யெல்லாம் அடக்கிக்

கொண்டு நீறுபூத்த நெருப்பைப்போல் இவர் விளங்கினார் பாலர், உன்மத்தர், பிசாசு இவைகளைப்போல் பெரியோர்கள் இருப்பார்கள் என்ற வேதவாக்யப்படி இவர் நடந்து கொண்டதால் இவருக்கு ஜடபாதர் என்ற பெயர் வந்தது இவர் ஒருவேலைக்கும் உபயோகமில்லை என்று கண்டு, இவர் தமையன்மார்கள் இவரை வயல்வெளியில் காவலாகப் பரண்மேல் உட்கார்த்தி வைத்தனர். அங்கு இருக்கையில் சில வேலைக்காரர்கள் அவர் தேகதிடத்தைக் கண்டு அவரைப் பிடித்துக்கொண்டு போய் தமது எஜமானன் முன்பு விட்டனர்.

அந்த யஜமானன் ஒரு திருடர் ராஜன். அவனுக்குப் பிள்ளை இல்லாததால், பத்ரகாளிக்கு ஒரு நரபலி கொடுப்பதாக அவன் வேண்டிக்கொண்டிருந்தான். ஜடபாதரைக் கண்டதும் இவர் பலிக்கு ஏற்ற பசு என்று மகிழ்ந்து இவருக்கு எண்ணை முழுக்காட்டிக் காளியின் முன்பு கொண்டுபோய் முட்டிபோட்டு உட்காரச்செய்தான். இவர் இடைவிடாது ப்ரஹ்ம நிஷ்டையில் இருந்தபடியால் நடந்தவைகள் ஒன்றும் இவருக்குத் தெரியாது.

திருடர் ராஜன், இவரை வெட்ட உறையிலிருந்து கத்தியை உருவி ஓங்கிவிட்டான். காளியின் உள்ளும் பரவி, அவளுக்கும் சக்தி கொடுக்கும் பரம்பொருளையே விடாது த்யானம் செய்துவரும் பாதரை எப்படிக் காளியால் பலியாக அங்கீகரிக்க முடியும். பாதாது தபோக்னியால் தகிக்கப்பட்டுவிக்ரஹத்துள் இருப்புக்கொள்ளாமல்பிழைத்தாற் போதுமென்று காளி வெருண்டோடி வெளியே வந்து ராஜன் கத்தியைப் பிடுங்கிக்கொண்டு பாதர் தவிர மற்றவர்கள் எல்லோரது தலைகளையும் வீசி எறிந்துவிட்டு

உக்ரம் அடங்கி விக்ரஹத்துள் புகுந்தாள். பரதரும், யதேச்சையாகக் காளி கோவில்வாயிலில் வந்துட்கார்ந்தார். இவ்வாறு தேகம் நழுவுமளவும் உலக ப்ரஜ்ஞையே யின்றி உலகில் பழகிவந்து முடிவில் மீளா நெறி ஏகினார்.

மஹான்கள் தேக ப்ரஜ்ஞையே யின்றி ப்ரஹ்ம நிஷ்டையில் இருப்பார்கள். எந்தத் தாழ்ந்த தேவதைகளின் சக்தியும் அவர்களிடத்தில் செல்லாது.

—பாகவதம் 5-ம் ஸ்கந்தம்.

## 49. கர்மயோகம்

பாண்டவர்கள் பாட்டனான பீஷ்மர் இந்தக் கர்மயோகத்தை நன்றாக அநுஷ்டித்துக் காட்டியிருக்கிறார். தமது பால்யத்திலேயே தமது ஸுகங்களைக்கூடக் கருதாது தகப்பனை ஸுகப்படுத்துவது தமதுகடமை என்று இவருக்குச் சாஸ்த்ர ஆராய்ச்சி மூலமாய்த் தோன்றக் கடவுளிடம் பாரத்தைப் போட்டுவிட்டுத் தான் வாழ்நாள் முழுவதும் ப்ரஹ்மசாரியாகவே யிருப்பதாக விரதம் பூண்டார். இந்த விரதத்தைக் கலைக்க அநேக இடையூறுகள் உண்டாயின. பெண்மணி யொருத்தி (அம்பா) இவரைத்தான் விவாகம் செய்துகொள்வேன் என்றிருந்தாள். அவளுக்கு ஸகாயமாக இவர் குரு பரசுராமரே வந்தார். அவர், தன் சொற்படி அம்பாவை விவாகம் செய்துகொள்ளாவிட்டால் தம்மோடு சண்டைக்கு வரவேண்டும் என்று கேட்க, (பீஷ்மருக்கு அந்த ஸமயத்தில் குருவுடன் சண்டையிடுவதே கடமை என்று தோன்ற) அவ்வாறே செய்து குருவை ஜயித்து தமது விரதத்தை

நிலைநிறுத்தினார். பின்னர்த் தமது குலம் ஸந்ததியற்றுப் போக அப்பொழுதும்கூடத் தமது சிற்றன்னை சொற்படி கேளாது தமது விரதத்தை நிலை நாட்டினார். இதற்குப் பிறகு பாண்டவ கௌரவர்களுக்கு ஏற்பட்ட மனஸ்தாபங்களில் தம்மாலியன்ற வரையில் புத்திமதிகூறிக் கௌரவர்களைத் திருப்பிவிடலாமென்று முயன்றார். முடிவில் பாரதயுத்தம் நடந்தே தீரவேண்டும் என்ற தீர்மானம் பிறந்ததும் இவர் நடந்துகொண்ட விதம் மிகுந்த அற்புதமாயிருந்தது. இவர் அந்த ஸமயத்தில் உண்ட வீட்டுக்கு இரண்டு நினைக்கக்கூடாது என்ற தர்மத்திற்கும், கொடியவர்களுக்கு ஸஹாயம் செய்து சிறப்புண்டாகும்படி செய்யலாகாது என்ற தர்மத்திற்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டார். அப்பொழுது தம் தேகத்தால் ஆகும் உபகாரம் முழுவதையும் கௌரவர்கள் விஷயத்தில் செலுத்திவிடுவதென்றும் மனதாலாகிய ஆசீர்வாதம் முதலிய உபகாரங்களைப் பாண்டவர்கள்விஷயத்தில் செலுத்தி விடுவது என்றும் தீர்மானித்தார். பாரத யுத்தத்தில் பத்துநாள் வரையில் இவர் மனதைப் பாண்டவர்களுக்கும், தேகத்தைக் கௌரவர்களுக்கும் கொடுத்து மனத்தால் தேக விஷய உபகாரம் எவ்வழியிலும் குறையாவண்ணம் சண்டை செய்த சிறப்பே சிறப்பு. எவராலும் இம்மாதிரியான தர்மஸங்கட ஸமயத்தில் நடக்கவே முடியாது. இப்படி யாதோர் வஞ்சனையுமின்றிப் பீஷ்மர் சண்டையிட்டு வருகையில் கௌரவர்களுக்கு மாத்திரம் இவர் பக்ஷபாதி என்ற எண்ணம் பலப்பட்டுக்கொண்டே வர, ஒன்பதாம் நாள் இரவில் துர்யோதனன் பீஷ்மரை நோக்கி "பாண்டவர்கள் பக்கம் ஓங்கி வருகின்றது, உங்களால் ஒன்றும்

செய்ய முடியாதுபோல் காணப்படுகின்றது, மேலும் உங்களுக்குப் பாண்டவர்களிடம் பக்ஷபாதம் இருப்பதுபோல் காணப்படுகின்றது. நீங்கள் சண்டை செய்யுங்கால் என் உயிர்த்தோழனை கர்ணன் சண்டை செய்வதில்லை என்று சபதம் கூறியிருக்கிறான். இப்படி நீங்களும் நன்றாகச் சண்டை செய்யாது சண்டை செய்பவர்களுக்கும் தடையாயிருப்பதில் என்ன பயன் ?" என்று வெகுவாகப் பிரலாபித்தான். அப்பொழுது அவர் "நாளைய தினம் என் முழு பலத்தோடும் சண்டையிட்டு விடுகிறேன். பாண்டவர்களை அபஜயப்படுத்த முடியாவிடில் நானாவது இறந்துவிடுகிறேன். உயிருடன் திரும்புவதில்லை" என்று வாக்குறுதி செய்தார்.

கௌரவர்கள் போனதும் "நாம் சண்டை செய்வதில் துரியோதனனுக்கு அவநம்பிக்கை அதிகரித்து விட்டது, பாண்டவர்களுக்கும் ஜயம் வாராது. ஆதலால் இரு திறத்தாரும் சாந்தம் அடைய நாம் இறக்கவேண்டியது கடமை" என்று பீஷ்மர் எண்ணிக்கொண்டிருக்கையிலேயே பாண்டவர்கள் அவரிடம் வந்து சேர்ந்தார்கள். "முன்னரே எங்களுக்கு உமது மரணோபாயத்தைக் கூறுவதாக வாக்களித்திருக்கிறீர். இவ்வளவு நாள் தாங்கள் செய்துவந்த சண்டையைப் பார்த்தால் நீங்கள் உயிருடன் இருந்து சண்டைசெய்யும் வரையில் எங்களுக்கு ஜயம் கிடைப்பது அரிது என்று தோன்றுகிறது. இந்தக் கஷ்ட ஸமயத்தில் எங்களைக் கைதூக்கி விடவேண்டும்" என்று மிகுந்த துக்கத்துடன் தர்மபுத்ரர் கேட்டார்.

தர்மபுத்ரர் தமக்கு யுத்தகளத்தில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களைவிட தமது பாட்டனாரைக் கொல்லும்படி

வந்துவிட்டதே என்ற கஷ்டத்தை எண்ணி துக்கிப் பதைக் கண்டு பீஷ்மர், மிகுந்த அன்புடன் "உமது பக்கத்தில் இருக்கும் சிகண்டியை முன்னிட்டுக்கொண்டு அர்ஜுனன் என்னுடன் சண்டை செய்யட்டும், நான் உடனே தோல்வி யடைவேன்" என்று உபாயம் கூறினார். இதை முன்னரே கூறினால் தம் நடுநிலைக்குத் தகுதியாக விராது என்று சொல்லாது விட்டார் பீஷ்மர். பாண்டவர்கள் அவ்வாறே மறுநாட் செய்யவே யுத்தகளத்தில் பீஷ்மர் குத்துயிராய்ச் சாய்ந்துவிழத்தமது மேல் தைத்திருந்த அம்பெல்லாம் அவரை உயரத் தூக்கிப் பிடித்தன. உத்தராயணம்தான் தமக்குச் சாகுங்காலம் என்றுணர்ந்த பீஷ்மர் அந்த அம்புகளால் உண்டாகிய நோயை 48 நாள் ஸஹித்துக்கொண்டிருந்து முடிவில் சாகவேண்டியது தமது கடன் என்று உணர்ந்து மரணத்தை வரவழைத்துக் கொண்டார். ஆகவே பீஷ்மர் தமது வாழ்நாளில் செய்த விஷயங்கள் எல்லாவற்றையும் தமது கடமை என்று நன்றாக உணர்ந்து அவைகளால் வரக்கூடிய பலனைக் கவனியாமலே கடவுள்மேல் பாரத்தைப் போட்டு நடந்துகொண்டு வந்தார். ஆதலால் கர்மயோகத்தின் லக்ஷணங்கள் ஆவன,—

(1) பலனில் இச்சையைவிட்டுக் கடமைகளைச் செய்தல்;

(2) கர்மங்களின் பலனை பகவத் அர்ப்பணம் செய்தல் என்னும் இவைகளே.

—மஹாபாரதம்.

4154

## 50. பக்தி யோகம்

பாண்டவர்களுடைய பத்தினியாகிய த்ரௌபதி தேவி கிருஷ்ண பரமாத்மாவிடம் மிகுந்த அன்பு பாராட்டி வந்தாள். ஆபத்துக் காலத்திலும் ஸம்பத்துக்காலத்திலும் கிருஷ்ணபகவானது ஞாபகமே அவளிடம் மாறுதிருந்தது. இந்த ஞாபகத்தாலேயே அவளுக்கு வந்த பெரிய ஆபத்துகளெல்லாம் மிக எளிதில் நீங்கின. அநேக அவஸரங்களில் அவள் மனம் பூர்ணமாகப் பகவானையே சரணமாகக் கருதிநின்றது. சகுனியோடு ஆடிய மாயச்சூதில் பந்தயம் வைக்கப்பட்ட காலத்தில் துச்சாஸனனால் இழுக்கப்பட்டு இவள் ஸபைக்குக் கொண்டுவரப்பட்டாள். அவ்விடத்தில் தன்னை அவமானம் செய்யவேண்டுமென்ற துச்சாஸனனது கொடிய எண்ணத்தைத் தடுக்க அவள் எவ்வளவும் முயன்றும் முடியாதது கண்டு தனது சக்தியாலாவது ஒன்றும் இல்லை என்பதை நன்றாக உணர்ந்து கையைச் சிரசின்மேல் தூக்கி "ஹா! கிருஷ்ணா, துவாரகாவாஸா" என்று பலவிதமாகத் துதித்து அவரையே சரணமாக அடைந்து தன்னையும் மறந்துநின்றாள். இம்மாதிரி மனத்தையும் அகங்காரத்தையும் இழந்து பகவத் பரமாகவே ஈடுபட்டு, த்ரௌபதி நின்றதும் ஒரு மிகுந்த அற்புத விஷயம் வெளியாயிற்று. துச்சாஸனன் அவள் வஸ்திரத்தை இழுக்க இழுக்க, உள்ளேயிருந்து அதிக விசித்ரமும் அழகும் பொருந்திய அநேக வஸ்திரங்கள் ஓயாது வந்துகொண்டே யிருந்தன. முடிவில் வஸ்திரங்களை இழுக்க முடியாமல் கைசோர்ந்து துச்சாஸனன் கீழே விழும்படி நேரிட்டது.

இம்மாதிரியே வனவாஸ காலத்தில் தூர்வாஸ முனிவர் பாண்டவர்களிடம் அகாலத்தில் வந்தபொழுது த்ரௌபதியின் உண்மையான பக்தி வெளிப்பட்டது. அக்ஷயபாத்திரத்தாலும் சோறு அளிக்க முடியாத அந்த அகாலஸமயத்தில் பகவானிடம் மனத்தைப் பதித்து த்ரௌபதி துதிக்க அவர் நேரே வந்து அக்ஷய பாத்திரத்தையும் தூர்வாஸ ரிஷி அவர்கள் சிஷ்யர்கள் முதலியோரது வயிற்றையும் ஏககாலத்தில் நிரப்பி வைத்து, பாண்டவர்களையும் காப்பாற்றி தூர்வாஸருக்கும் புத்தி வரும்படி செய்தார்.

இவ்விதமாகவே பாரத கதை முழுவதிலும் த்ரௌபதியின் பக்தி ஆங்காங்கு வெளியாகும்.

ராமாயணத்தில் ஹனுமார், ராமர் விஷயமாக ஈடுபட்டு அத்புதச் செயல்களைச் செய்ததும் இந்தப் பக்தியின் சக்தியாலேதான். ராமர் என்றால் ஹனுமாருக்கு மிகுந்த அன்பும் ஆராமையும் உண்டாய்விடும். அவருக்காகப் பாடுபட்டு உழைத்தால்தான் ஹனுமார் மனம் திருப்தி யடையும். இப்பக்தியின் மிகுதியால் ராமர் வசமாகி ஸீதையைத் தேடுவதற்காகக் கடலைக்கடந்ததும், லக்ஷ்மணரை எழுப்புவதற்காக ஸஞ்சீவி பர்வதத்தை வெகு சீக்கிரத்தில் கொண்டு வந்ததுமாகிய இவ்வற்புதத் தொழில்கள் அவரால் செய்யப்பட்டன. தான் என்ற எண்ணமே யில்லாது ராமரிடம் இவர் ஈடுபட்டு நின்றவர். இப்பொழுது கூட எங்கெங்கே ராமாயண கதை நடக்கின்றதோ, அங்கங்கெல்லாம் சிரத்தின் மேல் குவித்த கரத்துடனும் ஆனந்த பாஷ்பம் பெருகும் கண்க

ஞூடனும் ஹநுமார் வந்து ஸித்தமாய் இருக்கிறார் என்று அவர் ஸ்தோத்திரத்திலே கூறப்பட்டிருக்கிறது.

பக்தர்களுள் சிறந்தவரான ப்ரஹ்லாதர் இப்பக்தி இன்னதென்பதை நன்றாகப் பின்வருமாறு எடுத்துக்கூறியிருக்கிறார்:—"ஸாதாரண ஜனங்களுக்கு உலக விஷயங்களில் ஓயாது மனம் சென்று அவைகளை எவ்விதத்திலாவது ஸம்பாதித்து ஸுகம் பெறவேண்டுமென்று எப்படித் தோன்றுகின்றதோ, அவ்வாறே ஓயாது பகவானிடம் மனம் சென்று அவரையடைந்து ஆனந்திக்க வேண்டும் என்று தோற்றுமாயின் அதுவே பக்தியெனப்படும்." ஆகவே பக்தியோகத்தின் முக்கிய லக்ஷணங்களாவன :—

1. ஆராதிக்கும் வஸ்துவினிடம் மனம் ஓயாது சென்று பதிதல்;

2. வரவர நான் வேறு என்ற எண்ணம் குறைந்து கொண்டே வந்து முடிவில் அது ஒழிந்து ஆராதிக்கும் வஸ்து மாத்திரமாய் நிற்றல் என்பவைகளாம்.

---

## 51. ஞானயோகம்

பாண்டவ கௌரவர்களுக்குச் சிற்றப்பன் முறையில் விதுரர் என்ற ஓர் ஸத்சூத்திரர் இருந்தார். அவர் மஹா தர்மவான். தமது ஜாதி தர்மத்துக்கு ஏற்றபடி ஸகல கலைஞானங்களையும் கற்றுணர்ந்தவர். ஜாதிதர்மத்துக்குத் தகுந்தபடி வேதங்களை மாத்திரம் இவர் அப்யஸிக்கவில்லை. எல்லா விஷயங்களிலும் திருதராஷ்டிர மஹாராஜன் இவரைக் கேட்டு இவர் வார்த்தைகளை மிகக் கௌரவப்படுத்தி நடந்துகொண்டு வந்தான். இப்படியிருந்

தும் ஆதிமுதற்கொண்டே உலக விஷயங்களின் நிலையா மையை உணர்ந்தவர்போல் எக்காலத்திலும் எதற்கும் தாமாக முன்வந்து ஒன்றும் சொல்லாது தம்மைக் கேட்ட அளவில் அவசியமானவரையில் சொல்லவேண்டியவைக ளைச்சொல்லி விதுரர் தமது மனதில் ஒன்றையும் ஏற்றுக் கொள்ளாது சாந்தமாகவே யிருந்தார். ஆதிமுதல் இவர் எவ் விஷயத்திலும் நிர்ப்பயமாகவே தமக்குத் தோன்றியவை களைச் சொல்லவேண்டிய ஸமயங்களில் சொல்லிவந்தார். துரியோதனன் பிறந்து கழுதைபோல் கத்திய காலத்தில் இவர் நிர்ப்பயமாய் "இவனால் உலகத்திற்கு மிகுந்த கேடு உண்டாகப் போகிறது, நூறு பிள்ளைகளில் ஒருவன் இறந்தால் என்ன குறைந்து போகும், இவனைக் கடலில் எறிந்து விடுங்கள்" என்று தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். பின்னர் வரவர கௌரவர் கொடுமை அதிகரித்த காலத்தில் சண்டை சச்சரவுகளை அதிகப் படுத்தாது விஷயங்களை இவர் ஸரிவர நடத்தி வந்தார். துர்யோதனாதிகளுக்கு அநாவசியமான கோபத்தை இவர் உண்டாக்கவும் இல்லை; பாண்டவர்களைத் துர்யோதனாதியர் கொடுமைக்கு ஆளாகும்படி விட்டுவிடவும் இல்லை. அரக்குமாளிகை விஷயத்தில் விதுரர் நடந்துகொண்ட மாதிரியே இதற்குச் சிறந்த திருஷ்டாந்தம். மாயச் சூதாடிப் பாண்டவர்கள் தோல்வி யடைந்த காலத்தில் ஸபைக்குக் கொண்டுவரப்பட்ட த்ரௌபதியின் கேள் விக்கு இவரே தயங்காது உண்மையான விடை அளித்தார். இவ்வாறு விதுரர் வியவஹாரங்களில் ஸாதாரணமாகத் தலையிட்டுக்கொள்ளாமலும், அப்படி வியவஹாரத்துள் புகும்படி நேரிட்டகாலத்தில் நிர்ப்

பயமாய் மிருந்த நேர்மையுடன் நடந்துகொண்டும் தமது காலத்தை ஒதுக்கியே கழித்துவந்தார்.

இப்படி இவர் நடந்துகொண்டு வருகையில் இவர் மனம் நன்றாகச் சுத்தம் அடைந்தது. துர்யோதனுதியருடைய கொடுமையும் வரவர அதிகரித்தது. பாண்டவர்களைக்காட்டிலும் விராட நகரத்திலும் துன்பம் அநுபவிக்கச் செய்து அவர்கள் வெளிவந்து தமது ராஜ்யபாகம் கேட்ட காலத்தில், ராஜ்யம் கொடுப்பதில்லையென்று திருதிராஷ்டிரனைக் கொண்டு துர்யோதனன் நயமாகப் பாண்டவர்களிடம் அறிவித்தான். இத்தூது சென்று திரும்பிய ஸஞ்சயன் பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொள்ளாவிடில் அவன் பிள்ளைகளை இழக்கும்படி நேரிடும் என்று திருதிராஷ்டிரனைப் பயமுறுத்திச் சொல்லிச் சென்றவுடன் அன்றிரவு தூக்கம் பிடியாது திருதிராஷ்டிரன் விதுரரை புத்திமதிகேட்டான். அக்காலத்திலேயே விதுரருக்குத் துர்யோதனுதியர் பக்கத்தில் இருக்க மனம் ஒப்பவில்லை. பாண்டவர்களிடம் போனுலோ, உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்ததாய் விடும் என்று தோன்றிற்று. பீஷ்மர் அகப்பட்டுக்கொண்ட தர்மஸங்கடத்தில் இவரும் அகப்பட்டுக்கொண்டார். எல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும் என்று மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு திருதிராஷ்டிரனிடம் வந்து தர்மங்கள் எடுத்துக் கூறுவதில் அன்றிரவு முழுவதையும் கழிக்கத் தொடங்கினுர். அதில் ஸஞ்சயர் கூறியபடியே இவரும் கூறி முடிக்க, திருதிராஷ்டிரன் தனக்கு ஞானவிஷயங்களை எடுத்துக் கூறவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அதற்கு விதுரர் " அவ்விஷ

யங்கள் எனக்குத் தெரிந்திருந்தும் என் ஜாதி தர்மப்படி அவைகளை எடுத்துக்கூற நான் தகுந்தவன் அல்லன்" என்றுகூறித் தனது த்யானவிசேஷத்தால் அந்த உள்ளில் ப்ரஹ்மாவின் மானஸ புத்திரரான ஸனத்குமாரரை அழைத்து அவனுக்கு ஞானோபதேசம் செய்யச்சொன்னார். இவ்விரவில் நடந்த விஷயங்களால் விதுரரது ஞானச்சிறப்பு, தர்மானுஷ்டானம், மனதின் வலிமை இவைகள் வெளியாயிற்று. பின்னர், பகவான் பாண்டவர் கட்காகத் தூதுவந்தகாலத்தில், பாண்டவர் பக்கத்தில் இருக்குங்கால் ஹஸ்தினபுரியில் சோறு உண்ணக்கூடிய வீடு, மஹா சுத்தமாயும், நடுநிலைமையில் இருப்பவராயும் உள்ள விதுரர் வீடு ஒன்றே என்று மதித்து எவரையும் கவனியாது அவர்வீட்டிலேயே போய்த் தங்கினர்.பகவான் போனபின்னர் திருதிராஷ்டிரன் வகையறியாது குழம்பிக்கொண்டு விதுரரை யழைத்துப் புத்திமதி கேட்ட காலத்தில் அவர்"துர்யோதனன்பிறந்தபோதே சொன்னேனே. அவ்வாறு செய்திருந்தால் இந்நிலை வந்திராதே, இன்னும் தருணம் தப்பிவிடவில்லை. இப்பொழுதாகிலும் துர்யோதனனைக் கடலில் கொண்டு எறிந்துவிடும். அவன் இருக்கிறவரையில் இந்த நாசம் உம்மைவிட்டு நீங்காது"என்று தைரியமாய்ப் புத்திமதி கூறினர். இதைத் துர்யோதனன் மறைந்து கேட்டுக்கொண்டிருந்தான். உடனே மிகுந்த கோபம் வர, "நன்றிகெட்டவனே, என் ராஜ்யத்தைவிட்டு இன்றே போய்விடு". என்று பிதற்றினன். விதுரர்,இதைக்கேட்டதும்பகவானே வழிவிட்டார் என்று எண்ணினர். " இவனைவிட்டு எப்படி நீங்குவது என்றல்லவோ பார்த்திருந்தோம், இப்பொழுது தருணம் வாய்த்

தது," என்று மிகுந்த சாந்த மனதுடன் துர்யோதனனை யும் கடிந்து கொள்ளாது,பாண்டவர் பக்கமும் போக மன மில்லாதவராய் ஸன்யாஸியாக வெளிக்கிளம்பி தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டார்.

விதுரர் தீர்த்தயாத்திரை செய்துகொண்டு மனத்தி லிருந்த பற்றுகளை நீக்கி மிகப் பரிசுத்தராய்த் திரும்பி வந்த காலத்தில், தர்மபுத்திரர் துர்யோதனாதியரை வேரோடு நாசம் செய்துவிட்டார் என்று கேள்விப்பட்டு ஓடோடியும் வந்து திருதிராஷ்டிரனை நீதிக்கதைகள் சொல்லித் தேற்றி, காலக்கிரமத்தில் அவனுக்கு வைராக் யம் வரும்படி செய்தார். அதன்பின்பு அவனைக் காந் தாரி குந்தியோடு ஹஸ்தினுபுரிவிட்டு வெளியேறும்படி செய்து கங்கைக்கருகில் தபஸ் செய்து நற்கதி யடையும் படி செய்தார். கங்கைக்கரை கொண்டுவந்து விட்டுவிட்டுத் தீர்த்த யாத்திரையில் சுத்தமான தமது மனதில் ஞானம் உதயமாக, ஹரித்வாரம் சென்று அங்கு கிருஷ்ணபர மாத்மா பரமபதம் செல்லுங்கால் தனக்கு உபதேசிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மைத்ரேயரிடம் அன் புடன் சொல்லியிருந்த விஷயங்களை அவரிடமிருந்து கிரஹித்து நிஷ்டை கைகூடித்தமது தேகத்தையும் தமது எனப் பாராட்டாத மேலான நிலையை விதுரர் அடைந் தார்.

இவ்வாறு அடைந்து அவதூத ஸந்யாஸியாகித் தேகம் உட்பட ஒன்றையும் கவனியாதவராய்ப் பரம் பொருளோடு கலந்த மனத்துடன் காட்டில் பைத்தியம் பிடித்தவர்போலும், கட்குடியர்போலும் உலாவத்தொடங் கினர். இந்நிலையில் இவரிடம் மிகுந்த அன்பு பாராட்

டிய தர்மபுத்திரர் இவரைக் கண்டார். அவர் முன்னிலையில் ஒரு மரத்தில் சாய்ந்தவண்ணம் இவர் ஸித்திபெற இவர் தேகம் நழுவிவிட்டது. அன்பின் மிகுதியால் தர்மபுத்ரர் இவருக்கு ஈமக்கடன்களைச் செய்ய முயன்றார். அப்பொழுது "இறந்தபின் எல்லோர் விஷயத்திலும் இருப்பது போன்றதும் ஈமக்கடன்களைப் பெறுவதும் ஆன சேஷம் இவர் விஷயத்தில் இல்லை. இவர் மேலான பதவியை அடைந்துவிட்டார். இவர் விஷயத்தில் செய்யப்படும் கர்மங்களெல்லாம் வீணையாதலால் ஒன்றும் செய்யவேண்டாம்" என்ற ஓர் அசரீரி வாக்கு உண்டாயிற்று. இதனாலேயே விதுரர் ப்ரஹ்மமாகி, விதேக முக்தி பெற்றார் என்பது வெளியாகும்.

இவர் சிறந்த ஞானயோகி. ஞானயோகத்தின் முக்கிய லக்ஷணங்களாவன :—(1) விஷயம் அநித்யம், ப்ரஹ்மம் நித்யம் என்ற அறிவு; (2) ஆத்மாவே ப்ரஹ்மம் என்ற உணர்ச்சி; (3) இதன்படி நின்று ஸஹஜ ஸமாதி பெற்று விதேக முக்தி யடைதல் என்பவைகளே.



பரமசிவன் யமனை உதைத்து மார்க்கண்டேயனைக் காத்தல்

—45-ம் பக்கம் பார்க்க



ஸ்ரீமத் சங்கராசாரியர்

—101-ம் பக்கம் பார்க்க

# VI. ஆசார்யர்கள் சரிதை

## 52. ஸ்ரீமத் சங்கராசாரியர்

ஸ்ரீமத் சங்கராசாரியர், கொச்சி ஷோரனூர் இருப்புப் பாதையில் ஆல்வாய் என்ற ஊருக்கு அருகாமையில் 5, 6-மைல் கிழக்கே யிருக்கும் காலடி என்னும் கிராமத்தில் சுமார் * 2400-வருஷங்களுக்கு முன் அவதரித்தவர். இவர் தாய் தந்தையருக்கு முறையே ஆர்யாம்பாள் என்றும், சிவகுரு வென்றும் பெயர். இவர்கள் மகா சிவ பக்தர்களா யிருந்தனர். பரமசிவமே இவர்கள் பக்திக்கு மெச்சி இவர்களிடம் ஸ்ரீமத் சங்கராசாரியாராக அவதரித்தாரென்று இவரைப் பற்றிய சரித்திரங்கள் கூறும். இவர் இளம் பிராயத்திலேயே மிகுந்த புத்தி நுட்பமுடையவராயிருந்து ஸகல சாஸ்திரங்களையும் வெகு சீக்கிரத்தில் கற்றுணர்ந்தார். இளமையிலேயே இவர், தம் தகப்பனாரை இழக்கும்படி நேரிட்டது. பின்னர் தாய்க்கு உதவியாக இவர் வளர்ந்துவரும் காலத்தில் இவரது கல்யாண பிரஸ்தாபம் ஏற்பட, தமக்குத் துறவறத்திலேயே மனம் இருக்கிறதென்றும், ஆதலால் விவாகம் வேண்டாம்

---

* இவர் காலம் சுமார் 1200-வருஷங்களுக்கு முன்புதான் என்று இக்காலத்தவர் மதித்திருக்கின்றனர். ஆனாலும் சுமார் 2400-வருஷங்களுக்கு முன்னர் இவரது அவதாரகாலம் இருக்க வேண்டும் என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன வென்று இவ்விஷயத்தில் நூதனமாய் ஆராய்ச்சி செய்தோர் அபிப்பிராயப்படுகின்றனர்.

என்றும் மறுத்தார். அப்பொழுது இவர் தாயார் மிகுந்த துக்கப்பட அந்த வார்த்தையை அவ்வளவில் நிறுத்தி விட்டார். கொஞ்சநாள் கழிந்தபின்னர், இவரும் இவர் தாயும் அருகாமையிலிருந்த ஆற்றுக்கு நீராடச் சென்ற னர். அங்கு ஓர் முதலை இவர் காலைக் கவ்விக்கொள்ள, "எனக்கு முடிவுகாலம் வந்துவிட்டது, இப்பொழுதாவது ஆபத் ஸந்யாஸம் வாங்கிக்கொள்ள அனுமதி கொடுக்க வேண்டும்" என்று தாயை வருந்திக் கேட்டார். இந்தக் கஷ்ட ஸமயத்தில், தாய் மனமிரங்கி அனு மதி கொடுக்க, இவர் மனதினாலேயே ஸந்யாஸத்துக் குரிய மந்திரங்களை யெல்லாம் தியானம் செய்துகொண்டு ஸந்யாஸியாகத் தீர்மானித்தார். முதலையும் இவரை விட்டுவிட்டது. கரை ஏறியதும், தாயாரைத் தம் உற வினரிடம் ஒப்புவித்து, அவள் முடிவுகாலத்தில் தாம் எப் படியாவது வந்து உதவுவதாக வாக்களித்துக் குருவைத் தேடிக்கொண்டு தேச ஸஞ்சாரஞ்செய்யப் புறப்பட்டனர்.

போகும் வழியில் அநேகம் வித்வான்கள், சிறு வய தாயிருப்பவர் ஸந்யாஸம் கொள்ளலாகாது என்று விஸ் தாரமாக இவருடன் வாதிக்க, இவர் சுருதி யுக்தி முதலிய வற்றால் வெகுநேரம் அவர்களுடன் தர்க்கம்செய்து "ஸந் யாஸ ஆச்ரமம் மிகச் சிறந்தது ; மோக்ஷத்திற்கு முக்கிய ஸாதனம் ; இதை யடைய, வயது முக்கிய ஸாதனமாக மாட்டாது. எவ்வயதில் இருந்தாலும், தகுந்த சாஸ்த்ர ஞானத்தின் பேரில் உலகவிஷயங்களில் உண்மையான மாறா வெறுப்பு ஏற்பட்டால் அப்பொழுதே ஸந்யாஸம் செய்து கொள்ளலாம்" என்று முடிவுகூறி அவ்வித்வான் களை வாய் எடுக்க வொட்டாமற் செய்தார். அவர்களிட

யிருந்து ஸந்யாஸப்ரதிஷ்டாபனுசாரியர் என்ற பட்டப் பெயர் பெற்று, வடக்கே செல்லுகையில் நர்மதா நதி தீரத்தில் ஸ்ரீ கோவிந்த யோகி என்ற யதீசுவரரைக் கண்டு அவரிடம் சிஷ்யனுக அமர்ந்து நிஷ்டைபழகி ஸித்தி பெற்றூர். இவரிடத்தும் இவர் குருவாகிய ஸ்ரீ கௌட பாதரிடத்தும் தமக்குள்ள நன்றியறிதலை சங்கராசாரியர் தாம் பின்னர்ச் செய்த கிரந்தங்களில் அடிக்கடிக் காட்டி யிருக்கிறூர்.

ஆசாரியரது ஆஞ்ஞைப்படி இவர் காசிக்ஷேத்திரம் அடைந்து, அங்கு அவர் சிஷ்யர்களை அங்கீகரிக்கத் தொடங்கிஞர். அங்கே இவருக்குப் பத்மபாதர், என்ற ஒரு சிறுவரும் சிஷ்யராகவந்து அமர்ந்தார். இங்குத்தான் சங்கராசாரியர் தமது வியாக்யானங்களையும் அற்புதமான சிறிய சுலோகங்களையும் இயற்றியது. இங்குத்தான் இவர் ஓர் பறையனைத் தூரவிலகு என்று கூறின காலத்து, அவன் கேட்ட அத்வைதக் கேள்விகளுக்குப் பதிலாக "பிரபஞ்சத்தை அத்வைத திருஷ்டியால் உணருபவன் எவனே, அவன் சண்டாளனுயினும் துவிஜனுயினும் என்குருவே" என்று முடிவுபெறும் மனீஷாபஞ்சகம் என்ற ஐந்து சுலோகங்களையும்; அநியாயமாய்த் தனது ஆயுள் முழுவதையும் இலக்கணப் பயிற்சியில் வீணுகக் கழித்த ஒருவனை நோக்கி பஜகோவிந்தம் என்று முடிவு பெறும் சுலோகங்களையும் இவர் வெளியிட்டார். காசிக்ஷேத்திரத்தில் இவருக்கும், மஹாஞானியான ஓர் கிழ ப்ராஹ்மணருக்கும் ப்ரஹ்மஸூத்ரபாஷ்ய விஷயமாக வெகு தர்க்கம் ஏற்பட, முடிவில் தகுந்த ஆதாரங்கள் காட்டி சங்கராசாரியர் அவரைத் திருப்திப்படுத்திஞர். வியாஸரே

ஒரு கிழவர் ரூபமாக வந்து சங்கராசாரியாரது அறிவின் நுட்பத்தைக் கண்டு ஆனந்தித்தார் என்று ஸ்ரீ சங்கரா சரிதைகள் கூறும்.

பின்னர்க் காசி க்ஷேத்திரத்திலிருந்து இவர் அத்வைத ஸித்தாந்தத்தைப் பரவச்செய்ய வெளியேறினார். பிரயாகையண்டை வருங்கால், அங்கு, மாறு வேஷம் பூண்டு, பௌத்தமதத்தின் குற்றங்களைப்பௌத்த குருக்களிடமிருந்தே தெளிவாகத் தெரிந்துகொண்டு, பின்னர் அவைகளை எடுத்துக் காட்டிப் புத்தமதத்தைக் கண்டித்து வேதத்தின் கர்ம காண்ட பாகங்களே மிகச் சிறந்தவை; அவைகளே ஈசுவரனைவிடச் சிறந்தவை என ஆரியதருமத்தை நிலை நிறுத்திய குமாரில பட்டரைக் கண்டார். அப்பொழுது அவர் சுற்றிலும் உமி முதலியவைகளால் மூடப்பட்ட நெருப்பில் பாதி எரிந்துகொண்டிருந்தார். இம்மாதிரி செய்யக் காரணம் என்னவென்று சங்கராசாரியர் கேட்க, அதற்கு அவர் "நான் என் குருக்களாகிய புத்தர்களுக்குத் துரோகம் செய்தேன், கருமங்களின் சிறப்பை நிலைநிறுத்த ஈசுவரனைக் கூட லக்ஷியம் செய்யாது விட்டுவிட்டேன்; இவ்விரண்டு பாபங்களுக்கும் இதுவே பிராயச்சித்தம்" என்றார். பின்னர், அவருடன் சாஸ்திர ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற சங்கரரை நோக்கி, "எனக்கு மரண காலம் வந்துவிட்டமையால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. ஆதலால் மாஹிஷ்மதி என்ற பட்டினத்தில் என் சிஷ்யன் மண்டனமிச்ரன் என்னும் ஒரு மஹா வித்வான் இருக்கிறான். அவனை நீர் திருப்திசெய்தால் என்னைத் திருப்தி செய்ததற்கு ஸமானம்" என்று கூறி

தேகம் நீங்கினர். இவரது நேர்மையையும் மனதின் சுத்தியையும் கண்டு மிகுந்த அன்பு கூர்ந்து சங்கரர் சற்று வியப்படைந்தார்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் மாஹிஷ்மதிக்கு வந்து, மண்டனமிச்ரரோடு வெகுநாள் வாதம் செய்து அவரைத் திருப்திப்படுத்தி ஸந்யாஸியாக்கினர். அப்பொழுது அவர் பெண்சாதியாகிய பாரதி தேவியும், துறவறம் பூண்டு, சங்கராசாரியரோடு கணவன் பின்னே புறப்பட்டாள். மண்டனமிச்ராருக்கு இந்த ஆச்ரமத்தில் ஸுரேசுவர ஆசார்யர் என்ற பெயர் வந்தது. பின்னர் சங்கரர் தக்ஷிணதேசத்தை நோக்கிப் புறப்பட்டார். இதற்குள் இவருக்கு தோடகர், ஹஸ்தாமலகர், என்ற இரண்டு சிஷ்யர்களும் ஏற்பட்டார்கள். இவர் போன வழியில், அநேக கொடிய வழக்கங்களுடைய மதஸ்தர்கள் எதிர்ப் பட்டனர். அவர்களது மதங்களும் வழக்கங்களும் இன்னவையென்று அவர்களிடமிருந்தே ஸாவதானமாகத் தெரிந்துகொண்டு, அவர்களிடம் இருந்த கெட்ட பழக்கங்களை யெல்லாம், வேதங்கள் முதலியவைகளிலிருந்து தகுந்த ஆதாரங்களைக் காட்டி மறுத்து, அவர்கள் ஆராதனையை நிலை நிறுத்தி, அது சென்று முடியும் நிலையாகிய அத்வைத நிலையை நன்கு விளக்கி மதத் துவேஷங்களை ஒடுக்கி அவர்களை யெல்லாம் சீர்திருத்தினர்.

பின்னர், தெற்கே துங்கபத்ரா நதி உற்பத்தி ஸ்தானத்தருகில் அவர் வந்து சேர்ந்தார். அங்கு அவர் சிருங்கேரி எனும் இடத்தில் ஓர் மடத்தை ஸ்தாபித்து, அதில் தமது சிறந்த சிஷ்யரான ஸுரேசுவர ஆசாரி

யனை அதிபதியாக ஏற்படுத்தினார். அங்கு அவர் கொஞ்ச காலம் தங்கியிருக்க, அப்பொழுது கூடவேயிருந்த பாரதி என்பவளுடைய ஒழுக்கம், பரிசுத்தம் முதலிய சிறந்த ஆத்ம குணங்களைக்கண்டு, அவளது பிற்காலத்தில் அவளை அங்கேயே ஆராதிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். இன்னும் அவள் சாரதாம்பிகையாக அம்மடத்துள் ஆராதிக்கப்பட்டு வருகிறாள்.

இங்கு இருக்கையில், இவர் தாயாரது அபாய நிலை இவருக்குத் தெரியவந்தது. உடனே சிஷ்யர்களை விட்டு விட்டுத் தாம் தனியாகக் காலடி வந்து சேர்ந்தார். அங்கு சாகும் தருணத்திலிருந்த தாயாருக்குத் தகுந்தபடி உபதேசங்கள் செய்து, ஸுகமாக அவளைப் பரலோகம் சேர்ப்பித்து விட்டு, அவளுக்குச் செய்யவேண்டிய ஈமக் கடன்களைச்செய்ய எத்தனித்தார். அங்கிருந்தப்ராஹ்மணர் களெல்லோரும் ஸந்யாஸிக்குக் கர்மம் செய்ய அதிகாரம் இல்லை என்று கூறி, இவருக்கு ஸஹாயம் செய்யாது ஒதுங்கி விட்டார்கள். தாமே தம்மால் இயன்ற மட்டும் தாய்க்குச் செய்ய வேண்டியவைகளை ஸரிவரச் செய்து முடித்து, தம்மைக் கஷ்டப்படும்படி விட்டுவிட்டவர்களது ஒழுக்கங்களை மாற்றிவிட வேண்டுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தார். தாய்விஷயத்தில், ஸஹாயமில்லாததால் இவர் எந்த எந்த மாதிரி எல்லாம் செய்யும்படி நேர்ந்ததோ, அந்த அந்த மாதிரியாக இவரைத் தடுத்தவர்களெல்லோரும் எப்பொழுதும் செய்துவரவேண்டும் என்று அவ்வூரரசர் மூலமாய் ஏற்பாடுகள் செய்தார்.

இதன் பின்னர், இவர் தக்ஷிண தேசத்தின் கீழ்க் கரையோரமாக யாத்திரை செய்யப் புறப்பட்டுத் திருவா

ஜைக்காவல், கஜாரண்யம் காஞ்சிபுரம், திருவொற்றியூர் முதலிய இடங்களிலிருந்த சாக்தேயர்களைச் சீர்திருத்திக்கொண்டு ஜகந்நாதம் வந்து, அங்கு ஓர் மடம் ஏற்படுத்தினார். பின்னர் ஆரியாவர்த்தம் வழியாக யாத்திரை செய்து அங்கிருந்த கொடிய மதஸ்தர்களைச் சீர்திருத்தித் துவாரகை வந்து அங்கும் ஓர் மடம் ஏற்படுத்தினார். பின்னர் காஷ்மீரம் சென்று அங்கிருந்த பௌத்தர் முதலியோரை ஜயித்து வியாஸ பௌர்ணிமையன்று ஸர்வஞ்ஞபீடம் ஏறி, மிகச்சிறப்புற்று விளங்கினார். இவ்வாறு மடங்களைச் சீர்படுத்திக்கொண்டு, ஆஸாம் தேசத்தில் காமரூபம் என்ற பட்டினம் வந்து அங்கிருந்த அபிநவகுப்தன் என்ற பெரிய சாக்தேயனை எதிர்த்து, தோல்வியுறச் செய்தார். இதனால் அவன் கோபங்கொண்டு, சங்கராசாரியார் மேல் ஆபிசாரப்ரயோகம் செய்து அவருக்கு மூலவியாதி வரும்படி செய்துவிட்டான். இதனால் வரவர இவர் பலம் குறைந்துகொண்டே வந்தது. இதைப் பத்மபாதர் உணர்ந்து, தகுந்த மந்திரங்கள் மூலமாக இதை மாற்றி விட்டார். ஆயினும் இந்த வியாதியின் வேகம் முற்றிலும் போகவில்லை. தேகம் தளர்வதைக் கண்ட ஆசாரியார், பதரிகாசிரமம் சென்று அங்கோர் மடம் ஏற்படுத்தி, அருகாமையில் ஓர் நாராயண க்ஷேத்திரத்தையும் கட்டி வைத்தார். பின்னர் கேதாரம் வந்து இளம் பிராயமாகிய 32-ம் வயதில் ஸித்திபெற்றார்.

ஸ்ரீமத் சங்கராசாரியார், வேதங்களில் அத்வைதம் என்ற முடிவை எடுத்துத் தம் முன்னோர்கள் அனுஷ்டித்துத் தெளிந்ததின்படி, உலகில் எல்லோரும் உணர்ந்து உய்யும்பொருட்டு அநேக க்ரந்தங்கள் மூலமாக வெளி

யிட்டு யுக்திகள் மூலமாக அதை ஸ்தாபித்தார். இதன் படி:—

(1) பரமாத்மா ஒருவரே உண்மையான வஸ்து ;

(2) மற்றப்படி ஜீவ ஜகத்தாகத்தோற்றுபவை கள் எல்லாம் மித்யை : பரமாத்மாவே கயிற்றில் பாம்பு போல ஜீவனுகவும் , ஜகத்தாகவும், ஈசுவரனுகவும் தோற்றுகிறுர் ;

(3) ஜீவாத்மா இதை நன்கு உணர்ந்து அனுப வித்து விட்டால் கட்டு நீங்கி நானே பரம்பொருள் என்று தேறித்தெளிவன். இதுவே மோக்ஷம்;

(4) வேதங்களில் காணப்படும் மதபேதங்கள் எல் லாம் பலவிதமாக விருக்கும் ஜனங்களை இந்த அத்வைத முடிவில் கொண்டு சேர்க்க அவசியமானவைகள், ஆதலால் அவைகளைப் பின் பற்றுபவர் மனுேநிலேக்கு ஏற்ற வழி யைப் பின் பற்றி முயன்ருல் கிரமமாக இந்த அத்வைத முடிவுக்கு வந்து சேரலாம் ; ஆதலால் ஒரு வழியையும் பழிக்க இடமில்லை ;

என்று ஸகலமதஸ்தாபனம் செய்து அத்வைதத்தை ஸித்தாந்தம் செய்தார்.

## 53. ஸ்ரீமத் ராமானுஜாசாரியர்

ஸ்ரீமத் ராமானுஜாசாரியர் சென்னப்பட்டணத்திற் குத் தென்மேற்கில் ஸுமார் 20 மைல் தூரத்திலிருக் கும் ஸ்ரீபெரும்பூதூர் என்ற ஊரில் சற்றேறக்குறைய 900 வருஷங்களுக்கு முன் அவதரித்தார். இவரை ஆதி சேஷனது அவதாரமென்று இவர் சரிதங்கள் கூறும். இவர் தாய் தந்தையர்கள் பெயர், முறையே தஞ்சாம்பாள்

கேசவபட்டர் என்பவைகளே. அக்காலத்தில் ஸ்ரீரங்கத்தில் மதாதிபதியாயிருந்த ஸ்ரீ ஆளவந்தார் என்பவருக்கு இவர் தாய் வழியில் நெருங்கின உறவு. இவருக்குத் தம்பி முறைமையில் கோவிந்தப்பட்டர் என்றொருவர் இருந்தார். இவர்கள் இருவரும் காஞ்சிபுரம் சென்று யாதவப்ராகாசர் என்ற ஒரு அத்வைத ஆசாரியரிடம் கல்வி கற்றனர். ராமானுஜர் படித்து மேன்மேலும் விருத்தியடைந்துவரும் சிறப்பைக் கேள்வியுற்று, கொள்பாட்டனாகிய ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீரங்கத்திலிருந்து நேரிட வந்து, காஞ்சிபுரத்தில் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளாது ரஹஸ்யமாகவேயிருந்து ராமானுஜரது கல்வித் திறமையைக் கண்டு மகிழ்ந்து, "இவரே நமக்குப்பின் மத அதிபதியா யிருக்கத் தகுந்தவர்" என்று மதித்து, தாம் வந்தது ராமானுஜருக்குத் தெரிந்தால் எங்கே அவர் கல்விக்கு இடையூறு நேரிடுமோ என்று அஞ்சி, வந்தபடியே ரஹஸ்யமாக ஸ்ரீரங்கம் போய்ச் சேர்ந்தார்.

இவ்வாறு கல்விகற்று வரும்நாளில், சிற்சில விடங்களில் யாதவப்ராகாசர் எடுத்துக்கூறியபொருள்கள் இவர் மனத்திற்குப் பொருந்ாதவை என்று தோன்ற அவைகளின் பொருளைத் தாமே எடுத்து விஸ்தரிக்கலாயினர். இவர் கூறியது அங்கிருந்த சிஷ்யர்களுக்குப் பொருத்தமாகப்படக், குருவுக்கும் சிஷ்யனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. மேலும், அங்கிருந்த அரசன் பெண்ணை ஓர் பேய் பிடித்து ஆட்ட, அது யாதவப்ராகாசர் என்ன சொல்லியும் போகாது, ராமானுஜரது உத்தரவின்பேரில் அப்பெண்ணை விட்டு ஓடிப்போய் விட்டது. இதனால் முன்னிருந்த மனஸ்தாபம் அதிகரிக்க, இதன் பின்னர்

ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தைச் சாக்கிட்டுக்கொண்டு யாதவப்ரகாசர், ராமானுஜரை தம் சிஷ்யக்கூட்டங்களி லிருந்து நீக்கிவிட்டார். இது போதாதென்று, சிஷ்யரைக் கொல்வதற்காகக் குரு, காசியாத்திரை யென்ற ஓர் வியா ஜத்தைக்கொண்டு ராமானுஜர், கோவிந்தப்பட்டர் முதலி யோரையும் கூட அழைத்துக்கொண்டு புறப்பட்டார். கொஞ்ச தூரம் போவதற்குள் தம்மைக் கொல்ல ஏற் பட்டிருக்கும் ஏற்பாடுகள் ராமானுஜருக்குத் தமது தம்பி மூலமாக வெளிவர, நடு இரவில் ராமானுஜர் தப்பித்துக் கொண்டு விடியும் முன் காஞ்சீபுரம் வந்து சேர்ந்தார்.

இங்கு வந்ததும், தாயாரின் வேண்டுகோளின்படி கிரஹஸ்தாச்ரமத்தில் அமர்ந்து, கஞ்சி வரதராஜருக்குத் தொண்டுகள் செய்து காலங்கழிக்கத் தொடங்கினார். இங்கு இப்படி யிருக்க, ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ஆளவந்தார் தமது காலம் சீக்கிரம் முடிந்துவிடும் என்று மதித்துத் தமது சிஷ்யர்களுள் பெரியவரான பெரியநம்பி என்ற வரைக் காஞ்சீபுரம் அனுப்பி, எப்படியாவது ராமானுஜரை அழைத்து வரும்படி சொன்னார். இவர் திரும்பி வருவ தற்குள் ஸ்ரீ ஆளவந்தார் பகவான் பாதாரவிந்தங்களில் சேர்ந்துவிட, அவரது தேகத்துக்குச் செய்ய வேண்டிய கடன்களை மற்றைய சிஷ்யர்கள் செய்யத் தொடங்கினர்.

இச்சமயத்தில் ராமானுஜர் வந்துசேர, ஸ்ரீ ஆளவந் தாரிடம் இருந்த அன்பின் மிகுதியால் இவருக்கு மிகுந்த துக்கம் வர அவர் தேகம் முழுவதையும் மிகுந்த ஆவ லுடன் உற்றுப்பார்த்தார். வலது கையில் மூன்று விரல் கள் மடிக்கப்பட்டிருந்ததைக் கண்டார். அதன் கார ணத்தை விசாரித்த காலத்தில், ஆளவந்தாருக்கு

மூன்று குறைகள் இருந்தனவென்றும் அவை (1)ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு எளிய நடையில் ஓர் வியாக்யானம் செய்வது ; (2) பராசரர் என்ற பெயரைத் தகுந்தவருக்கு வைப்பது ; (3) திருவாய்மொழிக்கு எளிய நடையில் வியாக்யானம் செய்வது என்றுந் தெரியவந்தது. இவைகளைத் தீர்த்துவிடுவதாக ராமானுஜர் வாக்களித்ததும், மடங்கிய விரல்கள் நிமிர்ந்தன. ஆளவந்தாரது ஈமக்கடன்கள் முடியும் வரை அங்கிருந்து மறுபடியும் அவர் காஞ்சிபுரம் திரும்பினார்.

இவ்வாறு தமது எண்ணம் முடிவு பெறாததால், ராமானுஜருக்கு இன்னது செய்வதென்று தோற்றாது மிகவும் குழப்பத்தை யடைந்தார். அப்பொழுது அவருக்குப் பகவத் அனுக்ரஹத்தால் "பரம்பொருளே சிறந்தது· முடிவான நிலையில் பேதமற்றுப் போகாது, பக்தியே மோக்ஷ ஸாதனம், மோக்ஷம் பகவத் கிருபையால் வருவது, பெரியநம்பியே சிறந்த ஆசார்யன்" என்ற விஷயங்கள் தெரியவந்தன. இவ்வாறானதும், ராமானுஜருக்கு ஸ்ரீரங்கம் சென்று எப்படியாவது பெரியநம்பியிடம் உபதேசம் பெறவேண்டும் எனத்தோன்றிவிட்டது.உடனே இவர் ஸ்ரீரங்கம் நோக்கிப் புறப்பட்டார். இப்படியிருக்க ஸ்ரீரங்கத்தில், ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தானத்தில் ஒருவரும் இல்லாமல் போக, அவருடைய பிரதம சிஷ்யர்களெல்லாம் சேர்ந்து பெரியநம்பியை அழைத்து, "எப்படியாவது காஞ்சிபுரம் சென்று, ராமானுஜரை அழைத்து வரவேண்டும்" என்று சொல்லி யனுப்பிவித்தார்கள். பெரியநம்பி காஞ்சிபுரம்நோக்கிவந்துகொண்டிருந்தார். 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது' என்பது போல, ஒருவரை

யொருவர், மதுராந்தகம் ஏரிக்கரையில் உள்ள ஸ்ரீராமர் கோயிலில் சந்தித்தார்கள். ஒருவரை யொருவர் விசாரித்ததின் பேரில், ஒருவரை யொருவர் தேடிப் புறப்பட்டு வந்ததாகத் தெரியவந்தது. ராமானுஜாது வேண்டுகோளின் பேரில், பெரியநம்பி அவருக்கு அங்கு ஓர் மரத்தடியில் உபதேசம் செய்து இருவரும் காஞ்சிபுரம் வந்து அங்கே இருந்து தமதுகுடும்ப சகிதமாகக் கொஞ்ச நாள்சேர்ந்து வஸித்தார்கள்.

ராமானுஜாது பெண்சாதி ஒரு சிறந்த குணவதியாயில்லாததினால் அவருக்குச் சிற்சில சமயங்களில் மனஸ்தாபம் வரும்படி நடந்துகொண்டாள். இரண்டு முறை அவர் மன்னித்தார். மூன்றும் முறை அவள் பெரியநம்பியின் பெண்சாதியுடன் சண்டையிட்டுக் குடும்பத்தோடு கூட அவரை, சொல்லிக்கொள்ளாது ஸ்ரீரங்கம் போகும்படி செய்துவிட்டாள். இதைக் கேட்டதும், ராமானுஜர் மனம் மிக வருந்தியது. அந்தச் சமயத்தில், அவர் மாமனார் தன் பெண்ணை ஊருக்கு அனுப்பவேண்டும் என்று வேண்டிக்கொள்ளத், தாமதியாது அவளை அனுப்பி விட்டு உடனே ஸந்யாஸம் வாங்கிக்கொண்டனர்.

இந்த ஸங்கதி வெளியானதும் இவரிடம் அநேகம் சிஷ்யர்கள் வந்து கூடினர். ஆளவந்தார் சிஷ்யரும் பிள்ளையுமான ஆரியரை, மற்றைய சிஷ்யர்கள் அனுப்புவித்து எப்படியாவது ராமானுஜரை ஸ்ரீரங்கம் அழைத்து வரும்படி ஏற்பாடு செய்தனர். ராமானுஜர் ஸ்ரீரங்கம் வந்ததும் தமக்கு ஏற்பட்ட ஸ்தானத்துக்கு ஏற்ப அதிகாரங்களை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்று தோற்றியது. பெரியநம்பியிடம் இவர் உபதேசம் பெற்

றிருந்தும் இவர் வேறு குருக்களை நாடி மற்றைய சாஸ்திர விஷயங்களை அறிந்துகொள்ளும்படி நேரிட்டது. மந்திரார்த்தங்களைத் தெரிந்துகொள்ள இவர் வெகுநாள் திருக்கோட்டியூர் நம்பியிடம் நடந்து பார்த்தார். அவருக்குக் கருணை வாராதது கண்டு, இனிப் போகவேண்டுவதில்லை என்று தீர்மானிக்குந் தருணத்தில், ஆளவந்தார் சிஷ்யர்களால் தூண்டப்பட்டு, முடிவாக ஒருமுறை போவதாகத் தீர்மானித்தார். இம்முறை, குரு கருணை கூர்ந்து, பகவத்கீதா ஸார சுலோகத்தை எடுத்துரைத்து வெகு விஸ்தாரமாக உபதேசித்து, அதை அதிகாரிகளல்லாதவர்களிடம் சொல்லிவிடக் கூடாதென்று நிபந்தனை செய்தார். மந்திரார்த்தத்தையும், அதன் மூலமாக மனிதன் எளிதில் சீர்திருந்தி மோக்ஷம் அடையும் வழியையும் உணர்ந்ததும், உலகில் வீணே வழிதப்பி மதிமயங்கும் ஜனங்களுக்கு இதை வெளியிட்டு அவர்களைச் சிறப்படையும்படி செய்யவேண்டும் என்ற அடங்கா ஆவல் ராமானுஜருக்கு உண்டாகிவிட்டது. குருவாஞ்ஞை அந்த ஸமயத்தில் முற்றும் மறந்துபோய்விட, கருணை மிகுதியால் ராமானுஜர் அருகேயிருந்த கோபுரத்தின் மீதேறிக்கொண்டு உச்சஸ்வரத்தில் ஜனங்களுக்குக் கீதார்த்த ரஹஸ்யத்தை எடுத்து வெளியிட்டார். இதை அறிந்த குரு, இவரை அழைத்து விசாரிக்க "நான் செய்தது அபராதம்தான். தகுந்த தண்டனையைப் பெறத் தயாராய் இருக்கிறேன்" என, குரு "உனக்கு மீளா நரகம் இனிமேல் வரும், இங்கு ஒரு தண்டனையும் இல்லை" என, ராமானுஜர் "ஜனங்கள் துக்கம் நீங்கி மோக்ஷம் பெறுவது நிச்சயமானால், அவ்வாறு செய்த எனக்கு

நரகம் வந்தாலும் வரட்டும்" என்று மிகுந்த ஆர்வமை யுடன் சொன்னார். சிஷ்யனது ஆழ்ந்த கருணையைக் கண்டு குரு மகிழ்ந்து, அதையே ஓர் மதமாகக்கொண்டு ஸ்தா பிக்கலாமென்று அனுமதி கொடுத்தார்.

இந்த ஸமயத்தில் தமது ஸகோதர முறையிலிருந்த கோவிந்தபட்டர், யாதவப்ரகாசரோடு காசிக்குச் சென்று கங்கையில் ஸ்நானம் செய்யுங்கால், கையில் ஓர் லிங்கம் ஒட்டிக்கொண்ட நிமித்தமாகச் சைவராகி, காளஹஸ்தி யில் சிவபக்தராய் இருந்த விஷயம் இவருக்குத் தெரிய வந்தது. உடனே இவர் திருப்பதியில் இருந்த தமது மாமன் மூலமாகக் கோவிந்தபட்டரை வைஷ்ணவ மதத் திற்குத் திருப்பி, எம்பார் என்ற பேர்கொடுத்துத் தமக்கு ஸஹாயமாக வைத்துக்கொண்டார். இதன் பின்னர் ஆளவந்தார் பிள்ளையிடம், இவர் திருவாய்மொழி கற்றுக் கொண்டார். இந்தக் காலத்தில், ராமானுஜரது நிலை யைக்கண்டு சிலர் பொறாமைகொண்டு, அவர் பிக்ஷைக்கு வருங்கால் அன்னத்தோடு விஷம் கலந்திடஅவர் அதைத் தற்செயலாய் கண்டறிந்து, அதினின்றும் தப்பித்துக் கொண்டார். அன்று முதல் ராமானுஜர் பிக்ஷைக்குப் போவது நின்றுவிட்டது. மடத்திலேயே அவர் சாப் பாட்டுக்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் பின்னர் ராமானுஜர், யஞ்ஞமூர்த்தி என்ற ஓர் அத்வைத ஸன்யாஸியை வென்று, பின்னர் தமது சிஷ்யனான கூரத் தாழ்வாரது ஸஹாயத்தால் ப்ரஹ்ம ஸூத்ரபாஷ்யம் செய்து, அதைக் காஷ்மீர தேசத்து ஸரஸ்வதி பீடத்தில் அரங்கேற்றினார். அவ்விடத்தில்தான், இவருக்கு ஓர் ஹயக்ரீவ விக்ரஹம் பரிசாக அளிக்கப்பட்டது. இவ்

விடத்தில்தான் இவருக்குப் பாஷ்யகாரர் என்ற பெயரும், இவர் வியாக்யானத்துக்கு ஸ்ரீ பாஷ்யம் என்ற பெயரும் கிடைத்தது. தெற்கே நோக்கிவருங்கால், திருப்பதி வந்து அங்கிருந்த கோவில்,விஷ்ணுகோவில்தான், ஸுப்ரமண்யர் கோவில் அல்ல என்று ஸ்தாபித்தார். ஸ்ரீரங்கம் வந்ததும், இவர் சிஷ்யர் கூரத்தாழ்வாருக்கும், பகவத் அனுக்ரஹத்தால் ஒரு பிள்ளை பிறக்க, அதற்கு பராசரபட்டர் என்ற பெயரிட்டு, அவர் மூலமாக ஸஹஸ்ர நாமத்துக்கு ஓர் வியாக்கியானம் உண்டாக்கினார். தம் கூடவேயிருந்த பிள்ளான் என்ற ஒருவரிடம் திருவாய்மொழி விஷயமாக விருந்த ஞானத்தின் நுட்பத்தைக் கண்டு அவர் மூலமாகத் திருவாய்மொழிக்கு ஒரு வியாக்கியானம் ஏற்படுத்தினார். இப்படியாக ஆளவந்தார் குறைகள் மூன்றும் தீர்ந்தன.

இப்படி யிருக்கையில் குலோத்துங்க சோழன் என்ற ராஜன், பரமசிவத்திற்குமேல் பரதெய்வமில்லை என்ற கொள்கையைப் பரவச்செய்து, அதற்கு இணங்காதவர்களையெல்லாம் கடுமையாய்த் தண்டித்துவந்தான். ராமானுஜரையும் யழைத்து இதற்கு இணங்கும்படி செய்ய வேண்டும் என்று எல்லோரும் வேண்ட,அவர் சீக்கிரத்தில் வந்து சேரவேண்டும் என்ற உத்தரவும் பிறந்தது. ராமானுஜருக்கு ஏதாவது அபாயம் வருமென்று பயந்து அவர் சிஷ்யனான கூரத்தாழ்வாரும் வேறொருவருஞ்சோழராஜன் ஸபைக்குப் போக ஒப்புக்கொண்டு, ராமானுஜரைக் கிரஹஸ்த வேஷம் பூண்டு தப்பி ஓடிவிடும்படி வேண்டிக் கொண்டனர். அவ்வாறே அவர் காவேரிக்கரை யோரமாக மேற்கே சென்று, சாளக்கிராமம் என்ற ஊரில் தங்கி

னர். இங்கு இருக்குங்கால், இவர் நாமக்கட்டி ஆய்விட்டது. இன்னவிடத்தில் அது அகப்படும் என்று தெரியவில்லை.மிகுந்த துக்கத்துடன் ராமானுஜர் அங்கு உறங்குகையில், அருகாமையில் ஓர் பெரிய நாமக்கட்டியாலாகிய குன்று இருப்பதாக ஸ்வப்னம் கண்டார். அங்கு சென்று வெட்டிப்பார்க்க, நாமக்கட்டி அகப்பட்டதோடுங்கூட உள்ளிருந்து ஓர் கோயிலும் வெளியாயது. அதற்குத் திருநாராயணபுரம் என்று பெயர் கொடுத்தார். அங்கு வஸிக்குங் காலத்தில் டெல்லி பாதுஷாவின் அரண்மனையில் ராமப்ரியர் விக்ரஹம் இருப்பதாக ஸ்வப்னம் காண, மிகுந்த கஷ்டத்தின் பேரில் வடக்கே சென்று, அந்த விக்ரஹத்தைக் கொண்டுவந்து, திருநாராயணபுரத்தில் பிரதிஷ்டை செய்தார். இதற்குள் வைஷ்ணவர்களைக் கஷ்டப்படுத்திய சோழ ராஜன், தமது சிஷ்யரான கூரத்தாழ்வார் கண்ணை, அவர் கூறிய துடுக்கான பதிலுக்காகக் குத்தி விட்டதாகக் கேள்வியுற்று, ஓர் தூதனை அனுப்பி துக்கம் விசாரிக்கச் செய்தார். அவன் திரும்பி வருகையில், கொடிய சோழன் இறந்துபோன ஸமாசாரத்தையும் கொண்டுவந்தான். உடனே ராமானுஜர் அபாயம் நீங்கி விட்டதென்று கண்டு, ஸ்ரீரங்கம் திரும்பிவந்து அங்கு பன்னிரு ஆழ்வார்களது விக்கிரஹங்களையும் ஸ்தாபனஞ் செய்து அவைகளுக்குத் தகுந்த உத்ஸவங்கள் செய்யவும் ஏற்பாடு செய்தார். இதன் பின்னர், கோயில் தர்மகர்த்தனயிருந்த ஸ்மார்த்தனாகிய அமுதன் என்பவனை வைஷ்ணவத்திற்குத் திருப்ப, அவன் ராமானுஜ ஸ்தோத்ரமாக 108-பாடல்கள் பாடினான். அதையும் நாலாயிரப் பிரபந்தத்தோடு சேர்க்க அனுமதி பிறந்தது. இதன் பின்னர்,



ஸ்ரீமத் ராமாநுஜாசாரியர்

—108-ம் பக்கம் பார்க்க



ஸ்ரீ மத்வாசார்யர் த்வாரகையிலிருந்த கிருஷ்ண விக்ரஹத்தைக் காணுதல்

—119-ம் பக்கம் பார்க்

ஆழ்வார் திருநகரி முதலிய இடங்களைச் சுற்றிக்கொண்டு வருகயில், சிதம்பரத்திலிருந்த கோவிந்தராஜப் பெருமாள் விக்ரஹத்தைச் சைவர்கள் பெயர்த்துக் கடலில் எறிந்துவிட்டனர் என்று கேள்வியுற்று, அவ்விக்ரஹத்தைத் தேடி எடுத்துத் திருப்பதி வந்து அங்கே மலையடிவாரத்தில் அதை ஸ்தாபித்து, யாத்திரை செய்துகொண்டு ஸ்ரீரங்கம் வந்துசேர்ந்தார். தமக்கு முடிவுகாலம் வருவதை அறிந்து தமது சிஷ்யர்களுள் நால்வரிடம் தமது பாஷ்யம் முதலியவைகளை யெல்லாம் ஒப்புவித்து, பிள்ளானிடம் மாத்திரம் நாலாயிரப் பிரபந்தத்தையும் ஒப்புவித்தார். இப்பிள்ளானே இவருக்குப்பின் இவர் ஸ்தானத்துக்கு வந்தான். ராமானுஜர் பகவான் பாதாரவிந்தங்கள் சேருவதற்குமுன் இவரது விக்ரஹங்கள் மூன்று செய்யப்பட்டு இங்கும் ஸ்ரீபெரும்பூதூர், திருநாராயணபுரம் ஆகிய மூன்று இடங்களிலும் இவர் அனுமதியின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டன. இவ்வாறனைதும் இவர் 120-ம் வயதில் ஸித்தியடைந்தார்.

ஸ்ரீமத் ராமானுஜாசார்யர் வேதங்களில் காணப்படும் விசிஷ்டாத்வைதம் என்ற முடிவை எடுத்துத் தம் முன்னோர்கள் அனுஷ்டித்துத் தெளிந்தபடி உலகில் எல்லோரும் உணர்ந்து உய்யும் பொருட்டு அநேக க்ரந்தங்கள் மூலமாக வெளியிட்டு யுக்திகளைக்கொண்டு அதை ஸ்தாபித்தார். இதன்படி:—

(1) உலகில் மூன்று வஸ்துக்கள் உண்டு, அவையாவன: சித், (ஜீவாத்மா) அசித்து (உயிரற்றவைகளுக்கு ஆதாரம்) ஈச்வரன் பரமாத்மா (விஷ்ணு)

(2) இவைகளில் சித்துள்ளும் அசித்துள்ளும்

பரமாத்மா பரவிநிற்க அவைகள் பரம்பொருளுக்குத் தேஹம் போல வாகின்றன ;

(3) அசித்தொடு ஸம்பந்தப்பட, சித் அசுத்த மாகவிருக்கிற அணுவாக விருக்கிறது. இது பரமாத்மா கிருபையால் அசித்பந்தம் நீங்கிவிட்டால், நெருப்புப்பொறி நெருப்புப்போலிருப்பது போலவே, பரமாத்மாபோல ஆகி அவருடன் இருந்து ஸுகிக்கும். இதுவே மோக்ஷம் ;

(4) பகவானை அடைய அவரிடம் சரணம் புக வேண்டும், அப்பொழுது அவர் நமது ஆத்மாவைச் சுத்தப் படுத்தி மோக்ஷம் அளிப்பார்.

என்று ஸ்தாபித்தார்.

---

## 54. ஸ்ரீ மத்வாசாரியார்

**ஸ்ரீ மத்வாசாரியார்** என்பவர் உடுப்பி என்ற க்ஷேத்தி ரத்துக்கு அருகாமையில் உள்ள **பஜகக்ஷேத்திரம்** என்ற கிராமத்தில் ஸுமார் 750-வருஷங்களுக்கு முன் அவ தரித்தவர். இவர் வாயுவினது அவதாரம் என்று இவர் சரித்திரங்கள் கூறும். இவர் தாய் **வேதவதி**, தந்தை **மத்யகேஹர்**. இவர் இளமைப்பருவத்தில் மிகுந்த அற் புதமான திருவிளையாடல்கள் செய்தார். இவர் தகப்பனை ஒரு நாள் கடன்காரன் வந்து மறித்துக்கொள்ள, அவர்மிக தத்தளிப்பதைக் கண்டு, இவர் அவனை ஓர் புறம் அழைத் துச் சென்று, அருகிலிருந்த புளியங் கொட்டைகளை வாரி அவன் கையில் போட்டார். உடனே அவைகள் அவனுக்குக் கொடுக்கவேண்டிய தொகையளவு பொன்னாக மாறின. அவன் இந்தச் சங்கதியை ஊரிலுள்ளாருக்கு

வெளியிட எல்லோரும் மிகுந்த ஆச்சரியத்தை யடைந்து, இக்குழந்தையை ஓர் தெய்வீகக்குழந்தை என்று மதித்த னர். அநேக நாள் இக்குழந்தை காணுமற்போய் அதிவியப் பாக அகப்பட்டது. பின்னர், மத்வாது பால்ய லீலைகள் சற்று ஏறக்குறைய ஸ்ரீ கிருஷ்ணாரது பால்யலீலைகள்போல விளங்கும். இவர் தமது தகப்பனுரிட மிருந்தும், கிரா மத்திலிருந்த ஓர் ஆசாரியரிடமிருந்தும் கல்வி கற்ருர் எந்தக் காலத்திலும் இவர் அற்புதச் செயல்களைச் செய்வ துண்டு. இவர், தோழனது தீராத் தலைவலியைக் காதில் ஊதி உடனே தீர்த்தார். படிப்பு முடிந்த காலத்தில் இவர் தமது குருவுக்குக்கூட ஐதிரேய உபநிஷத்தின் ரஹஸ்யத்தை உபதேசித்துத் தமது விஷ்ணு பக்தியின் சிறப்பைக் காட்டினுர்.

இவருக்கு உபநயனமான பிறகு, ஓர் குருவைச் சென்று அடுத்தார். அதுமுதல் இவருக்கு ஸந்யாஸத் தில் இச்சை பிறந்தது. உடுப்பியிலேயே அச்யுதப்ரேக்ஷர் என்ற ஓர் ஆசாரியர் இவருக்குக் கிடைத்தார். அவரி டம் இவர் உபதேசம் பெற்று ஸந்யாஸம் வாங்கிக்கொள்வ தாகத் தீர்மானித்தார். இவ்விஷயம் மத்யகேஹருக்குத் தெரிந்ததும் பிள்ளையை வந்து பார்த்து, ஸந்யாஸம் வாங் கிக்கொள்ளலாகாதென்று புத்திமதி கூறினுர். அதற்கு அவர் இசையாது, பிடிவாதமாகவே இருந்தார். மத்ய கேஹர் தமக்குப் பிள்ளையிருந்தும், வயது காலத்தில் பயன்படாது போனதை வாய்விட்டுக் கூறி மிகவும் துக் கிக்க மத்வாது மனமும் இளகி, “தம்பி பிறக்கும்வரை நான் ஸந்யாஸம் வாங்கிக்கொள்வதில்லை” என்று வாக் களித்தார். அதற்கேற்பக் கொஞ்ச நாளில் தம்பியும்

பிறந்தான். உடனே மத்வர் ஸந்யாஸம் வாங்கிக்கொள்ளத் தாயினிடம் உத்தரவு கேட்டு வெகு தர்க்கத்தின்பேரில் அவளிடமிருந்து அநுமதி பெற்றுத் தமது குருவிடம் வந்து ஸந்யாஸம் வகித்துப் பூர்ணப்ரஞ்ஞர் என்னும் பெயர் பூண்டார். இவ்வாறு பூண்டதும், உடனே இவர் தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டார். போகும் வழியில் இவர் தெற்கே சென்று, விஷ்ணுமங்கலம் என்ற ஊரை அடைந்தார். அங்கு வாயு புத்திரனை வீமனைப் போல் பெருந்தீனிகள் தின்ன முடியும் என்றும், குறைந்த வஸ்துக்களை அதிகமாக்கும் திறன் உண்டென்றும் வெளிப்படுத்தினார். இக்காலத்திற்குள் இவருக்குச் சாஸ்திர விஷய ஞானமும், அதை எடுத்து விளக்கும் ஞானமும் தர்க்கத்தில் ஜயிக்கக்கூடிய ஞானமும் பூர்ணமாய் இவரிடம் ஏற்பட்டது. இவருக்குச் சுற்றிலுமிருந்த அத்வைத ஸித்தாந்தம், பொருத்தம் உள்ளது என்று படாமற்போக அவர் பொதுவாக அதைக் கண்டித்து வாதம் செய்துவந்தார். மற்றைய ஸித்தாந்தங்கள் யாவும் இவருக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. இப்படி இவர் வாதம் செய்துகொண்டு, திருவனந்தபுரம் வந்து சேர்ந்தார். அங்கு இவர் அப்பொழுதிருந்த சிருங்கேரி வித்யாசங்கரரை ஸந்திக்கும்படி நேர்ந்தது. அங்கு இவர்கள் இருவருக்கும் அரசன் முன்னிலையில் தர்க்கம் உண்டாக, ஒருவருக்கொருவர் இளைக்காது வெகு காலம் பக்ஷிப் பிரதி பக்ஷிகள் சொல்லிவந்தனர். இதில் ஒருவருக்கும் ஜெயம் என்பது ஏற்படாது, துவேஷம் மாத்திரம் ஸித்தித்தது. அன்று முதல் ஸ்ரீ மத்வாசாரியர் அத்வைதத்தை எல்லையின்றி இகழ்ந்து பேசவும், அதை

நிலை நிறுத்திய ஆதிசங்கரரை வாய்கூசாது குற்றங் கூறவும் கிளம்பி விட்டார். ஸ்ரீமத்வர் யாத்திரை செய்து கொண்டு இராமேசுவரம் வருங்கால், மறுபடியும் இவர்களுக்கு இம்மாதிரி தர்க்கம் உண்டாகி மனஸ்தாபங்கள் முதிர்ந்தன. இதனால் இந்த யாத்திரை முடிந்து ஸ்ரீ மத்வர் உடுப்பி வந்ததும், தாம் ஸித்தாந்தமாகக் கொண்டிருக்கும் துவைதத்திற்கு இசைய, பகவத்கீதைக்கு ஓர் வியாக்யானம் செய்தார். இதன் பின்னர் இவர் வடக்கு நோக்கி யாத்திரை செய்யப் புறப்பட்டார்.

போகும் வழியில், இவருக்கு அநேக கஷ்டங்கள் நேர்ந்தன. இவைகளை எல்லாம் லக்ஷ்யம் செய்யாது, இவர் நேரே ஹரித்வாரம் போய் அங்குக் கொஞ்சநாள் இருந்துவிட்டு அப்பால் பதரிகாச்ரமம் சென்று அங்கு ஓர் இடத்தில் தம் சிஷ்யர்களை யெல்லாம் நிறுத்திவிட்டுத் தாம் பாறை பாறையாகத் தாண்டி, வெகு வேகமாக வேதவியாஸர் ஆச்ரமம் சென்று அங்கு அவரிடமிருந்து நேரே உபதேசம் பெற்றுப் பின்னர் ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு வியாக்கியானம் செய்ததாக இவர் சரித்திரங்கள் கூறும். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, வங்காள தேசம் போய் அங்குத் தமது மதத்தை ஸ்தாபித்துவிட்டு ஜகந்நாத க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார். அங்கு வந்ததும் இவருக்கு முக்கியமான இரண்டு சிஷ்யர்கள் ஏற்பட்டனர்; அவர்களுக்கு முறையே ஸோபன்னபட்டர் என்றும், ஸாமி சாஸ்திரி என்றும் பெயர். இவர்கள் முதலில் ஸ்ரீ மத்வரிடம் தர்க்கம் செய்ய, வெகு விவாதத்தின் பேரில், முதலில் ஸோபன்ன பட்டரும், பின்னர் ஸாமி சாஸ்திரியும் இவருக்குச் சிஷ்யர்களானார்கள். அதில்

ஸாமி சாஸ்திரி ஸந்யாஸம் பெற்றதும் அவருக்கு நரகரி தீர்த்தர் என்று பெயரிடப்பட்டது. ஸ்ரீ மத்வாசாரியர் தெற்கே புறப்பட்டதும், நரகரிதீர்த்தரும் கூடவே புறப்பட்டார். அப்பொழுது அவரை நோக்கி "நீர் கலிங்க தேசத்தில் பரோபகாரமாகக் கொஞ்ச காலத்தைக் கழித்து அந்த அரசனிடம் இருக்கும் மூலராம மூலஸீதா விக்ரஹங்களை உடுப்பியில் கொண்டுவந்து சேர்ப்பீர்" என உத்தரவளித்தார். குருவைப் பிரிய மனமில்லாதவராய், நரகரிதீர்த்தர் கலிங்க தேசத்திலேயே தங்கிவிட்டார். அங்கிருந்த அரசன் சிறுவனா யிருந்ததால், அவன் தக்க பருவம் அடையும் வரை அவனுக்குப் பதிலாக நரகரி தீர்த்தரே அங்கு வெகுகாலம் ராஜ்யம் ஆளும்படி நேர்ந்தது. ஸோபன்னபட்டர், நரகரி தீர்த்தர் என்னும் இவர்களுடைய முயற்சியால் ஸ்ரீமத்வாது ஸித்தாந்தம் நன்றாகத் தெலுங்கு தேசங்களிலெல்லாம் வேர் ஊன்றியது.

மத்வர் உடுப்பி வந்ததும், அச்யுதப்ரேக்ஷர் என்ற தமது குருவுக்குத் தாம் வியாஸரிடம் கேட்ட அற்புத விஷயங்களை யெல்லாம் சொல்லித் தமது ஸித்தாந்தத்திற்கு அவரை இசையும்படிசெய்து தாம் எழுதிய ஸூத்ர பாஷ்யத்தையும் அவருக்குத் தெரிவித்தார். அவர் இவைகளை ஒப்புக்கொண்டு த்வைத ஸித்தாந்தத்தை அனுஸரிக்கலாயினர். இந்த ஸித்தாந்தத்தைப் பின்பற்றுபவர்கள் விஷ்ணுவினது ஆயுத முத்திரைகளைத் தேகத்தில் சூட்டிக் கொள்ள வேண்டும் என்று பின்னர் ஓர் நிபந்தனை செய்தார். அவ்வூரில் நாள்தோறும் எல்லோருக்கும் விடாது பகவத் விஷயங்களைப்பற்றி இவர் உபதேசித்து வந்தார். ஒருநாள் இவர் ஸமுத்திர ஸ்நானத்துக்குப் போயிருக்கை

யில் இவருக்கு ஸ்ரீகிருஷ்ணன்பேரில் துவாதச ஸ்தோத்திரம் ஒன்று செய்யவேண்டும் என்றபரபரப்பு உண்டாயிற்று. இந்தப் பரபரப்பின் மாதிரியால் அன்று உடுப்பியில் கிருஷ்ணபகவான் வந்து சேரப்போகிறார் என்னும் ஓர்வித எண்ணமும் உண்டாயிற்று. இவ்வெண்ணத்துடன் ஸ்நானம் செய்து பகவத்தியானம் செய்ய உட்கார்ந்தார். அப்பொழுது நடுவில் கண்ணைத்திறந்து நோக்கினார். உடனே எதிரில் துவாரகையிலிருந்து வந்துகொண்டிருந்த ஓர் கப்பல் தென்பட்டது. அது அலைகளின் வேகத்தால் கண்டபடி இழுக்கப்பட்டு வந்ததுபோல் தோற்றியது. அதில் இருப்பவர்கள் என்ன முயன்றும், அக்கப்பலைத் தடுத்து நடத்த முடியவில்லை. அக்கப்பலையும், கப்பல்காரர்களையும் காப்பாற்றத், தமது கையிலிருந்த சிறு துண்டை ஸ்ரீ மத்வர், கப்பலை அழைப்பதைப்போல், அசைத்தார். உடனே கப்பல் அபாயம் நீங்கிக் கரை வந்து சேர்ந்தது.

கப்பல் தலைவன் ஸந்தோஷம் அடைந்து மத்வரிடம் வந்து, ஏதாவது கைம்மாறு பெற்றுக்கொள்ளவேண்டும் என்று மிக வணக்கத்துடன் கேட்டுக்கொண்டான். உடனே மத்வர், கப்பலிலிருந்த பணம் முதலியவைகளைக் கவனியாது, "உங்கள் கப்பலில் இருக்கும் கோபிச் சந்தன கட்டிகளுள் பெரியவைகள் சிலவற்றைக் கொடுத்துவிடுங்கள்!" என்று கேட்டுக்கொண்டார். அவர்கள் அவ்வாறு செய்ய, கட்டிகளுள் பெரியதாயிருந்த ஒன்றைத் தமது அருகே கொண்டுவரச் சொன்னார். அக்கட்டியைக் கீழே இறக்கியதும் அது இரண்டாகப் பிளந்து விழுந்தது. அதனுள்ளிருந்து அழகான சிறியதோர் கிருஷ்ண விக்ரஹம்,

மத்தும் கையுமாய்த் தோன்றியது. உடனே மத்வர் பக்தி பாவசரானுர். இந்த விக்ரஹத்தை உடுப்பிக்குக் கொண்டு போய், ஓர் கோயில் கட்டி அங்கு ஸ்தாபித்து அதில் பூஜாவிதிகளை ஏற்படுத்தி அவைகளை மிகுந்த சிரத்தையுடன் தாமே அனுஷ்டித்து வந்தார். அவர் காலம் முதல் இக்கோவில் மிகப் பிரபலமா யிருக்கிறது.

இதன் பின்னர் மத்வர், யாகங்களில் உயிர்ப்பிராணிகளைக் கொல்லக் கூடாதென்றும், அவைகட்குப் பதிலாக மாவால் செய்த உருவங்களை வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் ஏற்பாடு செய்து யாகங்களைச் சீர்திருத்தினுர். தாம் இல்லாத காலங்களிலும், தமக்குப் பிற்காலத்திலும் கிருஷ்ணன் பூஜை உடுப்பியில் தவருது நடந்து வருவதற்காக எட்டு மடங்கள் ஏற்படுத்திப் பூஜை செய்யும் முறைமையும் ஏற்படுத்தினுர். அம்மடங்கள் இக்காலத்திலும் இருக்கின்றன. பூஜையும் தவருது நடந்து வருகிறது.

இவ்வாறு உடுப்பியில் சீர்திருத்தங்கள்செய்துவிட்டு மத்வர் இரண்டாம்முறை பதரிகாசிரமம் நோக்கிப் புறப்பட்டார். போகும் வழியில் ஓர் அரசன் தன் எதிரில் ஜனங்களை யெல்லாம் பொதுநன்மைக்கு வேண்டிய வேலைகளைச் செய்வதில் கட்டாயப்படுத்தி வேலை வாங்கி வந்தான். மத்வரையும் அவன் அவ்வாறே செய்ய, அவர் அவனைச் சற்று உற்று நோக்கி, வேலை செய்யும்படி ஏவினுர். அரசன் மெய்ம்மறந்து வேலை செய்யத் தொடங்க, மத்வர் ஸமயம் பார்த்துச் சிஷ்யக் கூட்டங்களோடு தப்பித்துக்கொண்டு யாத்திரை செய்யப் புறப்பட்டார். வழியில் இவர் துருக்க ராஜாக்களைப் பார்க்க வேண்டி

நேரிட,அவர்களிடத்தில் துளுக்கிலேயே பேசி அவர்களைச் சந்தோஷப்படுத்தி அநேகவித அபாயங்களிலிருந்து தப்பித்துக்கொண்டார். முன்னர் சென்றபடி, மறுபடியும் வியாஸரிடம் போய், எட்டு ஸாளக்கிராமங்கள் பெற்று மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் என்ற ஓர் நூலையும் செய்ய அநுமதி பெற்றார் என்று அவர் சரித்திரங்கள் கூறும். அநேகவித அற்புதச் செயல்களைச் செய்துகொண்டும், துவைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்துக்கொண்டும் மத்வர் உடுப்பி வந்து சேர்ந்தார்.

மத்வர் இவ்வாறு ஜயம்பெற்றுத் தமது மதத்தைப் பரவச்செய்து வருங்காலத்தில் சிருங்கேரி மடத்தில் அப்போதிருந்த பத்மதீர்த்தர் என்பவருக்கு, மத்வ மதத்தை எப்படியாவது பரவ ஒட்டாது தடுக்கவேண்டுமென்றஎண்ணம் உண்டாயிற்று. இவருக்கு முன்னிருந்த ஆசாரியர் வித்யாசங்காருக்கும், மத்வருக்கும் திருவனந்தபுரத்தில் நேர்ந்த மனஸ்தாபங்கள் இவருக்குத் தெரிந்திருந்தது. ஆதலால் மத்வ மதத்தைக் குற்றங் கூறிப் பிரசங்கிக்க அநேகரை ஏற்படுத்தித், தாமும் மத்வரது மத விஷய புத்தகங்களைத் தந்திரமாகக் கொள்ளையிட ஏற்பாடு செய்தார். புத்தகங்கள் காணமற் போனதும், மத்வர் அருகிலிருந்த ஜயஸிம்ஹன் என்றஅரசன் ஸஹாயத்தால் புத்தகங்களைப் பெற முயற்சித்தார். இதன் பின்பு இவர் விஷ்ணுமங்கலம் என்ற ஊரில் உபந்யாஸம் செய்துகொண்டிருக்கையில் திருவிக்ரமர் என்ற ஓர் பெரிய பண்டிதர் இவருக்குச் சிஷ்யராக ஏற்பட்டார். இங்குதான் ஜயஸிம்ஹனிடமிருந்து மத்வர் தமது புத்தகங்களை நேரிடப் பெற்றது. திருவிக்ரமர் மத்வருக்குச் சிஷ்யரானதும் அவரால்

மத்வஸித்தாந்தம் மிகவும் பரவ, அநேகர்கள் அதை அங்கீகரித்தனர். இவரது வேண்டுகோளின் பேரில், மத்வர் ப்ராஹ்ம ஸூத்திரத்திற்கு ஓர் விஸ்தார வியாக்யானம் செய்தார். இந்தத் திருவிக்ரமரது பிள்ளையாகிய நாராயணாசாரியர் பின்னர் மத்வரது சரித்திரத்தை **மத்வவிஜயம்** என்ற காவ்ய ரூபமாகச் செய்தார்.

இப்படியிருக்க, ஸ்ரீ மத்வரது தந்தையான மத்ய கேஹர் சாஸ்திர நெறி தவறாது ஒழுங்காக வாழ்ந்துவந்து முதிர்ந்த வயதில் பகவான் பாதாரவிந்தங்களைச் சேர்ந்தார். கொஞ்சநாளில் அவர் தாயும், அவள் கணவனைப் பின் தொடர்ந்தாள். மத்வரது தம்பி, தாய் தகப்பனுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களை ஒருவாறு செய்து, மத்வர் இருக்குமிடம் வந்து ஸங்கதிகளை யெல்லாம் சொல்லித் தமக்கு ஸந்யாஸம் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். இதைக் கேட்டதும் மத்வர், தம்பியை நோக்கி "இன்னும் செய்ய வேண்டிய கடன்களைச் செய்து முடி, நான்கு மாஸம் கழித்துப் பார்த்துக் கொள்வோம்" என்று உத்தரவளிக்க, தம்பியும் அவ்வாறே யிருந்தனர். நான்குமாதம் கழிந்ததும், மத்வரே பஜகக்ஷேத்திரம் சென்று தம்பிக்கு ஸந்யாஸம் கொடுத்து விஷ்ணு தீர்த்தர் என்ற பெயரையும் கொடுத்தார். பின்னர் இவரை உடுப்பியில் இருந்த எட்டு மடங்களுள் ஒன்றுக்கு அதிபதி யாக்கினார்.

மத்வர் லோகோபகாரமாக வாதம் செய்துவந்தார். அவர் தம்பியோ, ஸந்யாஸ முறைமைப்படி உலகினின்றும் ஒதுங்கி ஸந்யாஸ ஒழுங்கை எல்லோருக்கும் அநுஷ்டித்துக் காட்டினார். இதன் பின்னர் மத்வர்

தென்கன்னடம், மைசூர் முதலிய இடங்களுக்கு யாத்திரை சென்று, தாம் வாயுவினுடைய அம்சம் என்பதைத் தமது பலத்தின் சிறப்பு முதலியவைகளால் வெளிப்படுத்தினார். இந்த யாத்திரை முடிவில் நரகரி தீர்த்தர் கலிங்க தேசத்தில் வெகுகாலம் அரசாண்டு அரசனுக்குத் தகுந்த வயது வந்ததும் அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து அவனிடமிருந்து ராமர், ஸீதை என்பவர்களுடைய விக்ரஹங்களைப் பரிசாகப் பெற்று, உடுப்பி வந்து சேர்ந்தார். மத்வர் அவைகளை மிகுந்த பக்தியுடன் பெற்றுப் பூஜையில் சேர்த்துக் கொஞ்சநாள் ஆராதித்து வந்தார். இப்படி யிருக்கையில், ஸ்வாமி தமது 79-ம் வயதில் ஓர் நாள் பூஜை எல்லாம் முடித்துவிட்டு ஐதிரேய உபநிஷத்தைத் தமது சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்துகொண்டு ஸ்ரீமத்வர், பகவான் பாதார விந்தங்களை யடைந்தார்.

ஸ்ரீ மத்வாசாரியர் வேதங்களில் காணப்படும் துவைதம் என்ற முடிவை எடுத்துத் தம் முன்னோர்கள் அனுஷ்டித்துத் தெளிந்தபடி உலகில் எல்லோரும் உணர்ந்து உய்யும்பொருட்டு அநேக க்ரந்தங்கள் மூலமாக வெளியிட்டு யுக்திகளைக் கொண்டு அதை ஸ்தாபித்தார். இதன்படி:—

(1) உலகில் மூன்று வஸ்துக்கள் உண்டு. இவைகள் சித் (ஜீவாத்மாக்கள்) அசித் (உயிரற்றவைகளுக்கு ஆதாரம்) ஈச்வரன் (பரம்பொருள்: விஷ்ணு) இவைகள் எப்பொழுதும் வேறாகவே இருக்கும்;

(2) ஜீவாத்மாக்கள் பல; அவைகளுள் முக்தஜீவர்கள், பத்த ஜீவர்கள், விடுபடக்கூடிய ஜீவர்கள் என்ற மூன்று பாகங்கள் உண்டு.

(3) ஜீவர்கள் அசித்தின் ஸம்பந்தங்கள் நீங்கி விஷ்ணுவிடம் சென்று ஸதா அவரை யஜமானனாகவும் தன்னை அவர் ஊழியக்காரனாகவும் எண்ணியிருப்பதே மோக்ஷம் ;

(4) இது பகவத் பக்தி மூலமாகவே பகவத் கிருபை உண்டாகி நமக்குக் கிடைக்கவேண்டும். நாம் பகவானுக்கு ஊழியனாக எண்ணி ஈடுபடுவதே பக்தி என்னப்படும்.

என்று ஸ்தாபித்தார்.

91302(444)

# FOUNTAIN PENS

WE are Direct Importers of High Class Fountain Pens, etc., from the Best Makers in the Continent and America and are therefore in a position to offer them at cheap rates ::

**Pens carefully tested before despatch ::**

**Pens not approved can be exchanged.**

**Complete Satisfaction Guaranteed**

SOME OF THE FOUNTAIN PENS

| | Rs. | A. | | Rs. | A. |
|---|---|---|---|---|---|
| Waterman's Ideal ... | 7 | 14 | Coronation Safety ... | 4 | 8 |
| Waterman's Safety... | 9 | 12 | Coronation ... | 3 | 0 |
| Waterman's Pumpfilling ... ... | 9 | 12 | Caltonion ... | 2 | 12 |
| Excel Fountain Pen... | 5 | 0 | Supplies ... | 2 | 8 |
| University ... | 5 | 8 | Express ... | 3 | 0 |
| Durbar ... ... | 3 | 12 | STYLOS | | |
| Gaekwar... ... | 3 | 12 | Red Spring ... | 2 | 8 |
| Improved Fortune ... | 3 | 8 | Red Giant ... | 2 | 12 |
| Standard ... | 3 | 8 | Red Gem ... | 2 | 4 |
| Royal ... ... | 4 | 0 | Coronation ... | 2 | 4 |
| Fortune No. 3 ... | 4 | 8 | | | |

Several other sorts of Pens, Fountain Pen Inks, Spare Nibs and Parts are also available.

**The General Supplies Co.**

**MYLAPORE, MADRAS**

# சத்தியவல்லி

## ஓர் சிறந்த தமிழ் நாவல்

மிஸ்டர் ஆர். பி. குழந்தைசாமிப் பிள்ளை, பி. ஏ., எல். டி., அவர்கள் எழுதியது. சென்னை சர்வகலாசாலை முக்கிய பரீக்ஷக ரான ராவ் ஸாஹேப் மிஸ்டர் T. ராமகிருஷ்ண பிள்ளை, பி. ஏ., அவர்கள் எழுதிய சிறந்த முகவுரையுடன் கூடியது. விலை அணு **12**.

*ஸத்யமே ஜயம் எனும் படிப்பினையையும், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் எனும் நீதியையும் கற்பிக்கிறது. தர்மஸங்கடங்களிலும், கஷ்டத்திலும், நன்மையையே கைபிடிக்கவேண்டும் எனும் நிலைமையையும் ஆழ்ந்த உணர்வோடு காட்டப்பட்டிருக்கிறது. தவிர, அக் காலங்களில் மனம் அலைபாயும் விதத்தை விவரிப்பதும் வியக்கத்தக்கது. வாக்கின் நடையும், பாஷையின் போக்கும், யுக்தியின் ஸாமர்த்தியமும், கதையின் தாட்டியும், மனதை யிழுக்கும் வன்மையும் எவரும் வியக்கத்தக்கவை.*

*இப்புத்தகம், கவர்ன்மெண்டு டிரெயினிங் ஸ்கூல்களுக்கு டெக்ஸ்டு புக்காக ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன், அநேகம் பாடசாலைகளிலும்* 3, 4, 5-*ம் பாரங்களுக்குப் பாடப்புத்தகமாக வைத்து நடத்தப்பட்டு வருகிறது. மிகவும் எளிய நடையில் எழுதப்பட்டது.* அவசியம் ஒவ்வொரு பெண்டிரும் வாசிக்கவேண்டிய புத்தகம்.

### இப் புத்தகத்தைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்.

*The Standard*:—* * Situations are contrived with skill and the plot is constructed in an appealing way.

*The Hindu*:—* * *We commend the book for ladies and boys.*

*Rev. D. Devaprian, B.A., L.T.,* Head Master, L. M. High School Shiyali:—Your Tamil Novel *is simply excellent in matter and style. It deserves to be introduced as an extra reading book in Schools.*

சுதேச மித்திரன்:—* * * *கதாநாயகியான சத்தியவல்லி எவ்வளவோ கஷ்ட தசைக்கு வந்துங்கூடத்* தனது சத்யத்தையும், பிதாவின் ஆக்ஞையையும் *தளரவிடாமல் பாதுகாத்த விதத்தை நூலாசிரியர் மிக நன்ருய் எடுத்துச் சொல்லுகிறார்.*

பூர்ண சந்திரோதயம்.—* * * பெண்பாலார் இப் புத்தகத்தை வாசிப்பார்களாகில் மனத்தூய்மை எய்துவார்கள். நன்மதியும் பெறுவார்கள்.

---

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

# LESSONS from GEOLOGY

## பூதத்வ போதினி

சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜ் உதவிபோதகரான Mr. எம். ஆர். சுப்பிரமணியம், பி.ஏ., எல்.டி. அவர்கள் எழுதியது. அநேகம் படங்களுடன் கூடியது.

காலிகோ பயிண்டு அணா 8.
ராப்பர் பயிண்டு அணா 6.

CONTENTS—பொருளடக்கம்

1. The Earth and its crust—பூமியும் அதன் மேற்பரப்பும்.
2. Rocks and their classification.—மலைகளும், அவைகளின் வகுப்புகளும்.
3. Fossils—சிலா ரூபங்கள்.
4. Sedimentary and Aqueous rocks—வண்டல்களாலாகிய அல்லது நீர் ஸம்பந்தத்தாலாகிய மலைகள்.
5. Clayey rocks and coal—மண்மலைகளும் நிலக்கரியும்.
6. Structure of Aqueous rocks.—நீர் ஸம்பந்தத்தாலாகிய மலைகளின் அமைப்பு.
7. The earth movements and faults—பூமி அசைவும் படைகளின் களங்கங்களும்.
8. Denudation of rocks in tropical regions—உஷ்ண பிரதேசங்களில் மலை உரிதல்.
9. Denudation of rocks in temperate regions--ஸமசீதோஷ்ண தேசங்களில் மலை உரிதல்.
10. Denudation of rocks in cold regions—குளிர் தேசங்களில் மலை உரிதல்.
11. Volcanoes—எரிமலைகள்.
12. Volcanic rocks—எரிமலை ஸம்பந்தமான மலைகள்.
13. Granitic rocks—கருங்கல் மலைகள்.
14. Metaphorphic rocks—உருவம் மாறின மலைகள்.
15. Diamond, Coal and Gold in India.—இந்தியாவிலுள்ள வஜ்ரமும், நிலக்கரியும், பொன்னும்.

சில முக்கிய அபிப்பிராயங்கள்

**The Madras Mail.**—* * The book is well adapted for introduction in Elementary Schools.

**H. Narayana Row, Esq., M.A., F.G.S.,** Lecturer in Geology, Presidency College, Madras.—* * *I have no doubt that the book will supply a real want* and I hope it will be largely used in Secondary schools and especially teachers.

**The Hindu.**—* * We ar sure the pupils of the Elementary and the Secondary Schools and especially the teachers of the Elementary and the Training Schools *will be highly benefited by this book.*

---

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.

# Our Tamil Publications

## Indispensable for every Indian Home

| | | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| * | ஸ்ரீராமாயண வினாவிடை—ஸப்தகாண்டங்களும் | | | 0 | 10 |
| | ஸ்ரீ மஹாபாரத வினாவிடை | 1-ம் பாகம் | மஹாபாரதம் | 0 | 12 |
| * | ஸ்ரீ மஹாபாரத வினாவிடை | 2-ம் பாகம் | 18-பர்வங்கள் | 0 | 12 |
| | ஸ்ரீ மஹாபாரத வினாவிடை | 3-ம் பாகம் | பூராவும். | 0 | 12 |
| * | ஸ்ரீமத் பாகவத வினாவிடை | 1-ம் பாகம் | பாகவதம் | 1 | 0 |
| | ஸ்ரீமத் பாகவத வினாவிடை | 2-ம் பாகம் | பூராவும் | 1 | 0 |
| * | ஆர்யமத உபாக்யானம் | 1-ம் பாகம் | 14-படங்களுடன் | 0 | 4 |
| | ஆர்யமத உபாக்யானம் | 2-ம் பாகம் | ஷை | 0 | 6 |
| | சத்தியவல்லி—ஒரு சிறந்த கற்பனைக் கதை | | | 0 | 12 |
| | நளோபாக்யானம்—பண்டித நடேச சாஸ்திரியாரால் மொழி பெயர்க்கப்பட்டது. படங்களுடன் ... | | | 0 | 12 |
| | நீலி வசீகரம்—ஷேக்ஸ்பியர் நாடகத்தின் தமிழ் அமைப்பு | | | 0 | 8 |
| * | இயற்கை அற்புதங்கள்—படங்களுடன் | | | 0 | 8 |
| | பூதத்வ போதினி—புதிய பதிப்பு—காலிகோ பயிண்டு | | | 0 | 8 |
| | ,, ,, ராப்பர் பயிண்டு | | | 0 | 6 |
| | திரௌபதி—(இந்திய ஸ்திரீ ரத்னங்கள்—நெ. 1) படங்களுடன் | | | 0 | 8 |
| | சகுந்தலை (ஷை ,, —நெ. 2) ஷை | | | 0 | 4 |
| | கிரிஸெல்டா—புதிய பதிப்பு ... ... | | | 0 | 3 |
| | பிரபாவதி ... ... ... | | | 0 | 4 |
| | சந்திரசேகரன், மஹேச குமாரசர்மா மொழிபெயர்ப்பு ... | | | 0 | 8 |
| | ராஜம் அய்யர் சரிதை ... ... ... | | | 0 | 8 |
| | அம்புஜா | | சுவையுள்ள சிறிய கதைகள் | 0 | 2 |
| | ராமநாதன் | | | 0 | 2 |
| | ராஜசேகரன் அல்லது கடனின் கேடு | | | 0 | 2 |
| | திருமயிலைச் சிறப்பு, படங்களுடன் ... ... | | | 0 | 2 |
| | சற்குண சந்திரன்—ஒரு சிறந்த கற்பனைக்கதை ... | | | 0 | 10 |
| | பஞ்ச தந்திரம்—சுத்தமான பதிப்பு ... ... | | | 0 | 4 |
| | மோஹனாங்கி.—மிகச் சிறந்த தமிழ் நாவல் ... | | | 1 | 0 |

குறிப்பு.—வியாபாரிகளுக்கும், ஜாஸ்தியாய் காப்பிகள் வாங்குவோருக்கும் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

**ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்.**

*** Approved by the Text Book Committee**

Dr. V. SWAMINATHAIYAR LIBRARY